Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வானொலியும் மகளிர் நிகழ்ச்சிகளும்

வி.அநுராதா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

வானொலியும் மகளிர் நிகழ்ச்சிகளும் — வி. அநுராதா

oundatio
urukul K

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வானொலியும்
மகளிர் நிகழ்ச்சிகளும்

100037

DONATION

Presented Free of Cost
with compliments from the
Central Institute of Indian Languages
(Govt. of India) MYSORE-570 006"

வி. அநுராதா, எம்.ஏ., எம்.ஃபில்.,

பாலமுருகன் பதிப்பகம்
258, பாரதியார் தெரு, ஜெய்ஹிந்த்புரம்
மதுரை-625 011.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற் பதிப்பு : நவம்பர் 15, 1993

பதிப்புரிமை : ஆசிரியைக்கு

விலை ரூ. 14

நூலகக் குறியீடு : 31 B9 X [P]
N3

Title : Vanoliyum Makalir Nikalchikalum,

Authoress : V. ANURADHA, M.A., M. Phil.,

Language : Tamil

Edition : First 15th. November 1993.

Pages : 112

Publisher : Balamurugan Pathippakam
258, Bharathiyar Street,
Jaihindpuram, Madurai-625 011.

Printer : Malligai Printers
Vadipatti-624 218.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

தகவல் தொடர்புக் கருவிகள் விரைவாகப் பெருகி வரும் யுகம் இது. இந்த யுகத்தில் எல்லாத் தரப்பு மக்களும் எளிதில் பயன்படுத்தும் கருவி வானொலி. ஆதலால், எல்லாப் பிரிவு மக்களுக்கும் செய்திகளை அறிவித்தலும், அவர்களுக்கு அறிவூட்டலும், அவர்களை மகிழ்வித்தலும் ஆகிய பணிகளை வானொலி செய்ய வேண்டியுள்ளது. ஒருமுறை நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து ஒழுங்குபடுத்தினால் மட்டும் போதாது; புதுப் புதுத் திட்டங்களை அவ்வப்போது அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். வானொலி நிகழ்ச்சிகள் உயிரோட்டத்துடன் விளங்க இது மிக அவசியமாகிறது.

பெண்கள், தொழிலாளர், சிறுவர்கள், விளையாட்டு வீரர்கள் முதலான பல்வேறு பிரிவினர் பற்றிய நிகழ்ச்சிகள் குறித்த திறனாய்வும், அந்நிகழ்ச்சிகளை மேம்படுத்துவது பற்றிய கருத்துரையும் நூல்களாக வெளிவரவேண்டும். ஒலிபரப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கும் இந்நூல்கள் பயன்படும். குறிப்பாகத் தகவல் தொடர்புத் துறை பயிலும் மாணவர்களுக்கு இவை இன்றியமையாதவை.

அவ்வகையில் பெண்களுக்கான வானொலி நிகழ்ச்சி களைப் பற்றி இந்நூல் கூறுகின்றது. அனைத்திந்திய வானொலியில் மகளிர் நிகழ்ச்சிகள் எவ்வாறு இடம்பெறு கின்றன என்ற முழு அளவு ஆராய்ச்சிக்கு, மதுரை வானொலி நிலைய மகளிர் நிகழ்ச்சிகள் பற்றிய இந்த ஆய்வு மாதிரிக்களமாக நின்று உதவும் என நம்புகிறேன். ‘ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்றாற் போல இந்த ஆய்வின் முடிவுகள் வானொலி நிகழ்ச்சிகளின் தரம் பற்றிய மதிப்பீடாக அமையும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எம்.ஃபில். பட்டத்திற்கான இந்த ஆய்வுக்கு வழி காட்டியாக அமைந்தவர் பேராசிரியர் டாக்டர் தே. ஆண்டியப்பன் அவர்கள். அவர்கள் இந்த நூலுக்குச் சிறந்த அணிந்துரையும் வழங்கினார்கள். அவரது அன்பு உடைமைக்கு நன்றி பாராட்டுகிறேன்.

புதிய புதிய துறைகளில் தமிழ்நூல்கள் வெளிவர வேண்டும் என்ற ஆர்வத்துடன் உழைத்து எழுதிவரு கின்றவரும், அதே நோக்கில் இந்நூல் அச்சேற உதவிய வரும் ஆகிய என் தந்தையார் டாக்டர் அ.விநாயகமூர்த்தி அவர்களுக்கும், எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் என் தாயார் திருமதி து.மு. கனகவல்லி அவர்களுக்கும் என் நன்றி உரியது.

இந்த நூலை நன்முறையில் வெளியிடும் பாலமுருகன் பதிப்பகத்தாருக்கும் அச்சிட்ட மல்லிகை அச்சகத்தாருக்கும் மிக்க நன்றி.

15.11.1993. - வி. அநுராதா.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாக்டர் தே. ஆண்டியப்ப பிள்ளை
பேராசிரியர் - தலைவர்,
இலக்கணத் துறை, தமிழியற்புலம்.
மதுரை - காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

14.11.93.

அணிந்துரை

மதிப்புரை வழங்கும்போது, நூலின் அமைப்பு சிறப்பு உழைப்பு ஆகியவற்றை மதிப்பீடு செய்யவேண்டும். ஆனால் அணிந்துரையில் அவற்றைக் குறிப்பால் உணர்த்திப் பாராட்டினால் போதும்.

பொதுவாக ஆர்வமும் ஆள்வினையும் ஆய்வுக்குத் தேவை. ஆர்வம் அறிவுப்பரப்பை விரிவுபடுத்தும்; ஆள்வினை அதனை ஆழப்படுத்தும். அண்மைக் காலத்தில் தமிழ் ஆய்வு, இலக்கணம் இலக்கியம் என்று நின்று விடாமல், இதழியல், நாட்டுப்புறவியல், ஒப்பியல், தகவல் தொடர்பியல் என்றெல்லாம் வேர்விட்டு வளர்வதைக் காண்கிறோம். அவற்றுள் தகவல் தொடர்பியலுக்கு ஒரு தனித்தன்மை உண்டு. உலகத்துச் செய்திகள் யாவும் ஊர்ச்செய்திகள்போல் மாறுவதற்குக் காரணம் தகவல் தொடர்பின் வளர்ச்சியே ஆகும். தொலைக்காட்சி, திரைப் படம், நாளிதழ், வானொலி ஆகியவை அன்றாடம் தகவல் அளிக்கும் நல்ல துணைக்கருவிகள்.

''கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே''
(3.6.27)

என்பது தொல்காப்பியம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐம்புலனில் கண்ணும் செவியும் கலைவாழ்வைப் படைப்பன. கலைக்கோட்பாட்டை வகுப்போர் "We can formulate a theory that all the arts depend upon two senses hearing and seeing only" என்பர். தொலைக்காட்சி கண்ணிற்கு விருந்தளிக்கும் கலைச்சாதனம். வானொலி செவிக்கு விருந்தளிக்கும் கலைச்சாதனம். இவையிரண்டும் உணர்வுடை மாந்தர் உள்ளுணர்வைத் தூண்டுவன. உணர்த்தல் - உணர்தல் என்ற இருநிலையில் உள்ள இயக்கம் தெளிவுபடுமானால் நன்னயம் என்ற இரசமும், பொருள்கோள் என்ற தொனியும் புலப்படும். எனவே இரச தொனியோடு கருத்துகள் வெளிவந்து நெஞ்சம் கவர இக் கருவிகள் பெரிதும் உதவும்.

அவற்றுள் வானொலியின் பங்கை ஆராய முன் வந்தார் செல்வி. அநுராதா. மதுரை வானொலியை ஆய்வுத்தளமாக அமைத்துக் கொண்டு மகளிர் நிகழ்ச்சி களின் பயன்பாட்டை ஆராய்கிறார். நிலையத்தார், நேயர், தாம் என்னும் மூன்று கோணங்களிலும் செய்திகளைத் தருவது நிறைவளிக்கிறது. பேட்டியின்போது சுவையான தகவல்களும் சூடான செய்திகளும் கிடைப்பதுண்டு; நகர்ப் புற மகளிர் நிகழ்ச்சியில் அன்றாட வாழ்வும் அலுவலக வாழ்வும் அலசப்படும்; கிராமப்புற மகளிர் நிகழ்ச்சியில் புதுமைகள் இல்லை— என்று சுட்டிக்காட்டிக் குழந்தை வளர்ப்பு, தடுப்பூசி, குடும்பக்கட்டுப்பாடு என்பவற்றைக் கிளிப்பிள்ளை போல் எடுத்துரைப்பதை நினைவுபடுத்தி, நியாயப்படுத்தும் காரணங்களையும் ஆராய்வது சிறப்பு. உரை, உரைச்சித்திரம், பேட்டி, கலந்துரையாடல், பட்டி மன்றம், பல்சுவை நிகழ்ச்சி, பாடல், நாடகம் என்னும் நிகழ்ச்சிகளை, நேரஒதுக்கீடு, பயன்பாடு, புலப்பாட்டு முறை, நிறைகுறைகள் என்னும் நோக்கோடு விமர்சிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதில் துலாக்கோலின் துல்லியம் தென்படும். நல்லவற்றைப் பாராட்டி, தீமைகளை அடக்கத்தோடு எடுத்துரைத்துச் சீர்படுத்தும் முறைகளையும் சிந்திப்பது அவரது ஆய்வின் வளர்ச்சிப் போக்கை நமக்குச் சுட்டிக் காட்டும்.

'தெரிந்து வினையாடல்' என்ற பகுதியில் திரு- வள்ளுவர்,

''நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த

தன்மையால் ஆளப் படும்'' (511) என்பார். 'நலம்புரிந்த தன்மையால் **ஆயப்படும்**' என்று எழுதியிருந்தாலும் அக் கோட்பாடு ஆய்வாளர் அனைவருக்கும் நிச்சயம் பொருந்திவரும். செல்வி வி. அநுராதாவின் ஆய்வுக் கண்ணாடி சிறியது ஆயினும் நுண்ணியது; எடுத்துக்காட்டும் விஷயங்களும் பெரியவை. அன்னாரின் முயற்சி கன்னி முயற்சி. அது வளர்ந்து மணம்கமழ எனது வாழ்த்துகள்.

இவை,

டாக்டர் தே. ஆண்டியப்பன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

1. தோற்றுவாய் 1

2. வானொலியும் வளர்ச்சித் தொடர்பியலும் 6

3. மகளிர் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் 22

4. மகளிர் நிகழ்ச்சிகளின் வடிவம் 35

5. மகளிர் நிகழ்ச்சிகளின் மொழிநடை 48

6. நேயர்களின் கணிப்பில் மகளிர் நிகழ்ச்சிகள் 63

7. ஆய்வு முடிவுகள் 81

பின்னிணைப்புகள்

(1) மகளிர் நிகழ்ச்சிகள் பற்றிய வினாநிரல் 86

(2) நிகழ்ச்சித் தயாரிப்பாளருடன் ஒருபேட்டி 89

(3) கலைச்சொல் – விளக்கம் 94

(4) துணை நூற் பட்டியல் 101

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. தோற்றுவாய்

வானொலி, தான் தோன்றிய நாள் முதலாகவே மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மகளிருக்கு அது ஆற்றும் பணி என்ன என்பதையும் வானொலியில் மகளிர் நிகழ்ச்சிகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதையும் இந்நூல் கூறுகிறது.

இந்திய மக்கள் தொகையில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பங்கு வகிக்கின்றனர். அவர்கள் முன்னேற்றத்திற்குத் தகவல் தொடர்புக் கருவி என்ற முறையில் வானொலி ஆற்றும் பங்கு என்ன என்பதைக் காண்பதும், வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகள் எந்த அளவிற்கு மகளிரால் கேட்கப்படுகின்றன என்பதைக் காண்பதும் இதன் நோக்கமாகும். இவ்வாய்வில் உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையும், சர்வே முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேயர்களால் நிரப்பி அனுப்பப்படுகின்ற சோதனைத் தாள்களை ஆராய்ந்து, சாதனங்களையும் நிகழ்ச்சிகளையும் அவை மக்களிடம் ஏற்படுத்தும் தாக்கங்களையும் காணும முறை, 'ஆய்வுச் சோதனை' என்று வழங்கப்பெறும். அத்தகைய சோதனை இந்த ஆய்வுக்கு மேற்கொள்ளப்பட்டது வினாநிரலும் பேட்டியும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தகவல்தொடர்புக் கருவிகள் மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றுபட்டு வருகின்ற இந்நாளில் மகளிருக்காக வானொலி ஆற்றிவரும் பணியை இதனால் அறிய இயலும்.

ஒரு நிகழ்ச்சித் தொடரின் தொடர்ந்த வெளியீடுகளை /ஒலிபரப்புகளை / ஒளிபரப்புகளை அறிந்த மக்களின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொத்த எண்ணிக்கை, 'அறிவோர் திரள்' என்று வழங்கப்பெறும். இந்த அறிவோர் திரள் கருத்தே நிகழ்ச்சியின் வெற்றி தோல்விகளை மதிப்பிட உதவுவது. அவ்வகையில், மகளிர் நிகழ்ச்சியில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள், திருத்தங்கள் முதலியனவும் நேயர்களின் கருத்துப்படி இதில் கூறப்படுவதனால் வானொலியின் மகளிர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கு இது பெரிதும் உதவக்கூடும்.

இந்நூலுக்கு உதவிய ஆதாரங்களை முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என இருவகைப்படுத்தலாம். மகளிர் நிகழ்ச்சிகளின் ஒலிப்பேழைகள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களின் பேட்டிகள், சிறப்பு நேயர்களின் வினாநிரல் - விடைகள், அவர்களுடன் நிகழ்த்தப் பட்ட பேட்டிகள் ஆகியன இதன் முதன்மை ஆதாரங்களாகும். பேட்டி ஆய்வு முறைகளில் 'ஆழ்ந்த பேட்டி' என்பது ஒன்று. வினாக்களை முன்னதாக வகுத்துக்கொள்ளாமல், பேட்டி காணப்படுபவரது விருப்பம்போல் கருத்துகளை வெளியிட இது ஊக்குவிக்கும். அவரது மன அடித்தளத்திலுள்ள கருத்தினைச் சுதந்திரமாக வெளியிட இது வாய்ப்புத் தருகிறது.

பேட்டி எடுப்பவர் முற்குறிப்பு எதுவும் தந்து உதவாமலே நேயர் தாம் வானொலியில் கேட்ட நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து சொல்வது 'உதவியின்றி நினைவு கூர்தல்' என்று வழங்கப் பெறும். இந்த நூலுக்கான செய்திகளைத் திரட்டும்போது மேற்கூறிய முறையும் இந்த உத்தியும் மேற்கொள்ளப்பட்டன.

வானொலித் தொடர்பான முந்தைய ஆய்வேடுகள், கட்டுரைகள், நூல்கள், கலைக்களஞ்சியங்கள முதலியன இதற்குப் பயன்பட்ட துணைமை ஆதாரங்களாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வானொலியின் மகளிர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களிடம் ஆய்வுத் தொடர்பாகப் பேட்டி காணப்பட்டது. ஆய்வுக்கான வினா நிரல்கள், நகர்ப்புற மகளிர் கிராமப்புற மகளிர் ஆகிய இரு சாராருக்கும் கொடுக்கப்பட்டன. அப்பெண்களிடம் பேட்டியும் எடுக்கப்பட்டது. சிறப்பு நேயர் ஆய்வு என்பதனால் இச்சுற்றாய்வு மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட்டது.

இயல்கள் பகுப்பு

'வானொலியும் வளர்ச்சித் தொடர்பியலும்' என்னும் இயலில், தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொடர்புக் கருவிகள் பற்றிய பொது அறிமுகம், அகில இந்திய வானொலி பற்றிய பொது அறிமுகம், மதுரை வானொலி பற்றிய சிறப்பு அறிமுகம், மதுரை வானொலியின் வளர்ச்சி நிகழ்ச்சிகள் மற்றும் மகளிர் நிகழ்ச்சிகள் பற்றிய அறிமுகம் ஆகியவை தரப்படுகின்றன.

அகில இந்திய வானொலி நிலையங்களுள் மதுரை வானொலி நிலையத்தை 'மாதிரிக் களமாகக்' கொண்டு செய்யப்பட்டது இவ்வாய்வு. எனவே, மதுரை வானொலியில் இடம் பெற்ற மகளிர் நிகழ்ச்சிகள் 'மாதிரி நிகழ்ச்சிகளாக' எடுத்துக் கொள்ளப்பட்டன.

'மகளிர் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம்' என்னும் இயலில், வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கங்களும், அவை பற்றிய விளக்கங்களும் தரப்படுகின்றன; அவை எந்த அளவிற்கு மகளிருக்கு உதவுகின்றன என்பதும் கூறப்படுகின்றது.

'மகளிர் நிகழ்ச்சிகளின் வடிவம்' என்னும் இயலில், மகளிர் நிகழ்ச்சிகளில் கையாளப்படும் வடிவங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்னின்ன என்பனவும், அவை பற்றிய விளக்கங்களும், அவ்வடிவங்கள் மக்களிடையே பெறும் வரவேற்பின் அளவும் கூறப்படுகின்றன.

'மகளிர் நிகழ்ச்சிகளின் மொழிநடை' என்னும் இயலில், மொழிநடை பற்றிய பொதுவான அறிமுகமும், வானொலியின் மொழிநடையும்-குறிப்பாக மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் கையாளப்படும் மொழி-நடையும் - கூறப்படுகின்றன.

'நேயர்களின் கணிப்பில் மகளிர் நிகழ்ச்சிகள்' என்னும் இயலில் நேயர்களின் கருத்துகள் தரப்படுகின்றன. மகளிர் நிகழ்ச்சி என்பது சிறப்புநேயர் நிகழ்ச்சியாகும். அந்நிகழ்ச்சியைப் பற்றி அறிகையில், அந்நிகழ்ச்சி பற்றிய நேயர்-களின் கருத்துகளை அறிவதும் அவசியம். மகளிர் நிகழ்ச்சிகளில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து நேயர்களே கூறும் கருத்துகள், நிகழ்ச்சிகள் மேலும் சிறக்க உறுதியாக உதவும். எனவேதான், நேயர்களின் கருத்து-களை அறியுமுகமாகச் சுற்றாய்வு நிகழ்த்தப்பட்டது.

'ஆய்வு முடிவுகள்' என்னும் இயலில், இவ்வாய்வின் முடிவுகள் தரப்படுகின்றன. வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகள் பற்றிய விமரிசனமும், நேயர்கள் விரும்பும் மாற்றங்களும் இறுதியாகத் தரப்படுகின்றன.

'பின்னிணைப்புகள்' என்னும் பகுதியில், முதலில், 'மகளிர் நிகழ்ச்சிகள் பற்றிய வினாநிரல்' படிவம் தரப்படு-கிறது. சிறப்புநேயர்களிடம் வானொலி மகளிர் நிகழ்ச்சி-கள் குறித்துக் கருத்துக் கேட்பனவாக அவ்வினாநிரலின் வினாக்கள் அமைகின்றன.

அடுத்துத் 'தாய்வீடு' நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு.கே. துரைசாமியுடன் நூலாசிரியர் நிகழ்த்திய பேட்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தரப்படுகிறது. மகளிர் நிகழ்ச்சிகளின் இப்போதைய நிலை குறித்தும், வருங்காலத்தில் அவை பெறக்கூடிய மாற்றங்கள் குறித்தும் அவருடைய கருத்துகள் பெறப்பட்டன. அடுத்து வருவது 'கலைச்சொல் விளக்கம்' என்ற பின்னிணைப்புப் பகுதி. தகவல் தொடர்பும் அதன் சாதனங்களும் பற்றிய ஆய்வில் ஈடுபட்டபோது, அவை தொடர்பான கலைச்சொற்களின் விளக்கம் கூறும் 'விளம்பரக் கலை' நூல் கண்ணில் பட்டது. அப்பட்டியலில் இடம்பெறும் சில கலைச்சொற்கள் பொருள்பொருத்தம் கருதி இந்த நூலில், அனுமதியுடன், எடுத்துக் கூறப்படுகின்றன. இவற்றுள்சில. விளம்பரம் தொடர்பானவையாயினும் ஒலிபரப்பு ஒளிபரப்பு, களுடன் இயைபுடையன என்பதனால் அவையும் இங்கே இடம்பெறுகின்றன. உதவியின்றி நினைவுகூர்தல், உதவியுடன் நினைவுகூர்தல், ஆழ்ந்த பேட்டி, நிகழ்ச்சி நேயர் கணக்கெடுப்பு, நேயர் தொகுதி என்பன இவ்வாய்வின்போது மேற்கொள்ளப்பட்டன.

இறுதியாகத் துணைநூற் பட்டியல் இடம் பெறுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. வானொலியும் வளர்ச்சித் தொடர்பியலும்

மனிதனின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறையுள் என்று காலங்காலமாகப் பேசப்பட்டு வருகிறது. இவற்றுக்கு அடுத்தபடியாகத் 'தகவல் பரிமாற்றம்' என்ற மிக முக்கியமான கூறு மனித வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கிறது. இத்தகவல் பரிமாற்றமானது பேரளவில் நிகழும் போது 'தகவல் தொடர்பு' என்ற பெயரினைப் பெறுகிறது. தகவல் தொடர்பால் உலகமே ஒரு 'கிராம-மாக'ச் சுருங்கி வருகிறது. இதனை 'உலகமாம் கிராமம்' (Global Village) என்று கூறுவர்.

ஒவ்வொரு மனிதனும் ஒரு தீவு (Every man is an island) என்று தத்துவவாதிகளும், உளவியல் வல்லு-நர்களும் கூறுகிறார்கள். ஆனால், எந்த மனிதனும் தீவல்ல (No man is an island) என்கிறார் அறிஞர் சி.இ.எம்.ஜோட். "பற்பல சூழ்நிலைகளால் இந்த உலகம் உந்தப்பட்டு இயங்கி வருகிறது. இந்த இயக்கம் நிரந்தர-மானதல்ல. உலகச் சூழ்நிலைகளின் மத்தியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய செயல்பாட்டுக்காகவும், தன்னைச் சார்ந்துள்ளவர்களின் செயல்பாட்டுக்காகவும், பிறரை அண்டியோ, அல்லது சார்ந்தோ, அல்லது அவர்-களுடன் இணைந்தோ வாழ வேண்டிய கட்டாயம் உள்ளது. காரணம் தனி ஒரு மனிதனால் எதையும் சாதித்து விட முடியாது. தனி மரம் வெறும் மரமே; தோப்பாகாது"[1].

இந்நிலையில் மனிதன் தன் கருத்துக்களை மற்ற-வருடன் பகிர்ந்து கொள்ளுதல் முன்னேற்றப்பாதைக்கு அடிப்படைத் தேவையாகும். சிறிய அளவில் இப்-பரிமாற்றம் நிகழ்வதற்கு இரண்டு மனிதர்கள் போதும். ஆனால் நாட்டுக்கு நாடு மற்றும் ஒரு நாடு முழுமைக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும்போது இப்பரிமாற்றம் பேரளவில் நிகழவேண்டி-யுள்ளது. அப்பரிமாற்றத்திற்கு உதவுவன தகவல் தொடர்புக் கருவிகள். பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி, திரைப்படம் முதலான தகவல் தொடர்புக் கருவிகள் தம் தகவல் தொடர்புப் பணியின் மூலம் உலக நாடுகளை இணைத்து வருகின்றன.

தகவல் தொடர்புக் கருவிகளின் பங்கு

நாட்டின் மிகப்பெரிய அங்கங்கள் இரண்டு. ஒன்று அரசு; மற்றொன்று மக்கள் கூட்டம். இவையிரண்டிற்கும் இடையே உள்ள சுமுக உறவுதான் நாட்டை மேம்படுத்தும். அச் சுமுக உறவை வளர்ப்பதில் தகவல் தொடர்புக் கருவிகள் பெரும்பங்காற்றுகின்றன.

1. மக்களுக்கும் அரசுக்கும் இடையேயான தொடர்பு.
2. மக்களுக்கும் தகவல் தொடர்புக் கருவிகளுக்கும் இடையேயான தொடர்பு.

3. அரசுக்கும் தகவல் தொடர்புக் கருவிகளுக்கும் இடையேயான தொடர்பு - என நாட்டில் நிகழும் முக்கியத் தொடர்புகளை மூவகைப்படுத்தலாம். இவற்றுள் தகவல் தொடர்புக் கருவிகள் அனைத்து நிலைகளிலும் இடம் பெறுகின்றன.

தகவல் தொடர்புக் கருவிகளின் பணிகள்

தகவல் தொடர்பு, மனிதனின் அடிப்படைத் தேவை-களுள் ஒன்று என முன்னரே கண்டோம். அதன் முக்கியத்துவம் மக்களால் வெகுவாக உணரப்பட்டுள்ளதைத் தகவல் தொடர்புக் கருவிகளின் பெருக்கத்தை வைத்தே-அறிய முடிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தகவல் தொடர்புக் கருவி இல்லாத வீடே இக்-காலத்தில் இல்லை எனலாம். மிக ஏழ்மையில் வருந்தி வாடும் வறியவர்கள் கூட இரவல் பெற்றேனும் ஏதேனும் ஒரு தகவல் தொடர்புக் கருவியை நுகர்ந்து வருவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். செய்தித்தாள் மற்றும் வானொலி இல்லாத டீக்கடையைக் காண்பது அரிது. வாடிக்கையாளரைக் கவர அது ஒரு வழியாயினும், கவரும் உத்தியில் தகவல்தொடர்புக் கருவிகளே முக்கிய இடம் வகிக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

அறிவு பெருக்கும் நூல்நிலையங்களில் கூட அச்சு-வழிக் கருவிகள் பெருமளவில் வாங்கிப் போடப்படுவதைப் பார்க்கிறோம்.

தொலைக்காட்சி இல்லாத இந்தியக்கிராமங்கள் இப்-போது குறைவு. நாட்டை வாழ வைக்கும் விவசாயிகள், வறுமையில் வாடும் பரிதாப நிலை கண்ட இந்திய அரசு, கிராம மக்களுக்காகத் தொலைக்காட்சியைத் தானே வழங்கி, அவர்களுடன் தகவல் தொடர்பு கொள்கிறது.

இந்நிலையில் தகவல் தொடர்புக் கருவிகள் மிகவும் விழிப்புடன் செயலாற்ற வேண்டியுள்ளது. படித்தவர் முதல் பாமரர் வரை அனைவர்க்கும் புரியும் வண்ணம் ஒரு பொதுநடையில் நிகழ்ச்சிகளைத் தரவேண்டியுள்ளது. மக்களுக்கு அவைஆற்றும் பணிகளை மூவகைப்-படுத்தலாம்.

1. அறிவித்தல் (Information)
2. அறிவுறுத்தல் (Education)
3. மகிழ்வித்தல் (Entertainment)

என்பன அவை. இவை தவிர நாட்டு மக்களை ஒருங்-கிணைத்தல், பண்பாட்டைப் பாதுகாத்தல் ஆகிய இரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணிகளையும் தகவல் தொடர்புக் கருவிகள் ஆற்றி-வருகின்றன.

அறிவித்தல்

நாட்டு வளர்ச்சிக்காகவும், மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காகவும், அரசு தீட்டும் திட்டங்கள் பலப்பல. ஆனாலும் அவை திட்டவடிவில் அரசிடமே இருந்தால், தீட்டப்படும் திட்டங்கள் 'ஒருவழிப்பாதையாய்' முடங்கி-விடும். மக்களுக்கு அவை அறிவிக்கப்பெறும் போது, அத்திட்டங்கள் என்னென்ன என்று மக்கள் அறியமுடிகிறது அத்திட்டத்திற்கு மக்களிடம் வரவேற்பு இருக்கிறதா என்று 'நோட்டம்' பார்க்க அரசுக்கு இவ்வறிவிப்புப் பணி உதவுகிறது.

அறிவுறுத்தல்

உண்மையில் 'திட்டம்' நல்லதாக இருந்து, மக்கள் அதைச் சரிவரப் புரிந்து கொள்ளாவிட்டால் திட்டம் தோல்வியுறக் கூடும். அவ்வேளையில் அறிவுறுத்தற்பணி இன்றியமையாததாகின்றது. அந்நிலையில் அத்திட்ட விவரங்களை மக்களுக்குத் தெரிவிக்கச் சில உத்திகளைக் காணவேண்டியுள்ளது.

அத்திட்டம் குறித்த மேலும் பல விவரங்களை மக்களுக்குத் தரவேண்டும். அத்திட்டத்தின் உண்மையான நோக்கம், அதன் நிறைகள், குறைகள், அத்திட்டத்தைக் கையாளுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியன மக்களுக்கு விளக்கியுரைக்கப்படவேண்டும்.

சான்றாகக் குடும்ப நலத் திட்டத்தை எடுத்துக் கொள்வோம். அறிமுகப்படுத்தப்பட்ட புதிதில் வேறெந்தத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திட்டத்திற்கும் இல்லாத எதிர்ப்பு இத்திட்டத்திற்கெதிராகக் கிளம்பியது. இறைவனின் கருணையால் பிறக்கும் குழந்தையைப் பிறக்கவிடாமல் தடுப்பதா, கருவைக் கலைப்பதா என்றெல்லாம் குரல்கள் எழுந்தன. அப்போது தகவல் தொடர்புக் கருவிகள் மூலம் மக்களை அணுகியது இந்திய அரசு. குடும்ப நலத்திட்டத்தின் நோக்கம், நாட்டின் மக்கள் தொகைப் பெருக்கம், மக்கள் தொகைப் பெருக்கத்தின் தீமைகள்; குடும்ப நலத் திட்டத்தினால் விளையக்கூடிய நன்மைகள் போன்றவை நாடகம், பாடல், விளம்பரம் முதலான வடிவங்களில் வெளியாயின. அந்த இடையறாத அறிவுறுத்தற் பணியால் மக்கள் விழிப்புணர்வு பெற்றனர். தற்போது குடும்ப நலத்திட்டம் இந்தியாவில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது

மகிழ்வித்தல்

மக்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்ற தகவல் தொடர்புக் கருவிகள், இறுக்கமான (Serious) நிகழ்ச்சிகளையே தந்தால், மக்களுக்குச் சலித்து விடும். அவர்கள் மனங்கொள்ளும் வகையிலும், அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் சுவையான நிகழ்ச்சிகளைத் தர வேண்டும்.

கசப்பான மருந்தைத் தேன்குழைத்துப் புகட்டுவதுபோல அரிய கருத்தை நாடகம், பாடல் முதலான சுவையான வடிவங்களில் மக்களுக்குப் புகட்ட வேண்டும். அவ்வடிவங்கள் மக்களை மகிழ்விப்பதுடன் கருத்தையும் கொண்டு சேர்க்கும். இப்படி மகிழ்வித்தல் என்ற முலாம்பூசிய அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் மட்டுமன்றி, முழுவதுமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் தகவல்தொடர்புக் கருவிகளால் தரப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரையிசை நிகழ்ச்சிகளும், நகைச்சுவை மற்றும் பொழுது போக்கு நாடகங்களும் அவ்வகையில் அடங்கும். இவை வானொலியில் விவிதபாரதியின் வர்த்தக ஒலி-பரப்பில் பேரிடம் பெறுகின்றன. தொலைக்காட்சியில் பெரும்பான்மையான விளம்பரதாரர் நிகழ்ச்சிகளும், பத்திரிகைகளில் கதைகள், நகைச்சுவைத் துணுக்குகள் முதலியனவும், பெரும்பாலும் எல்லாத் திரைப்படங்களும் அவ்வகையில் அடங்குவனவே ஆகும்.

பிற பணிகள்

தகவல் தொடர்புக் கருவிகளின் துணைப் பணி-களாகப் பண்பாட்டைப் பாதுகாத்தல், மக்களை ஒருங்-கிணைத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தியப் பண்பாடு குறித்த உரைகளும், பேட்டி-களும், நாடகங்களும் இடம் பெறுகின்றன. இந்திய அளவிலான புகழ்பெற்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள், பிரமுகர்கள் போன்றோரின் உரைகளும் பேட்டிகளும் மக்களுக்குத் தகவல் தொடர்புக் கருவிகளின் மூலம் தரப்படுகின்றன.

தேசபக்திப் பாடல்கள் பல புனையப்பட்டு, இசை-யமைக்கப்பட்டு, மக்களை ஒருங்கிணைக்கும் முயற்சியாகத் தகவல் தொடர்புக் கருவிகளில் இடம் பெறுகின்றன. சான்றாக, வானொலி தினமும் மதியம் 1 மணி முதல் 1-05 வரையில் தேசபக்திப் பாடல் ஒலிபரப்புகிறது. தொலைக்காட்சி தினமும் மாலை 6.25 மணி முதல் 6.30 வரையில் ஒளிபரப்புகிறது. மேலும், அவ்வப்போது கால-நிரப்பிகளாகவும் (Time fillers) தேசபக்திப் பாடல்கள் ஒலி ஒளிபரப்பப்படுகின்றன. பத்திரிகையும் திரைப்படமும் நேரடியாக இப்பணிகளில் ஈடுபடுவதில்லையாயினும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவற்றிலும் இப்பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது,

அகில இந்திய வானொலி

இந்தியாவில் நாடு முழுமைக்கும் தகவல் தொடர்பு கொள்ளவும், பிற நாடுகளுடன் சுமுக உறவுகளைப் பேணவும் அகில இந்திய வானொலி அரும்பாடுபட்டு வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

இந்திய ஒலிபரப்புக் கார்ப்பரேஷன் (Indian Broadcasting Corporation) என்பது 1927-இல் இந்தியாவில் முதன்முதலில் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. இது ஏழாண்டுகள் நடந்தது. அகில இந்திய வானொலி (All India Radio) என்ற அமைப்பு 1934-இல் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டது.

1980-இல் கணக்கெடுத்தபடி இந்தியாவில் உரிமம் பெற்ற வானொலிப் பெட்டிகள் 23 மில்லியன். 1986-இல் உரிமம் பெற்ற பெட்டிகள் 50 மில்லியன். இப்போது இந்த எண்ணிக்கை மிகப் பல மடங்காகும். 1986-இல் எடுத்த விவரப்படி இந்தியாவில் 93 வானொலி நிலையங்களும், 172 (டிரான்ஸ்மிட்டர்) ஒலிபரப்பு மையங்களும் இயங்கின. இந்திய மக்களில் 90.5 சதவீதத்தினர் இதனால் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1980-களில் அகில இந்திய வானொலி (தமிழ்நாடு).

வர்த்தக ஒலிபரப்பு	வர்த்தக/ நிகழ்ச்சி	வானொலிப் பெட்டிகள்	கேட்கும் மக்கள் (ஆயிரத்தில்)
சென்னை : 13-4-69 முதல் பரப்பு : 6254 ச. கி. மீ.	14 3-71	5,34,607	4,680
திருச்சி ; 13-4-69முதல் பரப்பு :4621 ச. கி.மீ.	14-3-71	1,46, 04	457

தமிழ்நாட்டில் இன்று வானொலி நிலையங்கள் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும், புதுச்சேரியிம் புதுக்சேரியிலும் செயல்படுகின்றன. இவற்றுள் சென்னையும், திருச்சியுமே பழமையானவை. வருங்காலத்தில் மேலும் சில நிலையங்கள் செயல்பட உள்ளன.

1927-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23-ஆம் நாள் இந்தியாவின் முதல் வானொலி நிலையம் பம்பாயில் தொடங்கியது. 1967-இல் நவம்பர் 1-ஆம் நாள் முதல் விவிதபாரதியின் வர்த்தக ஒலிபரப்புத் தொடங்கி நாடு முழுவதையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

இந்திய வானொலியின் வரலாறு, நாட்டின் விடுதலைப் போராட்டம், அதன் வெற்றி, 1947-இல் சுதந்திரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிடைத்த பின்னர் ஏற்பட்ட பொருளாதார, சமூக வளர்ச்சி-கள் என்பவற்றைத் தன்னுள் அடக்கியுள்ளது எனலாம். சக்தி வாய்ந்த தகவல் தொடர்புக் கருவியான இந்திய வானொலியின் நோக்கம், "நாடு முழுவதும் உள்ள மக்கள் கேட்கக்கூடியவாறு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி, அவர்களை ஒருங்கிணைக்கவும், அரசின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளைக் குறிப்பாக விவசாயம், கல்வி, குடும்பநலத் திட்டம் போன்றவற்றின் நோக்கங்களை, மக்களிடையே பரப்பி, வெற்றி பெறச் செய்யவும் உதவுவதாக இருந்தது."[2]

இந்தியா மக்கள் தொகைப் பெருக்கமுள்ள ஒரு நாடு. இதில் ஏழ்மையும் அறியாமையும் பெரிய அளவில் விரவியுள்ளன. இவற்றைக் களைய அரசு மாத்திரமல்ல, பல்வேறு துறைகளும் அவற்றின் சாதனங்களும் திட்ட-மிட்டுச் செயலாற்றுவது அவசியம்.

விவிதபாரதி ஒலிபரப்பில், இசை-41%; செய்தி-22.9%; உரை-8%; கிராமப்புறத்திற்கு-6.1%; பிற-22% என்ற பங்கீட்டு முறையில் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. அகில இந்திய வானொலியானது நாட்டின் பரப்பில் 79 சதவிகிதப் பரப்பையும், மக்கள் தொகையில் 89 சதவிகித மக்களையும் சென்றடைகிறது.

வளர்ச்சித் தொடர்பியல்

நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மேம்பாடு-களை மேலும் அதிகரிக்க அரசானது பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்களைச் செயல் படுத்த நாட்டு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். இந்நிலையில் மக்களிடையே திட்டங்களை அறிமுகப்படுத்-தவும், அவர்களின் ஒத்துழைப்பைப் பெறவும் அரசானது தகவல் தொடர்புக் கருவிகளையே பெருமளவில் நம்பி-யுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியன வலிமை வாய்ந்த தகவல் தொடர்புக் கருவிகள். அவற்றுள் திரைப்படம் முழுவதுமாகத் தனியார் துறையாக இயங்குவதால் அது இலாபநோக்குடனே செயல்பட்டு வருகிறது. பத்திரிகையோ, அரசின் கண்காணிப்பு ஓரளவு இருந்தாலும், தனியார் உடைமை என்பதால், அவ்வுடைமையாளரின் தற்சார்பைப் பெற்றுவிடுகிறது. அத்துடன் பத்திரிகைகளுள், நாளிதழ்கள் அரசியலையும், பருவ இதழ்கள் மகிழ்வித்தற் கூறுகளையுமே பெரிதுபடுத்துகின்றன.

இந்நிலையில், அரசானது வானொலியையும் தொலைக்காட்சியையும் தன்வசமே வைத்துக் கொண்டு அவற்றைத் தனது திட்டக் கொள்கைப்பரப்பிகளாகப் பயன்படுத்தி வருகிறது. வானொலியும், தொலைக்காட்சியும் அப்பணியைச் செவ்வனே ஆற்றிவருகின்றன. ஆனால் அவை மக்களுக்குச் சேவையும் செய்து வருகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தியாவில் வானொலி ஒலிபரப்பானது ஆண்டுக்கு ஆண்டு மேன்மேலும் பல மாற்றங்கள் பெற்று வளர்ந்து வருகிறது. இந்நிலையில் அது நாட்டின் வளர்ச்சிக்கும் பெருமளவில் துணைசெய்கிறது.

செய்தி ஒலிபரப்புகளின் மூலம் அன்றாடச் செய்திகளை மக்களுக்கு உடனுக்குடன் அறிவிக்கிறது; வளர்ச்சி நிகழ்ச்சிகளையும், சிறப்பு நேயர் நிகழ்ச்சிகளையும் ஒலி பரப்பி, வளர்ச்சித் தொடர்பியலை மேற்கொள்கிறது. இசை, நாடகம் முதலானவற்றை ஒலிபரப்பி மக்களை மகிழ்விப்பதுடன் கலைகளை வளர்க்கிறது.

அகில இந்திய வானொலியின் இச் சேவைகளை ஒவ்வொரு வானொலி நிலையமும் தன்னளவில் தத்தம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வட்டார மொழிகளில் ஆற்றிவருகின்றது. அவ்வகையில் மதுரை வானொலி ஆற்றி வரும் பணி அறியத் தக்கதாகும்.

மதுரை வானொலி

மதுரை வானொலியானது 1987-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6-ஆம் நாளிலிருந்து தன் ஒலிபரப்பைத் தொடங்கியது. அவ்வொலிபரப்பு, தொடக்கத்தில் மாலை நேரம் மட்டுமே நிகழ்ந்தது. சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது 14-1-89 அன்று முதல், மதுரை வானொலியின் காலை ஒலிபரப்புத் தொடங்கியது. இன்னும் மதிய நேர ஒலிபரப்பு நடைமுறைக்கு வரவில்லை.

மதுரை வானொலி 10 கிலோவாட் சக்தியுடன் இயங்கி வருகிறது. திண்டுக்கல் அண்ணா, காமராசர், பசும்பொன் தேவர் திருமகனார் மற்றும் இராமநாதபுர மாவட்டங்களுக்கும் மதுரை மாவட்டத்திற்கும் மதுரை வானொலியின் ஒலிபரப்புச் சேவை கிடைத்து வருகின்றது. இக்கணக்கின்படிப் பார்த்தால் மதுரை வானொலி கேட்போரின் மொத்த எண்ணிக்கை 78 லட்சத்து 71 ஆயிரத்து 334 பேர் (78,71,334) ஆகும். இது 1990-ஆம் ஆண்டின் முடிவில் எடுக்கப்பட்ட நேயர் ஆய்வின் முடிவாகும்.

மதுரை வானொலியின் மொத்த ஒலிபரப்பு நேரம் ஒருநாளைக்குச் சுமார் 9 மணி நேரமாகும். அதாவது காலை 5-55 முதல் 9-30 வரையிலும், மாலை 5-50 முதல் 10-50 வரையிலுமாக மதுரை வானொலியின் ஒலிபரப்பு நிகழ்கிறது. இது தவிரச் சில சமயங்களில் சிறப்பு ஒலிபரப்பாக தில்லி அல்லது சென்னை நிலையங்களின் நிகழ்ச்சிகள் மதிய வேளையில் அஞ்சல் செய்யப்படுவதும் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை வானொலியில் தனிப்பட்ட செய்தி ஒலிபரப்பு இல்லை. தில்லி மற்றும் சென்னை வானொலிகளின் செய்தி ஒலிபரப்புகளையே அஞ்சல் செய்து வருகிறது.

மதுரை வானொலியில் வணிக விளம்பரங்கள் 1-7-1992-இல் இருந்து இடம் பெறுகின்றன. விளம்பர-தாரர் வழங்கும் நிகழ்ச்சிகள் இப்போது பெருகி வருகின்றன.

மதுரை வானொலியின் வளர்ச்சித் தொடர்பியல்

மக்களுக்காகவும், நாட்டின் மேம்பாட்டுக்காகவும், அரசு முனைந்து தீட்டி வரும் திட்டங்களை மக்களுக்கு அறிவிக்கிறது மதுரை வானொலி. அத்திட்டங்கள் குறித்த முறையான விளக்கங்களை அளித்து மக்களுக்கு அறி-வூட்டுகிறது. மேலும், இது, மக்களை ஒருங்கிணைத்தல், பண்பாட்டைப் பாதுகாத்தல் ஆகிய வளர்ச்சிப் பணி-களையும் மேற்கொண்டு வளர்ச்சித் தொடர்பியலில் ஈடுபட்டு வருகிறது.

சிறப்பு நேயர் நிகழ்ச்சிகள்

பால், வயது, இனம், தொழில், கல்விநிலை, பொருளாதாரநிலை, சமூக மதிப்பு என்று பல்வேறு நிலைகளில் மக்கள் வேறுபடுகிறார்கள். இவ்வேறுபாடு-களைக் கடந்து எல்லா மக்களுக்கும் பொதுவான சில நிகழ்ச்சிகள் தகவல் தொடர்புக் கருவிகளில் இடம் பெற்று எல்லாத் தரப்பு மக்களையும் நிறைவு செய்கின்றன. பெரும்பாலும் மகிழ்வித்தற்கூறுகள் அடங்கிய பொழுது-போக்கு நிகழ்ச்சிகள் அவ்வகையில் அடங்கும்.

அவற்றினின்று வேறுபட்டுக் குறிப்பிட்ட வட்டத்-திற்குள் வரும் நேயர்களுக்காக மட்டுமே கூட நிகழ்ச்சிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடம் பெறுவதுண்டு. அவ்வகை நிகழ்ச்சிகள் 'சிறப்பு நேயர் நிகழ்ச்சிகள்' எனப்படுகின்றன. சிறப்பு நேயர் நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்ச்சிகள், தொழிலாளர் நிகழ்ச்சிகள், வேளாண்மை நிகழ்ச்சிகள், இளைஞர் நிகழ்ச்சிகள், மகளிர் நிகழ்ச்சிகள் எனப் பலவகைப்படுகின்றன.

மதுரை வானொலியிலும் பல 'சிறப்பு நேயர் நிகழ்ச்சிகள்' ஒலிபரப்பாகின்றன. 'மழலையர் உலகம்' என்ற சிறுவர் நிகழ்ச்சியும், 'மண்ணும் மணியும்' என்ற வேளாண்மை நிகழ்ச்சியும், 'இளைய பாரதம்' என்ற இளைஞர் நிகழ்ச்சியும், 'தாய்வீடு', 'பூந்தோட்டம்' என்னும் மகளிர் நிகழ்ச்சிகளும் அவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் அந்தந்த நேயர்களுக்கான அடிப்படைச் சிக்கல்கள், அவற்றுக்கான தீர்வுகள், அவர்களுக்கான ஆலோசனைகள் முதலியவற்றைக் கூறுமுகமாக அமைகிறது.

மகளிர் நிகழ்ச்சிகள்

'ஆணுக்குப் பெண்ணிங்கு இளைப்பில்லை' என்றபடி, எல்லாத் துறையிலும் மகளிர் நுழைகின்ற காலம் இது. அவ்வேளையில் மகளிர்க்கான ஆலோசனைகளை வழங்க முன்வருகின்றது மதுரை வானொலி.

இதற்காக இரண்டு நிகழ்ச்சிகளை அது அளித்து வருகிறது. ஒரு நிகழ்ச்சி, முழுவதுமாக நகர்ப்புற மகளிர்க்கும், மற்றொரு நிகழ்ச்சி, முழுவதுமாக கிராமப்புற மகளிர்க்கும் ஒதுக்கப்பட்டு, அவரவருக்கான ஆலோசனைகள் அவ்வந் நிகழ்ச்சிகளில் வழங்கப்படுகின்றன.

சுயமாகச் சிந்திக்கவும், சூழ்நிலைக்கேற்பச் செயல்படவும் கற்றுக் கொடுப்பதே கல்வி. அக்கல்வியறிவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிடைக்கப் பெறாமையால் தான் பல பெண்கள் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள். சில வேளைகளில் அவர்களே சிக்கலாக மாறி விடுகிறார்கள். இந்நிலை மாறப் 'பெண் கல்வி'யின் முக்கியத்துவம் பற்றிப் போதிக்கிறது மதுரை வானொலி.

ஒரு மனிதனின் சுதந்திரமான செயல்பாட்டுக்கு அவனுடைய பொருளாதார நிலையும் அடிப்படைக் காரணியாக அமைகிறது. அவ்வகையில் பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட இயலவில்லை. காரணம், பொருளாதார நிலையைப் பொறுத்தவரையில் ஆண்களைவிடப் பெண்கள் சற்றுக் குறைந்தநிலையிலேயே இருக்கிறார்கள். (சம்பளக் கவரை வாங்கியவுடன் மனைவியின் கையில் கொடுக்கும் கணவன்மாரைப் பற்றி இங்குப் பேச்சு இல்லை). தம் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வழிவகை தெரியாத பெண்கள் தாம் பெற்றோருக்கும் மற்றோருக்கும் பாரமாகிப்போகிறார்கள். அந்நிலையில், சுயமாகத் தொழில் தொடங்கி முன்னுக்கு வந்த மகளிரை அவர்களுக்கு இனம் காட்டி அவர்களைத் தூண்டுகிறது மதுரை வானொலி.

'சுதந்திரம்' என்ற பெயரில் 'தான் தோன்றித்தனமாகத்' திரிவதில் பொருளில்லை. சுதந்திரமும் தான் தோன்றித்தனமும் வேறுபட்டவை. சுதந்திரம் என்பது மனிதனை வளர்ப்பதுடன் அவனுடய சமுதாயத்தையும் வளர்க்கிறது. தான்தோன்றித்தனமோ அவனைக் கெடுப்பதுடன் அவன் வாழும் சமூகத்தையும் சீர்குலைத்து விடுகிறது. அதே போல் உரிமை வேறு; கடமை வேறு. கடமையைத் தெரிந்து கொண்டும் உரிமையைப் புரிந்து கொண்டும் ஆற்றப்படும் செயலே உண்மையான செயல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்விரண்டில் ஒன்று தவறினாலும் செயலானது முழுமை பெறாது.

மகளிருக்கான உரிமைகளும் கடமைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. அத்துடன் பிறநாட்டு மகளிர் நிலைகளும் பேசப்படுகின்றன. உலகில் புகழ்பெற்ற பெண்கள் பற்றிய குறிப்புகள் தரப்படுகின்றன. தம் முயற்சியாலும் உழைப்பாலும் உயர்ந்து வரும் பெண்கள் பேட்டி காணப்பட்டு, அவர்களின் அநுபவங்கள் பிற மகளிருக்கும் பகிர்ந்தளிக்கப் படுகின்றன.

இப்படிப்பட்ட தகவல்கள் மகளிருக்கு நேரடியாகப் பயனளிக்கின்றன. அவை தவிர, மகளிருக்கு விருப்பமான அழகுக் குறிப்புகளும் சமையற் குறிப்புகளும் அடிக்கடி ஒலிபரப்பாகின்றன. அவை மகளிருக்கு மகிழ்வூட்டுவதுடன் பயனும் அளிக்கின்றன.

தனிமனிதனின் உயர்வுக்கும், நாட்டின் உயர்வுக்கும் உலகின் உயர்வுக்கும் தகவல்தொடர்பு மிக இன்றியமையாதது.

தகவல் தொடர்பின் முக்கியத்துவம் உணரப்பட்ட அதே வேளையில் அச்சுவழி மின்னணுவழிக் கருவிகள் பெருகியதுடன், அவை நாட்டின் வளர்ச்சிக்கும், உலக நாடுகளுக்கு இடையேயான சுமுக உறவுக்கும் தொண்டாற்ற முற்பட்டன.

அவ்வகையில் அகில இந்திய வானொலி, இந்திய நாட்டின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. விவிதபாரதியின் வர்த்தக ஒலிபரப்பு நாட்டை ஒருங்கிணைக்கும் பணியில் ஆற்றிவரும் பங்கு குறிப்பிடத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை வானொலியானது அகில இந்திய வானொலியின் சேவைகளைத் தன்னளவில் திறம்பட ஆற்றி வருகிறது. மகளிர் நிகழ்ச்சிகளில் மகளிரின் மூலமே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் அறிவுறுத்தற் பணியையே செய்து வருகின்றன.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் பெண் கல்வி, சுயதொழில் முனைவு முதலாகப் பல உள்ளடக்கங்கள் இடம்பெற்றுப் பெண்களுக்கு நல்வழி காட்டுகின்றன.

குறிப்புகள்

100037

1. எஸ்.ஏ.எல். ஜான் லோப்பஸ், மக்கள் தொடர்புக் கலை, ப.10.

2. யூ.ராசையா, ஒலிபரப்புக் கலை, ப. 6.

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. மகளிர் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம்

ஒரு நாடு உயரவேண்டுமானால் அந்நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிமனிதனும் முன்னேற வேண்டும். இந்திய நாட்டின் மக்கள் தொகையில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பங்கு வகிக்கின்றனர். எனவே மகளிர் உயர்வதும் இந்திய நாட்டு வளர்ச்சியில் முக்கியமாகிறது. வளர்ச்சித் திட்டங்களில் அவர்களின் பங்கேற்பும் சிறப்பிடம் பெறுகிறது.

திட்டவிரிவாக்கத்தில் வானொலியின் பங்கு

நாட்டின் வளர்ச்சிக்கென அரசு, பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்களுள் பல, மகளிர் முன்னேற்றத்துக்கு வழிவகுப்பன. அவை மக்களைச் சென்றடையவேண்டும்; அவர்களையும் பணிகளில் ஈடுபடுத்தித் திட்டங்களுக்கு உயிரூட்ட வேண்டும். அந்நிலையில் தகவல் தொடர்புக் கருவி என்ற முறையில் வானொலி அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல்; பொதுப்பணியில் பங்கேற்க அழைத்தல் ஆகிய நோக்குகளுடன் செயல்பட்டு மக்களுக்கு உதவுகின்றது.

நிகழ்ச்சிகள் உருவாதல்

மதுரை வானொலி, மகளிருக்கெனப் பல்வேறு நிகழ்ச்சிகளை அளித்துப் பணியாற்றி வருகிறது. நகர்ப்புற மகளிருக்குத் 'தாய்வீடு' என்ற நிகழ்ச்சி, கிராமப்புற மகளிருக்குப் 'பூந்தோட்டம்' என்ற நிகழ்ச்சி ஆகிய இரண்டும், மகளிருக்குத் தொண்டு செய்யும் நோக்கில் பிறந்தவை ஆகும்.

'தாய்வீடு' நிகழ்ச்சியானது ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் மாலை 6-10 முதல் 6-30 மணி வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒலிபரப்பாகிறது. 'பூந்தோட்டம்' நிகழ்ச்சியானது ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் மாலை 6.10 முதல் 6-30 மணி வரை ஒலிபரப்பாகிறது. அவை நிரந்தரமான நிகழ்ச்சிகள். மேலும் 'சலங்கைக்கதிர்' என்னும் தலைப்பில் ஒரு நிமிடமோ அரை நிமிடமோ மகளிர்ச் செய்திகளைத் 'துணுக்குச் செய்தி'களாகத் தருவதும் உண்டு.

சமுதாயத்தில் பல உறவு நிலைகளை உடையவர்கள் மகளிர். தாய், மகள், மனைவி, சகோதரி, சமூக சேவகி எனப் பல நிலைகளில் மகளிர் பங்குவகிக்கின்றனர். மதுரை வானொலியானது மகளிரின் ஒவ்வொரு நிலைக்கும் ஏற்றவாறு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.

உள்ளடக்கங்கள்

1. பெண்கல்வி
2. வரதட்சணைக் கொடுமை
3. குடும்பக் கட்டுப்பாடு
4. கலப்புத் திருமணம்
5. தொழில் முனைவு
6. சத்துணவு
7. குழந்தைநலம்
8. சுற்றுப்புறச் சூழல்
9. பெண் சிசுக்கொலைத் தடுப்பு
10. அழகுக் குறிப்புகள்
11. உடல்நலம்
12. சாதனை மகளிர்

போன்ற பொருள்களை மையமாக வைத்து நிகழ்ச்சிகள் உருவாகின்றன.

அவை ஒவ்வொன்றின் உள்ளடக்கமும் மகளிரின் நல்வாழ்வை, முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டே அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. பெண்கல்வி

பெண்களில் 25 விழுக்காட்டுப் பெண்களே நம்நாட்டில் கல்வியறிவு பெற்றுள்ளனர். 'ஓர் ஆண் படித்தால் அவன் மட்டுமே பயன்பெறுகிறான்; ஒரு பெண் படித்தாலோ ஒரு குடும்பமே பயன்பெறுகிறது' என்று உலகோர் உரைப்பர். பல மகளிர்க்கு முறையான கல்வியறிவு கிடைப்பதில்லை. அவர்களுக்குக் கல்வியினால் வரக்கூடிய அனைத்துப் பயன்களையும் தர வேண்டும் என மதுரை வானொலி உணர்ந்து, நிகழ்ச்சிகள் தர முன்வந்திருக்கிறது.

கல்வியின் பெருமை, முக்கியத்துவம் முதலியன பற்றி மெல்லிசைப் பாடல்களும், நாடகங்களும் சில போது ஒலிபரப்பப்படுகின்றன.

பெண்களில் பலர், தம் உரிமைகளும் கடமைகளும் என்னென்ன என்பது பற்றிக்கூட அறியாமல் அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்களுக்கு உண்மையை உணர்த்தி, செயல்திறம் ஊட்டி, நம்பிக்கை ஏற்படுமாறு செய்யச் சட்டத்துறையிலுள்ள பெண் வல்லுநர்களைப் பேட்டிகண்டு ஒலிபரப்புகிறது மதுரை வானொலி.

பெண்களுக்கான சொத்துரிமை, திருமண உரிமை முதலியவற்றை எடுத்துக் கூறுகிறது. கணவனின் புறக்கணிப்பு அல்லது அவனது வீட்டாரின் கொடுமைகளை விதியென்று எண்ணாமல், புறங்கண்டு, தப்ப வழிவகுக்கும் விவாகரத்து என்னும் உரிமையை விளக்கியுரைத்துப் பெண்களுக்கு வழிகாட்டுகிறது. அதன் பொருட்டு, 'வாரம் ஒரு சட்டம்' என்ற தலைப்பில் 13 வாரங்களுக்குத் 'தொடர்நிகழ்ச்சி' ஒன்றை ஒலிபரப்பியது மதுரை வானொலி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. வரதட்சணைக் கொடுமை

இன்றைய சமுதாயத்தை 'வரதட்சணை' என்னும் தீமை பெருமளவில் பாதித்துள்ளது. பணம் உள்ளவர்களுக்கு வரதட்சணை என்பது பெரும்பாரம் அன்று. பெண்ணுக்குக் கொடுக்கும் அன்பளிப்பாகவே அது கருதப்படலாம். ஆனால் ஏழைகளுக்கோ அது கொடிய சுமை. அதன் பேய்வளர்ச்சி, வாழ்வைச் சிதைக்கும் அளவிற்குப் பேருரு (விஸ்வரூபம்) எடுத்துவிடுகிறது.

பெரும்பாலும் வரதட்சணைப் பேச்சைத் தொடங்குவதே மாப்பிள்ளையின் தாய்தான். அவள் தன் மாமியாரிடம் தான் பட்ட துன்பங்களைத் தன் மருமகள் மீது திணிக்க முற்படுகிறாள். அந்த அவல காட்சிகளை மையமாக வைத்து நாடகங்கள் பல ஒலிபரப்பப்படுகின்றன. மேலும், மாப்பிள்ளை, மாப்பிள்ளையின் தகப்பனார் (மாமனார்), சகோதரி (நாத்தனார்) முதலியோர் மூலம் இழைக்கப்படும் வரதட்சணைக் கொடுமைகளும் நாடகங்களாகச் சித்திரிக்கப்படுகின்றன.

உளவியல் சார்ந்த இச்சிக்கல் குறித்துப் பேட்டிகளும் பட்டிமண்டபங்களும் கூட அடிக்கடி ஒலிபரப்பப்படுகின்றன.

3. குடும்பக் கட்டுப்பாடு

இந்திய அரசு, முனைந்து செயல்படுத்தி வரும் மிக முக்கியமான திட்டம் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம். இத்திட்டத்தை எளிமையாக அறிவிப்பதுடன் அதனை எவ்வாறு மேற்கொள்ளவேண்டும் என்று முறையாக அறிவூட்டவும் செய்கிறது மதுரை வானொலி.

''அடிக்கடி கருவுறுதல் தாயின் உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கும்'' என்று அறிவிக்கிறது. "குடும்பக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டுப்பாட்டு முறைகளை முறையாக ஏற்பது தான் நல்லது; அரைகுறையாகத் தெரிந்து கொண்டு குடும்பக் கட்டுப்பாட்டைப் பின்பற்றுவதால் ஆபத்தான விளைவுகள் ஏற்படக் கூடும்'' என்று அறிவூட்டுகிறது.

கருவுறும் காலத்தில் பெண்ணின் மனநிலை, அவள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், அவற்றைச் சமாளிக்கக் கூடிய வழிமுறைகள் முதலியவற்றை மையமாகக் கொண்ட உரைகளும், கலந்துரையாடல்களும், சிறு நாடகங்களும் அடிக்கடி ஒலிபரப்பாகின்றன.

'எல்லாத் தரப்பு மக்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு' (பூந்தோட்டம்-கலந்துரையாடல்), 'அளவான குடும்பம் அழகான குடும்பம்' (தாய்வீடு-சிறு நாடகம்), 'சின்னக் குடும்பம் சிங்காரக் குடும்பம்' (தாய்வீடு-உரை) முதலிய நிகழ்ச்சிகளைச் சான்றாகக் காட்டலாம்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கேட்பதன் மூலம் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய முழுமையான அறிவை மகளிர் பெற முடிகிறது.

4. கலப்புத் திருமணம்

இந்தியா, சமயச் சார்பற்ற நாடு. ஆனால் சாதி-பேதமற்ற நாடன்று. சாதி பேதங்கள் இருக்கும் வரையில் நாட்டில் சண்டைகள் ஓயப்போவதில்லை. சாதி பேதமற்ற சமநிலை உருவாகக் 'கலப்புத் திருமணம்' ஓரளவேனும் உதவுகிறது. எனவே அதை ஆதரிக்கும் வகையில், நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்புகிறது மதுரை வானொலி.

கலப்புத் திருமணத்தால் விளையும் நன்மைகள், சிக்கல்கள் ஆகியவற்றை நிகழ்ச்சிகள் படம்பிடித்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டுவதால் மக்கள், கலப்புத் திருமணத்தின் இரு-பக்கத்தையும் அறிய முடிகிறது. கலப்புத் திருமணத்தால் தீமைகளைவிட நன்மைகளே அதிகம் என்று மதுரை வானொலி உணரவைப்பதால்,மக்கள், கலப்புத் திருமணங்-களை ஆதரிக்க முன்வருகின்றனர். இல்லையெனில் எதிர்க்காமல் இருக்குமளவிற்கேனும் மனத்தைப் பண்-படுத்திக் கொள்கின்றனர்.

'கலப்புத் திருமணம் - ஒரு கண்ணோட்டம்' (தாய் வீடு) என்ற நிகழ்ச்சியில் மரபுவழித் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண்ணும், கலப்புத் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண்ணும் சந்தித்து உரையாடுவதாக ஒரு நிகழ்ச்சியை ஒலிபரப்பியது மதுரை வானொலி. அந்நிகழ்ச்சி மாபெரும் வரவேற்புப் பெற்றது. அதிலிருந்தே கலப்புத் திருமணம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு மிகுதியென்று தெரிகிறது.

5. தொழில் முனைவு

மகளிரும் சுயமாகத் தொழில் தொடங்கி நடத்து-மளவுக்குத் திறம் படைத்தவர்கள் தாம். அதனைச் சுய-மாகத் தொழில் தொடங்கி நடத்தி வரும் மகளிரின் மூலமே பிறமகளிருக்கு உணர்த்துகிறது மதுரை வானொலி.

'நீங்களும் தொழில்முனைவோராகலாம்' (தாய்வீடு) என்ற தலைப்பில் ஓர் உரையையும், 'அச்சகத்தையும் ஆளலாம்' (தாய்வீடு) என்ற தலைப்பில் ஒரு பேட்டியை-யும் மதுரை வானொலி ஒலிபரப்பியது.

அத்துடன் நில்லாமல் சுயதொழில் முனைவுக்கு அரசாங்கம் அளிக்கும் கடனுதவி, பயிற்சி பெற ஏற்ற பயிற்சி மையங்கள் முதலான தகவல்களையும் உடனுக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடன் ஒலிபரப்புகிறது. அதன் மூலம் சுயதொழில்தொடங்க முன்வரும் மகளிர் ஊக்கம் பெறுகின்றனர்.

6. சத்துணவு

''சத்தில்லாத உணவை வயிறுமுட்ட உண்பதால் பயனில்லை; சத்தான உணவை அளவாக உண்பதே உடல்நலம் காக்கும் வழி'' என்று பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் மதுரை வானொலி உணர்த்துகிறது.

'சத்தான ஆகாரம் உயிருக்கு ஆதாரம்' (தாய்வீடு) 'சத்து அழியாமல் சமைப்பது எப்படி' (பூந்தோட்டம்) என்ற தலைப்புகளில் உரைகள் ஒலிபரப்பப்படுகின்றன.

அவை தவிர, வைட்டமின் சத்துகள் பற்றி 'இசைப் பாடல்கள்' புனையப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன.

மேலும், சத்துணவு பற்றிய சிறுசிறு குறிப்புகளும் கால நிரப்பிகளாக (Time fillers) ஒலிபரப்பப்படுகின்றன. சிறுபொழுதையும், சிந்தனைக்கு ஏற்றதாக மதுரை வானொலி மாற்றிவிடுகிறது.

7. குழந்தை நலம்

குழந்தையைப் பெறுவதுடன் பெற்றோரின் கடமை முடிந்துவிடுவதில்லை. அக்குழந்தையை நன்கு பேணி-வளர்ப்பதில் தான், அவர்களின் கடமை முழுமை அடைகிறது என்று மதுரை வானொலி உணர்த்துகிறது

'குழந்தைகளின் உரிமைகள்' (பூந்தோட்டம்), 'பிள்ளைகளின் படிப்பில் பெற்றவரின் பங்கு' (தாய்வீடு) 'குழந்தை வளர்ப்பு ஒரு கலை' (தாய்வீடு) என்ற தலைப்பு களில் முறையே பெண் வக்கீல், பள்ளிப் பெண் முதல்வர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உளவியல் பெண் வல்லுநர் ஆகியோரின் உரைகள் ஒலிபரப்பப்பட்டன.

அந்நிகழ்ச்சிகளைக் கேட்பதன் மூலம் மகளிர், தம் குழந்தைகளை எல்லாத் துறைகளிலும் சிறந்தவர்களாக்கும் ஊக்கத்தைப் பெறுகின்றனர்.

8. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு

''வாழ்வு சிறக்க உதவுவது நல்ல சுற்றுப்புறச் சூழல்; சுற்றுப்புறச் சூழல் தூய்மையாக இல்லாவிடில் பல நோய்கள் வரக்கூடும்'' என்று மதுரை வானொலி உணர்த்துகிறது.

'பெண்களும் சுற்றுப்புறச் சூழலும்' (பூந்தோட்டம்) என்ற தலைப்பில் ஓர் உரையும், 'சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கப் பெரிதும் உதவுபவர்கள் ஆண்களா, பெண்களா' (தாய்வீடு) என்ற தலைப்பில் ஒரு பட்டி-மண்டபமும் ஒலிபரப்பப்பட்டன.

அவை தவிர, சுற்றுப்புறச் சூழல் பற்றிய வில்லுப்-பாட்டு மற்றும் சிறு நாடகங்கள் பல அடிக்கடி ஒலிபரப்-பாகின்றன.

9. பெண் சிசுக்கொலைத் தடுப்பு

செலவுக்கு வழிவகுப்பவர்களாகப் பெண் குழந்தை-கள் கருதப்படுகின்றனர். அதன் விளைவாக அவர்களைக் கருவிலேயே அழிப்பது. பிலந்தவுடன் அழிப்பது, மீறி உயிருடன் இருந்தால் ஆனமட்டும் கொடுமைப்படுத்துவது என்ற புது நிலை (Modern trend) அண்மையில் உரு-வானது. அதை மாற்றுமுகமாகத்தான் 1990-ஆம் ஆண்டு பெண்குழந்தைகள் ஆண்டாகக்' கொண்டாடப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனையொட்டி, 'பெண் குழந்தைகள் ஆண்டு' (பூந்தோட்டம்) என்ற உரையும், 'அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டியவர்கள் ஆண் குழந்தைகளா, பெண் குழந்தைகளா?' (பூந்தோட்டம்) என்ற சொல்லாடல் மன்றமும் ஒலிபரப்பப்பட்டன.

அந்நிகழ்ச்சிகள் தவிர, கிராமப்புற மகளிருக்கெனப் 'பெண்குழந்தையும் நம் குழந்தைதான்' என்ற தலைப்பில் சிறுசிறு நாடகங்களும் ஒலிபரப்பாகின்றன.

நிகழ்ச்சிகளின் மூலம் பெண் குழந்தைகளின் முக்கியத் துவம் நன்கு உணரப்படுவதுடன், பெண் குழந்தைகளின் மீதான வெறுப்பு குறைய ஓரளவு வாய்ப்பு ஏற்படுகிறது.

10. அழகுக் குறிப்புகள்

உலகில் மனிதராகப் பிறந்த எவருக்குமே தாம் அழகாய் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அப்படியிருக்கையில், இயல்பாகவே அழகுணர்ச்சி வாய்ந்த மகளிர் குலம், தன் அழகை மேலும் அழகாக்கிக் காட்ட விரும்புவது இயல்பு. எனவே மகளிருக்கென அழகுக் குறிப்புகளை ஒலிபரப்பிவருகிறது மதுரை வானொலி.

'ஒப்பனையாளரைச் சந்திப்போம்' (தாய்வீடு) என்ற பேட்டி நிகழ்ச்சி, 13 வாரங்களுக்குத் தொடர்நிகழ்ச்சியாக ஒலிபரப்பப்பட்டு வருகிறது. தலை அலங்காரம், கண் பாதுகாப்பு, முகஅழகு, நகஅழகு என ஒவ்வோர் உறுப்புக்கும் ஒவ்வொரு வார நிகழ்ச்சி முக்கியத்துவம் அளிக்கிறது.

11. உடல்நலம்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'. அந் நோயற்ற வாழ்வு வாழ எளிய வழிமுறைகளைத் தருகிறது மதுரை வானொலி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடும்ப உறுப்பினர்களின் உடல்நலம் பெரும்பாலும் மகளிரைச் சார்ந்தே இருக்கிறது என்பதை உணர்ந்து மதுரை வானொலியானது மகளிர் நிகழ்ச்சிகளின் போது உடல்நலம் சார்ந்த மருத்துவக் குறிப்புகளை அடிக்கடி ஒலிபரப்பி வருகிறது.

நீரிழிவு நோய், இதயநோய், மஞ்சள்காமாலை போன்ற வலிய நோய்களைக் கூட வருமுன் தடுக்கலாம் என்று மருத்துவக் குறிப்புகள் மூலம் கூறுகிறது மதுரை வானொலி.

'எளிய வைத்திய முறைகள்', 'மருத்துவக் குறிப்புகள்' என்ற சிறுசிறு தலைப்புகளில் உடல்நலம் சார்ந்த மருத்துவக் குறிப்புகளைத் தருகிறது.

அவற்றுடன், 'மகளிருக்கு ஏற்ற யோகாசனங்கள்' போன்ற மகளிருக்கான சிறப்புத் தலைப்புகளிலும் உரைகள் முதலியன ஒலிபரப்பப்படுகின்றன.

அதுபோன்ற குறிப்புகளைக் கேட்பதன் மூலம் குடும்ப உறுப்பினருக்கு வரும் சிறுசிறு நோய்களுக்குக் குடும்பப் பெண்களே தீர்வுகாண முடிகிறது.

12. **சாதனை மகளிர்**

ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் முன்னேற யாரேனும் ஒருவரை முன்மாதிரியாகக் கொள்வர். அதனடிப்படையில் மகளிர் முன்னேற, சில சாதனை மகளிர் பற்றிய குறிப்புகளைத் தருகிறது மதுரைவானொலி.

இந்திரா காந்தி, சரோஜினி நாயுடு, அன்னிபெசண்ட் அம்மையார், அன்னை தெரசா, மார்க்கரெட் தாட்சர், பேநசீர் புட்டோ முதலான பெண்மணிகள் தம் வாழ்க்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யில் உயர்ந்த விதத்தை மதுரை வானொலி, உரை களாகத் தயாரித்து மகளிர் நிகழ்ச்சிகளின் போது ஒலிபரப்புகிறது.

இப்படி, உலகம் போற்றும் தலைவியர் தவிர, மாவட்ட ஆட்சியாளர், மருத்துவர், பொறியியலாளர், வக்கீல், சமூகசேவகி எனப் பல பொறுப்புகளில் ஈடுபட்டுள்ள மகளிரையும் பேட்டி காண்கிறது மதுரை வானொலி. அவர்கள் எதிர் கொண்ட சிக்கல்கள், அவற்றைச் சமாளித்து முன்னேறிய வழிமுறைகள் போன்றவற்றை அவர்களிடமே உரையாடி, அவர்களின் நேரடி அநுபவங்களைக் கேட்டு ஒலிபரப்புவதன் மூலம், மகளிர், பல தகவல்களைப் பெற முடிகிறது.

'இன்றைய விருந்தினர்' (தாய்வீடு) என்ற தலைப் பில் ஒரு பேட்டி நிகழ்ச்சியைத் தொடர் நிகழ்ச்சியாக மதுரை வானொலி ஒலிபரப்பி வருகிறது. ஒவ்வொரு வாரமும் வெவ்வேறுபட்ட துறைவல்லுநர் ஒருவரைப் பேட்டி காண்கிறது.

மேலும், 'சங்கமம்' (தாய்வீடு) என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடலை ஒலிபரப்புகிறது. அந்நிகழ்ச்சியில் பல்வேறுபட்ட துறைவல்லுநர்களைச் சந்திக்கச் செய்கிறது. ஒரு மருத்துவர், ஒரு சமூக சேவகி, ஒரு வீட்டுத் தலைவி எனப் பல்வேறுபட்டவர்களைச் சந்திக்கவைத்து, அவர்கள் தங்களுக்குள் தத்தம் துறை பற்றிய கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதாக அந்நிகழ்ச்சியை அமைத்து ஒலி பரப்பி வருகிறது.

பிற கூறுகள்

மேற்கூறிய உள்ளடக்கங்கள் தவிர, உலகச் செய்தி கள், நகைச்சுவைத் துணுக்குகள், சிறுசிறு சமையல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புகள் போன்ற பிற கூறுகளையும் கால நிரப்பிகளாக ஒலிபரப்பி வருகிறது மதுரை வானொலி.

மகளிருக்கெனத் தனிப்பட்ட நிகழ்ச்சிகளை அளித்து வரும் மதுரை வானொலி, சமுதாயத்தில் பெண்களின் பல்வேறு படிநிலைகளைக் காட்டுவதாக நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிப்பது குறிப்பிடத்தக்கது.

மகளிருக்குத் தன்னம்பிக்கையை ஊட்டுவதும், முயற்சியைப் பெருக்குவதும் உழைப்பை ஊக்குவிப்பதும் தாம் மகளிர் நிகழ்ச்சிகளின் நோக்கங்கள் என்று அறிய முடிகின்றது.

பெண்கல்வி, உடல்நலம், வரதட்சணைக்கொடுமை, கலப்புத்திருமணம், குடும்பக்கட்டுப்பாடு, சுற்றுப்புறச்சூழல், சாதனை மகளிர் எனப் பெண்களுக்குத் தேவையான பொருள்களில் பல நிகழ்ச்சிகளை அளிக்கிறது மதுரை வானொலி. ஆயினும் 'அழகுக் குறிப்புகள்' போன்ற சாதாரணத் தகவல்கள் குறைக்கப்பெறின் மகளிர் நிகழ்ச்சிகள் மேலும் சிறப்புப் பெறும்.

இத்தனை உள்ளடக்கங்கள் பெற்றுத் திகழும் மகளிர் நிகழ்ச்சிகளுக்கு இன்னும் சிறிது நேரம் கூடுதலாக ஒதுக்கப்படவேண்டும். வாரத்திற்கு 40 நிமிடங்கள் என்பது மிகவும் குறைவான நேரப் பங்கீடாகத் தோன்றுகிறது.

உள்ளடக்கங்களைப் பொறுத்தவரையில் மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகள் பாராட்டப்பட வேண்டியவை. மகளிர் நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில் மதுரை வானொலியின் தகவல் தொடர்பு நோக்கம் நன்கு நிறைவேறியுள்ளது எனலாம்.

குறிப்புகள்

1. 11-1-91 — 'பூந்தோட்டம்' நிகழ்ச்சி
2. 28-1-92 — 'தாய்வீடு' நிகழ்ச்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 7-1-91 — மேற்படி
4. 4-3-91 — மேற்படி
5. 11-3-91 — மேற்படி
6. 25-3-91 — மேற்படி
7. 18-3-91 — மேற்படி
8. 22-3-91 — ‘பூந்தோட்டம்’ நிகழ்ச்சி
9. 11-1-91 — மேற்படி
10. 11-2-91 — ‘தாய்வீடு’ நிகழ்ச்சி
11. 25-2-91 — மேற்படி
12. 8-3-91 — ‘பூந்தோட்டம்’ நிகழ்ச்சி
13. 4-3-91 — ‘தாய்வீடு’ நிகழ்ச்சி
14. 4-1-91 — ‘பூந்தோட்டம்’ நிகழ்ச்சி
15. 15-3-91 — மேற்படி
16. ‘தாய்வீடு நிகழ்ச்சி—13 வார நிகழ்ச்சித் தொடர்
17. மேற்படி
18. மேற்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. மகளிர் நிகழ்ச்சிகளின் வடிவம்

தகவல் தொடர்பில் தகவல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வாய்ந்தது அத்தகவல் சொல்லப்படும் வடிவமும். எந்தவொரு தகவலும், உரிய வடிவத்தில் சொல்லப்படும்போது தான் வெற்றி பெறுகிறது. வடிவம் சரியில்லாததால் தோற்றுப் போன தகவல்களெல்லாம் உண்டு.

வானொலி, கேட்பதற்கு மட்டுமே உரிய சாதனம். இதில் ஒலிவடிவம் மிக முக்கியம்.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் பல வடிவங்கள் கையாளப்படுகின்றன. அவற்றின் தன்மைகள் குறித்தும், அவற்றுக்கு மக்களிடையே உள்ள வரவேற்பு குறித்தும் இவ்வியல் ஆராய முற்படுகிறது.

நிலையான வடிவங்கள்

கட்டுக்கோப்பான வடிவங்கள், மகிழ்வுக்கூறுகள் சேர்ந்த சிறிது நெகிழ்ச்சியான வடிவங்கள் என வானொலி யின் நிகழ்ச்சி வடிவங்கள் பிரிக்கப்படுகின்றன.

அவ்வகையில் மதுரை வானொலி:

1. உரை (Talk),
2. உரைச்சித்திரம் (Documentary feature),
3. பேட்டி,
4. கலந்துரையாடல் - ஆகிய கட்டுக்கோப்பான வடிவங்களையும்,
5. பல்சுவை நிகழ்ச்சிகள்,
6. பட்டிமண்டபம்,
7. பாடல்,
8. நாடகம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலிய நெகிழ்ச்சியான வடிவங்களையும் தன் நிகழ்ச்சிகளில் பயன்படுத்துகிறது.

1. உரை

ஒருவரே உரையாற்றுவதாய் இவ்வடிவம் அமைகிறது.

''வானொலி உரை மேடைப்பேச்சன்று; அப்படி அமையவும் கூடாது. நேயர்களின் கண்ணுக்குப் புலப்படாமல் ஆனால் அவர்களின் செவிக்கு நெருக்கமாகவும் அவர்களின் கவனத்தைக் கவர்வதாகவும் அது அமைகிறது. ஒவ்வொரு நேயரிடமும் அவர்களுக்காக மட்டுமே பேசுவதான ஒரு தோற்றத்தை வானொலி உரை உருவாக்க வேண்டும்''[1].

ஒருதுறையில் வல்லுநராகிய பெண்மணி ஒருவரை அழைத்து அவருடைய துறை பற்றிய அறிவைப் பிற மகளிருக்கும் அளித்து அவர்களை உயர்த்துவதே இவ்வடிவத்தின் நோக்கம். துறைபற்றிய செய்திகளை அவர் வரிசைப்படுத்தி உரையாற்றும்போது கேட்பவர்கள், செய்தியை நிரல்படக் கேட்க முடிகிறது. அதனால் செய்தியில் வரும் ஐயம் நீங்குகிறது; தெளிவு பிறக்கிறது.

''வானொலி உரையில் அமையப்பெறும் சொற்கள், எளிமை, தெளிவு, விளக்கம், ஆற்றல் ஆகியன வாய்க்கப்பெற்றிருக்க வேண்டும். தொடர்கள் (Sentences) கூட்டு வாக்கியங்களாகவோ கலவை வாக்கியங்களாகவோ அமையாமல் சாதாரண வாக்கியங்களாக அமைய வேண்டும். உரையை எழுதும்போதும், அதைப் பேசும்போதும் ஓர் ஆற்றொழுக்கான நடை பின்பற்றப்பட வேண்டும்''[2].

கல்வி பற்றிய செய்திகளுக்குப் பெரும்பாலும் உரை வடிவமே வரவேற்கப்படுகிறது. காரணம் அவ்வடிவத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகமான விலகல்கள் (Divertions) இல்லை. எனவே செய்தி நீர்த்துப்போகாமல் கிடைக்கிறது.

'குழந்தை வளர்ப்பு ஒரு கலை' என்ற தலைப்பில் ஓர் உரை ஒலிபரப்பானது. அவ்வுரையில் குழந்தைகளைக் கவனிக்க வேண்டியதன் அவசியம், பெற்றோர் குழந்தைக்குக் கொடுக்கவேண்டிய சுதந்திரம், குழந்தையைத் திருத்தும் கண்டிப்பு, குழந்தையின் மனநிலையை அறிந்து பெற்றோர் செயல்படுதல் ஆகியவை நிரல்பட இடம் பெற்றன. அப்படிப்பட்ட செறிவு, நிகழ்ச்சியில் ஒரு கூட்டுப் பொருத்தத்தை (Coherence) - தொடர்ச்சியைக்கொடுக்கிறது.

ஆனாலும் அவ்வடிவம் மக்களால் குறைந்த அளவிலேயே விரும்பப்படுகிறது. காதால் மட்டுமே கேட்டு அறியக்கூடிய செய்தியாதலின், கேட்போர் 10 நிமிடத்திற்கு மேல் ஆழ்ந்த கவனம் (Concentration) செலுத்துவது கடினம். எனவே மதுரை வானொலியானது எவ்வளவு பெரிய உரைப் பொருளாயினும் அதிக அளவு 15 நிமிடமும் குறைந்த அளவு 10 நிமிடமுமே உரை அமையுமாறு பார்த்துக் கொள்கிறது.

மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் அதிகமாகக் கையாளப்படும் வடிவம் 'உரை'யே ஆகும்.

2. உரைச்சித்திரம்

உரையினின்று சிறிதளவு வேறுபட்டது இது.

''வானொலி உரைச்சித்திரங்கள், வழக்கமாக உண்மை விளம்பிகளாகவும், தகவல் தெரிவிப்பனவாகவும், சில சமயங்களில் அறிவுறுத்துவனவாகவும் அமையும். நிகழ்வுகளின் கதை, அவற்றின் இறந்தகால, நிகழ்காலப்போக்குகள் மற்றும் எதிர்காலத்தில் அவை அமையக்கூடிய விதம் முதலியவற்றைக் கூற, உரை மற்றும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாடகத்தின் சிறப்புக்கூறுகளை இவை எடுத்துக் கொள்கின்றன''[3].

உரையின் இடையிடையே இசை கொடுத்தும், உரையில் வருணனை முதலிய சில சுவையான கூறுகளைச் சேர்த்தும் இவ்வடிவம் தயாரிக்கப்படுகிறது.

'பெருகி வரும் பெண் குற்றவாளிகள்'[4] என்ற தலைப்பில் ஒலிப்பரப்பான உரைச்சித்திரத்தை இதற்குச் சான்று காட்டலாம்.

உரையைக் 'கட்டுரை' (Article) என்றால், உரைச்சித்திரத்தைத் 'தனிச்சிறப்புக்கட்டுரை' (Feature article) எனலாம்.

"உரையாற்றுபவரின் பொருத்தமான குரல், பொருத்தமான பின்னணிக் கூறுகள், இசை போன்றவை உரைச்சித்திரத்துக்கு மெருகூட்டுகின்றன''[5].

இவ்வடிவம் மக்களால் உரையைவிடச் சற்றுக் கூடுதலாக விரும்பப்படுகின்றது. ஆனால் மதுரை வானொலியில் உரைச்சித்திரங்கள் குறைவாகவே இடம்பெறுகின்றன. காரணம் இவ்வடிவத்தில் நிகழ்ச்சியைத் தயாரிக்கச் செலவு மிகுவதுடன், இசையமைப்பும் இடம்பெற வேண்டி இருப்பதால் நிறையப் பேர் உதவிக்குத் தேவைப்படுகின்றனர்.

3 பேட்டி

ஒருவர் மற்றொருவரை நேர்முகம் காண்பதாக இவ்வடிவம் அமைகிறது. அதாவது, துறைவல்லுநர் ஒருவரைச் சந்தித்து, அத்துறையில் அவருடைய அனுபவங்களைக் கேள்விகள் கேட்டு அறிவதாக இவ்வடிவம் அமைகிறது.

'அச்சகத்தையும் ஆளலாம்' என்ற தலைப்பில் ஒலிபரப்பப்பட்ட நேர்முகத்தை இங்குச் சான்று காட்டலாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுயமாக அச்சகம் தொடங்கி வெற்றிகரமாக நடத்தி வரும் ஒரு பெண்மணியைப் பேட்டி கண்டது அந்நிகழ்ச்சி.

சுயமாகத் தொழில் தொடங்குவதில் மகளிருக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள், அவற்றை எதிர்கொள்ளக்கூடிய வழிமுறைகள் போன்றவை அப்பெண்மணியிடமிருந்து கேட்டறியப்பட்டன அந்நிகழ்ச்சியைக் கேட்ட பிற மகளிருக்கும் சுயதொழில் முனைவில் ஈடுபாடு வருமாறு அப்பேட்டி அமைந்தது.

'இன்றைய விருந்தினர்' என்ற தலைப்பில் ஒரு பேட்டி நிகழ்ச்சியை மதுரை வானொலி நிரந்தரமாக ஒலிபரப்பி வருகிறது. சாதனை மகளிர், உயர் பதவியிலிருக்கும் அதிகாரியின் மனைவி முதலியோருடன் நேர்முகம் காண்பதாக அந்நிகழ்ச்சி அமைகிறது.

மாவட்ட ஆட்சியாளர் பதவி வகிக்கும் பெண்மணி ஒருவருடன் நிகழ்த்தப்பட்ட பேட்டியைச் சாதனை மகளிர்ப் பேட்டிக்குச் சான்று காட்டலாம். மகளிர், பட்டமேற்படிப்புப் படிப்பதன் மூலம் பெறும் சமுதாய மதிப்பு, சமூகப் பணியில் ஈடுபடும்போது மகளிர் கவனத்தில் கொள்ள-வேண்டியவை பற்றி அவரிடம் கேட்டறியப்பட்டது. ஒரு பெண்மணியே அவை பற்றிப் பேசும் போது 'பொருள்' சிறக்கிறது.

மாவட்ட ஆட்சியாளர் ஒருவரின் மனைவியுடன் நிகழ்த்தப்பட்ட பேட்டியையும், இங்குக் குறிப்பிடவேண்டும். 'வெற்றிபெற்ற ஒவ்வொர் ஆண்மகனுக்கும் பின்னால் ஒரு பெண்மணி இருக்கிறாள்' என்ற உலகக்கூற்று இப்பேட்டி-யின்போது நிறுவப்பட்டது.

பேட்டி நிகழ்ச்சியின்போது பேட்டி காண்பவர், கருத்தில் கொள்ளவேண்டிய செய்தி ஒன்று உண்டு. "பேட்டியைப் பற்றி ஒரு தொடக்க உரை தர வேண்டும்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேட்டியின் நோக்கத்தையும் பேட்டியின் சாரத்தையும் முதலிலேயே சொல்லி விடுதல் நல்லது.

பேட்டியாளர் அளிக்கும் விடைகள்தாம் முதன்மையான இடம் பெறவேண்டும். கேட்கப்படும் கேள்விகள் துணை இடத்தைத் தான் பிடிக்க வேண்டும். கேள்விகள் மேலோங்கித் தெரியும்படி பேட்டி அமையக்கூடாது''[6].

ஆனால் மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் சில சமயம், கேள்விகள் மேலோங்கித் தெரியும் நிலை தோன்றிவிடுகிறது. குறிப்பாகக் கிராமப்புற மகளிரிடம் நிகழ்த்தப்படும் பேட்டியின்போது இந்நிலை காணப்படுகிறது.

'பெண்கள் அன்றும் இன்றும்'[7] என்ற தலைப்பில் ஒலிபரப்பான பேட்டியை இதற்குச் சான்று காட்டலாம். அதில் பேட்டி காணப்பெற்றவர் ஒரு கிராமத்து மூதாட்டி. பேட்டி கண்டவர் அம்மூதாட்டிக்குக் கேள்வியைப் புரிய வைக்குமுகமாக அதிகமாகப் பேசிக்கொண்டே போனார். அம் மூதாட்டியோ எத்தனைப்பெரிய கேள்விக்கும் ஓரிரு வார்த்தைகளிலேயே 'அளந்து அளந்து' அதாவது 'ஆம்', 'இல்லை' போன்ற பதில்களையே தந்தார். நிகழ்ச்சியின் இறுதிவரை அம்மூதாட்டி பேட்டியின் தலைப்பை நெருங்கவே இல்லை. பேட்டி கண்டவரும் அதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை.

இம்மாதிரிப்பேட்டிகள் மகளிர் நிகழ்ச்சிகளில் இடம் பெறுவதால் ஒரு பயனும் இல்லை என்று நேயர்களின் முணுமுணுப்பு எழுகிறது.

மற்றபடி, இருவர் அடுத்தடுத்துப் பேசுவதாக அமைவதாலும் வினாத்தொடுத்து விடைபெறும் அமைப்பில் அமைவதாலும் இவ்வடிவம் கூடுதலாக விருப்பப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை வானொலியில், 'உரைக்கு' அடுத்தபடியாக அதிகமாக இடம் பெறுவது இவ்வடிவமே.

4. **கலந்துரையாடல்**

குறைந்த அளவு மூன்றுபேரால் அமைகிறது இவ்வடிவம்.

1. ஒரே துறையைச் சேர்ந்த மூன்று வல்லுநர்களைக் கொண்டும்,

2. வெவ்வேறுபட்ட துறைகளைச் சேர்ந்த மூன்று வல்லுநர்களைக் கொண்டும் என, மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில், இவ்வடிவம் இருவகைகளில் அமைகிறது. முன்னைய நிகழ்ச்சி, கலந்துரையாடல் என்ற பெயரிலும், பின்னையது சங்கமம் என்ற பெயரிலும் ஒலிபரப்பாகின்றன.

'திருமணத்திற்கு முன்னும் பின்னும்'[8] என்ற தலைப்பில் அமைந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி, பெண்ணின் திருமண வாழ்க்கை பற்றியும், திருமணத்திற்கு முன்னும் பின்னும் அப்பெண் சந்திக்கக்கூடிய நிகழ்வுகள் பற்றியும் அலசி ஆராய்ந்தது.

'சங்கமம்' என்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் ஒரு பெண் எழுத்தாளர், ஒரு பெண் மருத்துவர், ஒரு குடும்பத் தலைவி ஆகிய மூவரும் சந்தித்தனர். ஒவ்வொருவரும் தத்தம் பணியில் உள்ள சிக்கல்களையும், அவற்றைச் சமாளிக்கக்கூடிய வழிமுறைகளையும், அவர்கள் அப்பணியில் அதுவரை பெற்ற அநுபவங்களையும் பரிமாறிக் கொண்டனர்.

அந்நிகழ்ச்சிக்குக் 'கலந்துரையாடல்' வடிவம் மிகப் பொருத்தமாக அமைந்தது. மேலும், இவ்வடிவம் மக்களால் பரவலாக விரும்பப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. பல்சுவை நிகழ்ச்சி

உரை, நாடகம், பாடல் எனப் பல வடிவங்களைத் தன்னுள் கொண்ட ஒரு கூட்டு வடிவமாகத் திகழ்கிறது இது.

பொங்கல் திருநாளன்று ஒலிபரப்பப்பட்ட 'மங்கலப் பொங்கல் பொங்குக'[9] என்ற நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிடலாம்.

பொங்கல் திருநாள் பற்றிய ஓர் உரை, பொங்கல் சீர் பற்றிய ஒரு சிறு நாடகம் (Skit), மெல்லிசைப் பாடல்கள்-முதலியன கொண்டு அந்நிகழ்ச்சி அமைந்தது.

இவ்வடிவத்தினால் பல சுவைகளைப் பல்வேறு வடிவங்களின் மூலம் ஒரே நேரத்தில் சுவைக்க முடிகிறது. ஆனால் ஒவ்வொரு வடிவமும் மிகக் குறைந்த நேரமே இடம்பெறுவதாலும், வடிவங்களின் உடனடி மாற்றத்தாலும் பெரும்பாலோர் இவ்வடிவத்தைக் குழப்பமான ஒரு வடிவமாகவே கருதுகின்றனர்.

6. பட்டிமண்டபம்

ஒரு பொருளின் இருகோணங்கள் பற்றி இரு அணிகள் வாதிடுவதாகவும் அவ்வணிகளின் வாதங்களை வைத்து ஒரு நடுவர் தீர்ப்புச் சொல்வதாகவும் இவ்வடிவம் அமைகிறது.

'கவனிக்கப்பட வேண்டியவர்கள் ஆண் குழந்தைகளா, பெண் குழந்தைகளா?' 'சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கப்பெரிதும் உதவுபவர்கள் ஆண்களா பெண்களா' என்ற தலைப்புகளில் ஒலிபரப்பான பட்டிமண்டபங்களை இங்குக் குறிப்பிடலாம்.

ஒரு பொருளின் இருகோணங்கள் ஒரே நேரத்தில் சொல்லப்படுவதாலும், நடுவரின் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பதாலும், வாதங்களின் நடுவே சில நகைச்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுவைத்துணுக்குகள் இடம் பெறுவதாலும் இவ்வடிவம் மக்களால் விரும்பி ஏற்கப்படுகிறது.

7. பாடல்

எவரையும் மயங்க வைப்பது இசை. இசையை அடிப்படையாகக் கொண்டு புனையப்படும் பாடல்கள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெறுவதில் வியப்பில்லை.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் பாடல் வடிவமும் பேரிடம் பெறுகிறது. மகளிர் நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பப்படும் பாடல்கள் மூவகைப்படுகின்றன. மெல்லிசைப்பாடல், திரைப்படப்பாடல், நாட்டுப்புறப்பாடல் என்பன அவை.

1. மெல்லிசைப்பாடல் - எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றிய முழு விவரங்களையும் பாடலாகப் புனைந்து இசையமைத்துப் பாடப்படும் பாடல் மெல்லிசைப்பாடல் எனப்படுகிறது.

கண்பாதுகாப்பு, கல்வி, இன ஒற்றுமை, வைட்டமின் ஏ போன்றவை பற்றி ஒலிபரப்பப்பட்டு வரும் மெல்லிசைப் பாடல்களை இங்குச் சுட்டலாம்.

இவைதவிரப் புகழ்பெற்ற பெரியோரின் நினைவு நாள், நூற்றாண்டு விழா முதலியவற்றில் அவர் பற்றிய பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. பாரதியார் நினைவுநாளன்று அவருடைய பாடல் ஒன்று இசையமைக்கப்பட்டு பாடப்பெற்றதை இங்குக் கூறலாம்.

2. திரைப்படப்பாடல்-மகளிர் தொடர்பான அன்றைய நிகழ்ச்சிக்குப் பொருத்தமான திரைப்படப் பாடலைத் தேர்ந்தெடுத்து நிகழ்ச்சியின் முடிவில் ஒலிபரப்புகிறது மதுரை வானொலி.

'குழந்தை வளர்ப்பு ஒரு கலை' என்ற உரை இடம் பெற்ற அன்று நிகழ்ச்சியின் முடிவில் 'மை டியர் குட்டிச்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாத்தான்' என்ற திரைப்படத்திலிருந்து, 'செல்லக் குழந்தைகளே' என்ற பாடல் ஒலிபரப்பப்பட்டதைச் சான்று காட்டலாம்.

3. நாட்டுப்புறப்பாடல் - எத்தனை மெல்லிசைப்-பாடல்கள் வந்தாலும் நாட்டுப்புறப் பாடல்களுக்கு இணை-யாகா என்றும், பல மெல்லிசைப் பாடல்களுக்கு நாட்டுப்-புறப் பாடல்கள் தாம் அடிப்படை என்றும் பரவலாகப் பேசப்படுகிறது. அத்தகு பெருமை வாய்ந்த நாட்டுப்புறப் பாடல்களும் மகளிர் நிகழ்ச்சிகளின்போது ஒலிபரப்பா-கின்றன.

முழு நிகழ்ச்சியும் பாடல் வடிவமாக இடம்பெறு-தில்லை. நிகழ்ச்சியின் முடிவில் ஐந்து அல்லது மூன்று நிமிடங்களுக்கு மட்டுமே இடம்பெறுகிறது. பெரும்பாலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாடல் இடம்பெறுகிறது என்பதை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

8. **நாடகம்**

"வானொலி நாடகம் என்பது ஒலியின் மூலம் மட்டுமே கதை சொல்வதாகும். அவ்வொலி, நாடக வசனங்களாகவும், இசையாகவும், சூழ்நிலைக்கு ஏற்ற ஒலிக்கூறுகளாகவும் அமைகிறது.

"வானொலி நாடக நேயர்கள், மூன்று அல்லது நான்கு பாத்திரங்களையே (குரல்கள்) கவனமாகக் கேட்க முடியும். ஆகவே 30 முதல் 60 நிமிடங்கள் வரை அமையும் வானொலி நாடகத்தில் மூன்று அல்லது நான்கு பாத்தி-ரங்களே முக்கியப் பாத்திரங்களாக அமைய வேண்டும்"[10].

குறைவான பாத்திரங்களும், குறைவான நிகழ்வு-களும் அமையப்பெற்ற சிறு நாடகங்கள் மதுரை வானொலி-யில் மகளிர் நிகழ்ச்சிகளின்போது ஒலிபரப்பாகின்றன. வரதட்சணைக் கொடுமை, குடும்பக்கட்டுப்பாடு, பெண்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்வி முதலிய பொருள்கள் குறித்து ஒலிபரப்பப்பட்ட சிறுநாடகங்களைக் குறிப்பிடலாம். ஆனால் இந்த ஆய்வுக் காலத்தில் மகளிர் நிகழ்ச்சிகளில் நாடகம் எதுவும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமப்புற மகளிர் நிகழ்ச்சியான பூந்தோட்டத்தில் 'உரை' என்ற வடிவமும் கூட நாடக வடிவத்தில் தொடங்குகிறது. அன்றைய நிகழ்ச்சியில் இடம் பெறப்போகும் உரை பற்றிய அறிமுகத்தை ஒரு கணவன்-மனைவி தம் உரையாடல் மூலம் அளிப்பதாகவும், உரை முடிந்தவுடன் அதுபற்றி அவர்கள் இருவரும் தமக்குள் வாதித்துக் கொள்வதாகவும் அந்நாடக வடிவம் அமைகிறது.

"வானொலி நாடகமானது மேடை நாடகத்தைப்போன்றே, ஒரு சிக்கல், பல பாத்திரங்கள், ஒரு தொடக்கம், ஒரு முடிவு, ஒரு உடல்பகுதி எனப் பல கூறுகள் கொண்டது. வானொலி நாடகத்தின் உச்சக்கட்டம் 'ஒலிகளாலேயே' உணர்த்தப்படுகிறது. பாத்திரங்களின் குரல்கள் ஒன்றினின்று ஒன்று வேறுபட்டு அமையவேண்டும். அப்போதுதான் நேயர்கள், குழப்பமின்றி நாடகத்தைக் கேட்க முடியும். பாத்திரத்திற்கேற்ற வசனங்களும் இசையும் கொடுக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நாடகம் சுவையாக இருக்க வேண்டும்"[11].

இவ்வியலில் கூறப்பட்ட வடிவங்கள் பொதுவாக வானொலியின் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும். ஆயினும் மகளிர் நிகழ்ச்சிகளில் கையாளப்படும் வடிவங்கள் குறித்துப் பேச வேண்டிய கட்டாயத்தினால் இவை இங்கு சிறிது விரிவாகப் பேசப்பட்டன. அது மட்டுமன்றி, இவ்வடிவங்கள் மகளிரால் எந்த அளவிற்கு விரும்பப் படுகின்றன என்றும் இவ்வியல் அறிய முற்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் பெரும் பாலும் உரை மற்றும் பேட்டி வடிவங்களே கையாளப்படுகின்றன. அதற்கு முக்கியமான காரணம் அவ்வடிவங்களில் நிகழ்ச்சிகளை உருவாக்குவது எளிது. மேலும் அந்நிகழ்ச்சிகளைத் தயாரிக்க நிர்வாகத்திற்கு ஏற்படும் பணச்செலவு குறைவு.

தவிர்க்க முடியாத நேரங்களில் கட்டுக்கோப்பான வடிவங்களைப் பின்பற்றுவதில் தவறில்லை. ஆயினும் மக்களின் விருப்பம் கருதி, மகிழ்வுக் கூறுகள் அடங்கிய வடிவங்களைத் தருதல் நலம். ஆனால் கூறப்படும் பொருள் நீர்த்துப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

பாடல் வடிவத்தில், திரைப்படப் பாடலே அதிக அளவில் விரும்பப்படுகிறது. எனவே, அன்றைய நிகழ்ச்சிக்கு ஏற்ற, சற்றும் விலகிச் செல்லாத திரைப்பாடலை ஒலிபரப்பவேண்டும். பொருந்தாத பாடலை ஒலிபரப்பினால் அந்நிகழ்ச்சி, 'சிறப்பு நேயர் நிகழ்ச்சி' யாக இல்லாமல், 'திரையிசை' நிகழ்ச்சியாக அமைந்துவிடக் கூடும். எனவே நிகழ்ச்சிக்கேற்ற பாடலைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து ஒலிபரப்ப வேண்டும்.

மதுரை வானொலியானது நிகழ்ச்சியின் வடிவங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. உள்ளடக்கத்துக்கு ஏற்ற வடிவத்தைத் தேர்ந்தெடுப்பதில் கவனத்துடன் செயலாற்றி வருகிறது. அதற்கேற்பவே மொழிநடை அமைய வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துகிறது.

குறிப்புகள்

1. Keval J. Kumar, Mass Communication In India, P.69.
2. Ibid. P.69.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. Ibid. P 68.
4. 18-2-91 — 'தாய்வீடு' நிகழ்ச்சி
5. Keval J. Kumar, Mass Communicaiton In India, P.68.
6. மா.பா.குருசாமி, இதழியல் கலை, ப.165
7. 5-4-91 — 'பூந்தோட்டம்' நிகழ்ச்சி
8. 25-3-91 — 'தாய்வீடு' நிகழ்ச்சி
9. 14-1-91 — மேற்படி.
10. Keval J. Kumar, Mass Communication In India, P.68.
11. Ibid, P.68.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. மகளிர் நிகழ்ச்சிகளின் மொழிநடை

மனிதனின் தொடக்ககாலத் தகவல் பரிமாற்றத்திற்குச் செய்கைமொழி பெரிதும் உதவியது. ஆனால் மொழி நன்கு வளர்ந்துள்ள நிலையில், அவனுடைய தகவல் தொடர்பில் 40 விழுக்காட்டு இடத்தை மொழியானது பெற்றுவிட்டது.

தகவல் தருநருக்கும், பெறுநருக்கும் இடையேயான புரிந்துகொள்ளலுக்கு அடிப்படையாக அமைவதே இம்மொழிதான் எனலாம்.

தகவல் தொடர்பின் பின்னணி

தகவல் தொடர்பு நிகழ்வில் தருநர் மற்றும் பெறுநரின் 'பின்னணி' முக்கியமானது. யார், யாரிடம், எதற்காக, எங்கே, எதன்மூலம் தகவல் தொடர்பு கொள்கிறார்கள் என்பதை வைத்துத் தான் 'மொழிநடை'யைத் தீர்மானிக்க முடியும்.

ஓர் உயரதிகாரி, தம்மையொத்த அதிகாரிகளிடம் பயன்படுத்தும் மொழிநடை வேறு; தம் கீழ்நிலை ஊழியரிடம் பயன்படுத்தும் மொழிநடை வேறு; ஆசிரியர், சக ஆசிரியரிடம் பேசும்போது பயன்படுத்தும் மொழிநடை வேறு; வகுப்பில் பாடம் நடத்தும்போது பயன்படுத்தும் மொழிநடை வேறு; அவ்வாறே மேடைப்பேச்சில் பயன்படுத்தப்படும் மொழிநடை வேறு; விளம்பரங்களில் பயன்படுத்தப்படும் மொழிநடை வேறு. ஆக, மொழிநடையானது தருநர் மற்றும் பெறுநரின் பின்னணியைச் சார்ந்தே அமைகிறது.

வானொலியின் கேட்டல் பண்பு

"வானொலி 'கேட்டல்' பண்பு ஒன்றினை மட்டுமே கொண்டிருப்பது அதற்குரிய பலவீனமன்று; உண்மையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்பண்பு தான் வானொலியின் வலிமையே'' என்கிறார் வில்பர் ஷ்ரம்.

வானொலியில் கேட்பு மட்டுமே நிகழ்வதால் செய்கைகளையோ உடலசைவுகளையோ வானொலி மூலம் நேயர்கள் பார்க்க முடியாது. வானொலியின் தகவல் தொடர்பில் மொழியும் ஒலியுமே முக்கிய இடம் பெறுகின்றன. இந்நிலையில், மொழிதான் சிறந்து நின்று நேயர்களைக் கவர வேண்டும்.

மொழிநடை

'மனிதனின் உரையாடலானது எதிராளியின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கத்துடனே அமைகிறது' என்கிறார் மொழியியலறிஞர் கிரைஸ் (Grice). இரண்டு மனிதர்களுக்கிடையே அமையும் உரையாடலிலேயே இப்படியாயின் பெருவாரியான மக்களுடன் கொள்ளும் தகவல் தொடர்பில் உயர்ந்த நோக்கமும், மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில் தீவிரமான செயற்பாடும் மிக முக்கியம்.

மொழிநடையைச் சொல், தொடர் முதலிய கூறுகளே நடத்திச் செல்கின்றன.

சொல்

தமிழ்ச் சொல்லானது பழந்தமிழ்ச் சொல், வழக்கிறந்த சொல், அழகுதமிழ்ச்சொல், பழகுதமிழ்ச்சொல் (பேச்சுவழக்குச் சொல்), கொச்சை வழக்குச் சொல், பிறமொழிக் கலப்புச் சொல் எனப் பல வகைகளைக் கொண்டது.

அவற்றுள், சூழ்நிலைக்குத் தக்க சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதலே உகந்தது. 20 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கூடப் பழங்காலத் தமிழ்ச் சொற்களை விடாப்பிடியாகப் பயன்படுத்தி வந்திருக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றனர். ஆனால் பாரதியார் போன்றோர் வழக்கிலிருந்த வடமொழி மற்றும் ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்தி மொழிநடையைக் கையாண்டிருக்கிறார்கள். 20 - ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அறிஞர் அண்ணா போன்றோரால் அழகுதமிழ்ச் சொற்கள் அரங்கேறின. ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகிய இக்காலக் கட்டத்தில் பழகுதமிழ்ச் சொற்களும், பிறமொழிச் சொற்களுமே அதிக அளவில் இடம்பெறுகின்றன. இம் மொழிநடை மாற்றமானது 'புரிந்துகொள்ளும் ஆற்றலை ஓரளவு வளர்ந்துள்ளது எனலாம்.

'பேருந்து' என்றோ, 'பயணச் சீட்டு' என்றோ கூறினால் ஏதோ புதுமொழி பேசும் புதியவராக நம்மை ஏற இறங்கப் பார்ப்போர் மிகுந்துவிட்டனர். 'பஸ்' என்றும், 'டிக்கெட்' என்றும் கூறிய பிறகு. 'ஹாங்! அப்படிப் புரியற மாதிரிப் பேசு' என்று நமக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கிவிட்டுப் பதிலளிப்போர் பெருகி-விட்டனர். இந்நிலையில் மக்களுக்கு நன்கு பழகிவிட்ட பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதில் எள்ளளவும் தவறில்லை என்பது தெள்ளத் தெளிவாகிறது.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் மேற்கூறிய பிறமொழிக் கலப்புப் பரவலாக மேற்கொள்ளப்படுகிறது.

பேட்டி, கலந்துரையாடல், நாடகம் முதலான வடிவங்களில் மிகச் சாதாரணமாகவும், உரை முதலான எழுதி வாசிக்கப்படும் வடிவங்களில், ஆங்காங்கே தமிழ் மொழிபெயர்ப்புக்கு அருகே அடைப்புக் குறிகளில் இடம்பெற்று எப்போதாவதும் பிறமொழிச் சொற்கள் கையாளப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

"Presented Free of Cost
with compliments from the
Central Institute of Indian Languages
(Govt. of India) MYSORE-570 006"
Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டுப்புற மகளிர்க்கான நிகழ்ச்சிகளில்கூடக் கிராம மக்கள் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்கள் அப்படியே இடம்பெறுகின்றன.

சான்று

'பெண்கள் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் கிராம மூதாட்டி ஒருவர் பேட்டி அளித்தார். வெகு சாதாரணமாக, 'எனக்கு வயசு கரெக்டா (Correct) 80 ஆகுதுங்க' என்றும், 'அந்தக் காலத்துல பொம்பளைங்க ஃப்ரீயாப் (Free) பேசமுடியாது; 'நைட்' (Night) நேரத்துல வெளியே போக முடியாது' என்றும் ஆங்கிலச் சொற்களை அடுக்கிப் பேசினார்.

ஆக, மக்களுக்குப் புரியக் கூடிய சொற்களை பயன்படுத்துவதில்-அது எம்மொழிச் சொல்லாயினும்-தவறில்லை என்பது இதனால் புலப்படுகிறது. ஆனால் எப்படிப்பட்ட நிலையிலும் கொச்சைச் சொற்களும், சிலேடைச் சொற்களும் தவிர்க்கப்பட வேண்டும். ஒரே சொல், திரும்பத் திரும்ப இடம்பெறுவது நேயருக்குச் சலிப்பை உண்டாக்குமாதலால் அதுவும் தவிர்க்கப்பட வேண்டும்.

தொடரமைப்பு

அடுத்து, மொழியில் முக்கியப் பங்கு வகிப்பது தொடர்

தொடரானது, கூட்டு வாக்கியங்களாகவோ, கலவை வாக்கியங்களாகவோ அமைந்தால் படிப்பவருக்கும் கேட்ப-வருக்கும் குழப்பங்கள் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. எனவே, படைப்பாளர், இயன்ற வரை சாதாரண வாக்கியங்களைப் (Simple Sentences) பயன்படுத்துவதே நலம் பயக்கும். 'சொல்ல வந்த செய்தியைச் சுற்றி வளைக்காமல் சொல்லுவதே ஒரு கலை' என்பர் அறிஞர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சான்று

'குழந்தை வளர்ப்பு ஒரு கலை' என்ற தலைப்பில் ஒலிபரப்பான உரை அவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

"குழந்தையின் முதல் உலகம் அதன் வீடும், பெற்றோரும்தாம். குழந்தைகளை நன்கு வளர்ப்பதில் தொடக்கம் முதலே பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு நிரம்பச் சுதந்திரமும் கொடுத்துவிடக் கூடாது; அதே சமயத்தில் அதிகமான அடக்குமுறையும் கூடாது.

சுதந்திரத்தை மூவகைப்படுத்தலாம்,

1. அடக்குமுறை (Suppression)
2. அளவான சுதந்திரம் (Limited freedom)
3. கட்டுமீறிய சுதந்திரம் (Extra-ordinary freedom) என்பன அவை.

அடக்குமுறை என்பது எடுத்ததற்கெல்லாம் அங்கே போகாதே இங்கே போகாதே என்று பயமுறுத்திக் குழந்தையை அடக்குவது. அதனால் குழந்தை, சிறுவயது முதலே கோழையாக வளர்ந்துவிடும்.

அடுத்தது அளவான சுதந்திரம். அதில் சுதந்திரம் அளவறிந்து கொடுக்கப்படும். காரண காரியத்துடன் குழந்தையைக் கட்டுப்படுத்துதல் அவ்வகையில் அடங்கும். எடுத்ததற்கெல்லாம் முட்டுக்கட்டை போடாமல், குழந்தையைச் சுதந்திரமாக வளரவிடுவது. ஆனால் குழந்தை அச்சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்த முற்படும் போது. அதன் தவற்றைச் சுட்டிக் காட்டி, அத்தவற்றால் நிகழக்கூடிய தீமைகளை எடுத்துக்கூறிக் குழந்தையை நல்வழிப்படுத்துவது. அப்படி வளரும் குழந்தையானது தான் வளர்வதுடன் சமுதாயத்தையும் நல்ல முறையில் உருவாக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்து வருவது, கட்டுமீறிய சுதந்திரம். குழந்தை என்ன செய்தாலும் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவது. அப்படிப்பட்ட வளர்ப்பினால் குழந்தை, நன்மை தீமை எதுவென்று பகுத்தறியும் திறன்பெறாமல் வளர்ந்துவிடும். பிற்காலத்தில் அது 'தான்தோன்றி'யாக மாறிவிடுவதுடன், சமுதாயத்தையும் சீர்குலைத்து விடும்.

எனவே, குழந்தை வளர்ப்பின்போது இரண்டாவதாகச் சொல்லப்பட்ட அளவான சுதந்திரமே பின்பற்றப்பட வேண்டும். அப்போதுதான் பெற்றோரும் மற்றோரும் அக் குழந்தையின்மூலம் மகிழ்ச்சியைக் காண முடியும்'' என்று இப்படியாக அமைந்த அவ்வுரை மகளிரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. காரணம், செய்திகள் சிறுசிறு தொடர்களில் அமைந்ததுடன், பேச்சு வழக்குச் சொற்களே கையாளப்பட்டன. அப்படி அமையும் உரைகள், வானொலி நேயரிடம் உரையாளரே நேரில் வந்து பேசுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றன'.

மொழிநடை என்பது 'சொற்களின் கோவை மட்டுமன்று; பேசும்போது அது, உச்சரிப்புத் திறன், ஏற்ற இறக்கம், குரல்வளம் ஆகிய கூறுகளையும் உள்ளடக்கி நிற்கிறது.

உச்சரிப்புத் திறன்

எந்த ஒரு சொல்லையும் உச்சரிக்கும் விதத்தால் அழகுபடுத்தி விடலாம் என்பர். சான்றாகப் 'பழம்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். அச்சொல் சென்னைப் பகுதியில் 'பயம்' என்று உச்சரிக்கப்பட்டு, ஒருவிதப் பயத்தை நினைவில் உண்டாக்கி விடுகிறது. மதுரைவாழ் மக்கள் சிலரால் 'பலம்' என்றும் 'பளம்' என்றும் உச்சரிக்கப்பட்டு, 'பழம்' என்ற சொற்பொருள் சிதைவடைந்து போகிறது. 'பழம்' என்று சொல்லும்போதே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்பழத்தின் சுவையும் இனிமையும் புலப்படுகின்றன. அவ்வாறே ஒவ்வொரு சொல்லும் உச்சரிக்கும் விதத்தாலேயே பல்வேறு வகையில் நம் மனத்தைத் தொட்டுவிட முடியும்.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் உச்சரிப்புத் தகராறு இருந்துவருகிறது. வானொலி நிலைய அறிவிப்பாளர்களைப் பொறுத்தவரையில் இந்தச் சிக்கல் இல்லை; பங்கேற்போரிடம்தான் இந்தச் சிக்கல் எழுகிறது. துறைவல்லுநர் ஒருவரிடமிருந்து கருத்துகளைப் பெறும்போது, அவருடைய கருத்துகளை உத்தேசித்து, அவருடைய தவறான உச்சரிப்பையோ, சீரற்ற குரல்வளத்தையோ பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

அப்படிப்பட்ட நேரங்களில் சிக்கலில் இருந்து ஓரளவு தப்ப வழியுண்டு. அதாவது உச்சரிப்புத் தகராறு உள்ள ஒருவர், உரை தயாரிக்கும்போது, அவருக்கு எந்த எழுத்தில் பிழை நேருமோ, அந்த எழுத்தைக் குறைவாகக் கையாளலாம். சான்றாக, சிறப்பு ழகரத் தகராறு உள்ளவராயின் ‘பழம்’ என்ற இடத்தில் ‘கனி’ என்றும், ‘வழி’ என்ற இடத்தில் ‘பாதை’ என்றும் மாற்றுச் சொற்களைப் பயன்படுத்தலாம். அதன்மூலம் உச்சரிப்புப் பிழையை அடிக்கடி செய்யாமல் அவர் ஓரளவு தப்பித்துக் கொள்ளலாம்.

சான்று

‘பிள்ளைகளின் படிப்பில் பெற்றவர்களின் பங்கு’ என்ற உரையின் பங்கேற்பாளர், முதல் இருமுறை ‘குழந்தை’ என்ற சொல்லைப் பயன்படுத்திப் பேசினார். சிறப்பு ழகரம் தட்டவே அடுத்து வந்த இடங்களிலெல்லாம் ‘பிள்ளை’ என்று மாற்றிப் பேசினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏற்ற இறக்கம்

தகவலின் முழுமையான புரிந்துகொள்ளலே இந்த இசைத்தொனியால்தான் (Intonation) நிகழ்கிறது எனலாம்.

'போய் வா' என்ற சொல்லிலேயே வெறும் ஏற்ற இறக்கத்தின்மூலம் நவரசத்தையும் காட்டி விடலாம். ஆனால் இசைத்தொனியை இடம், பொருள், ஏவல் அறிந்து வெளிப்படுத்த வேண்டியது மிக முக்கியம்.

ஏற்ற இறக்கமில்லாமல் ஒரே மாதிரியாகச் சத்தமில்லாமல் பேசுபவர் கிண்டலுக்கு உள்ளாகிறார். 'செத்தவன் கையில் வெற்றிலை பாக்கு கொடுத்த மாதிரி' என்ற உவமைப் பழமொழியின்மூலம் பரிகசிக்கப்படுகிறார். ஏற்ற இறக்கமில்லாமல் உரக்கப் பேசுபவர் அதிகமான கிண்டலுக்கு உள்ளாகிறார். காரணம் ஆற்றலும் அழகும் அழிந்து போகிறது. சுவையற்ற இயந்திரத் தன்மை ஏற்பட்டுவிடும். அதனால் 'அப்பப்பா! பனைமட்டை மேல் மழை பெய்தாற்போல் எப்படிக் கத்தறான் பாரு' என்று பரிகசிக்கப் படுகிறார்.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் ஏற்ற இறக்கங்கள் நல்ல முறையிலேயே இடம்பெறுகின்றன. வானொலி நிலைய அறிவிப்பாளர்களுக்கும் சரி, நிகழ்ச்சிப் பங்கேற்பாளர்களுக்கும் சரி, ஏற்ற இறக்கம் சுத்தமாக உள்ளது.

100037

'வார்த்தைகள் வலுவானவை' என்ற தலைப்பில் ஒலிபரப்பான உரையை இதற்குச் சான்று காட்டலாம்.

"எதிரிலிருப்பவர் நம் தவற்றைச் சுட்டிக் காட்டினால், ஒன்று நாம் திருந்த வேண்டும். அவரது கருத்துத் தவறாயின், 'நாம் செய்தது சரிதான்' என்று மென்மையாகக் கூறி விளக்கவேண்டும். அதை விடுத்து, 'உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? பெரிசா சொல்ல வந்துட்ட,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சரிதான் போ' என்றோ, 'நீ ரொம்ப ஒழுங்கோ? என்ன தகுதியின் அடிப்படையில் என்னைக் குறைசொல்கிறாய்? என்றோ முறித்துப் பேசக் கூடாது'' என்று இவ்வாறாக அமைந்துள்ளது அவ்வுரை.

உரையாளர், அவ்வுரையை நிதானமாகவும், 'உன்னைப் பற்றி...' என்ற இடத்தை வெகு அலட்சிய மாகவும் படித்தபோது அவரே நேயர்களுடன் நேரில் பேசுவதுபோல் இருந்தது.

சரியான ஏற்ற இறக்கங்களுடன் அமையும் நிகழ்ச் சிகள் நேயர்களிடையே பெருவெற்றியைப் பெறுகின்றன. அது மொழிநடையில் அழகுசேர்க்கும் ஓர் உத்தி.

குரல்வளம்

குரலானது இறைவனால் கொடுக்கப்படும் வரம் என்று காலங் காலமாகக் கூறப்பட்டு வருகிறது. பெண் குரல் கொண்ட ஆண்களும், ஆண்குரல் கொண்ட பெண் களும் பல இடங்களில் பேசத் தயங்குவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். நல்ல குரல்வளம் உடையவர்கள்கூடக் கூட்டத்தைப் பார்த்துவிட்டால் நடுங்கும் குரலில் பேசு வதையும் நாம் பொதுவாகப் பார்க்கிறோம்.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் நபர்களைப் பொறுத்தவரையில் குரல்வளம்பற்றிக் குறை சொல்வதற்கில்லை. வானொலியில் முதன்முதலில் பேசுபவர்களாயின் அச்சம் மற்றும் கூச்சம் காரணமாகச் சற்று நடுங்குகிறார்கள். அவர்களும் சிறிது நேரத்தில் சமாளித்துக் கொள்கிறார்கள்.

பேச்சு மொழி நடைமுறைகள்

பேசும் முறையைப் பொதுவாக நான்கு வகைப்படுத்துவர் அறிஞர்.

1. உளக்கருத்தை வெளிப்படுத்துதல் (Expressive)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. உடன்பட்டுப் பேசுதல் (Commissive)
3. மேற்கோள் காட்டிப் பேசுதல் (Quotative)
4. உறுதியளித்துப் பேசுதல் (Assertive)

என்பன அவை.

உளக்கருத்தை வெளிப்படுத்துதல்

ஒருவர் தாம் நினைப்பவற்றை அப்படியே வெளிப்படுத்துதல். அதாவது எந்த அலங்காரமோ, வருணனையோ இல்லாது தகவலை ஆற்றொழுக்காகச் சொல்லுதல்.

மதுரை வானொலியில் அமையும் பெரும்பாலான உரைகள் அப்படி அமைகின்றன.

சான்று : 'வார்த்தைகள் வலுவானவை' என்ற தலைப்பில் இடம்பெற்ற உரை.

''மனிதனை இனம்காண உதவுவனவற்றில் அவன் பேசும் சொற்களும் முக்கியமானவை. அவன் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் எதிராளியின் நெஞ்சைத் தைக்கக் கூடாது; இதமாகத் தொடவேண்டும். கோபத்தையோ அலட்சியத்தையோ காட்டும் போதுகூடச் சொற்களை அளவறிந்து பயன்படுத்த வேண்டும்; கெட்ட வார்த்தைகளை அறவே நீக்கிவிடவேண்டும்'' என்று அவ்வுரை அமைந்தது.

உளக்கருத்தை வெளியிடுமுகமாக அமையும் அப்படிப் பட்ட உரைகள், நேரடியாக நேயர்களிடம் பேசுகின்றன.

உடன்பட்டுப் பேசுதல்

எதிராளியின் கருத்தினை அறிந்துகொண்டு, அக்கருத்துக்கு ஏற்றவாறு பேச்சினை அமைத்துக்கொண்டு பேசுதல்.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் அமையும் பெரும்பாலான பேட்டிகளும் உரைகளும் அப்படி அமைகின்றன. அரசின் திட்ட அறிவிப்புப் பேட்டிகள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடனுதவி அறிவிப்புப் பேட்டிகள், உரைகள் முதலாயின இவ்வகையில் அடங்கும்.

சான்று : 'நீங்களும் தொழில்முனைவோர் ஆகலாம்' என்ற தலைப்பில் அமைந்த உரை. அவ்வுரையில், மகளிர் தொழில்முனைவோர் ஆவதற்குச் சில தனிப்பட்ட அறிவுரைகள், மகளிரின் சுய தொழில்முனைவுக்கு அரசாங்கம் கொடுத்துவரும் கடனுதவி, பயிற்சித் திட்டங்கள் குறியிலக்கு போன்றவை எடுத்துரைக்கப்பட்டன.

அப்படி அமைவன நேயர்களுக்கு உதவுவதுடன், பங்கேற்பாளருக்கு நேயருடனான சுமுக உறவை வளர்க்கின்றன. அத்துடன், நேயரின் எண்ணங்களுக்கு உடன்பட்டு அமைவதால், இம்மொழிநடை உளவியல் சார்ந்து அமைகிறது.

மேற்கோள் காட்டிப் பேசுதல்

பேசுபவர், தம் கருத்துக்கு மேலும் வலிமை சேர்க்கச் சில அறிஞர்கள் மற்றும் பெரியோரின் கூற்றுகளையும் பழமொழிகளையும் இணைத்துப் பேசுதல்.

மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் பொதுவாக எல்லா வடிவங்களிலும் இம்முறை பின்பற்றப் படுகிறது.

சன்றாறு : 'பெண் குழந்தைகள் ஆண்டு' என்ற தலைப்பில் அமைந்த நேர்முகம்.

"ஆணுக்குப் பெண்ணிங்கு இளைப்பில்லை' என்று கூறிச் சென்றார் பாரதியார். ஆனால் இங்கு நடப்பதென்ன, பெண்சிசுக் கொலைகள். 'ஒரு கன்னிப் பெண் எல்லா நகைகளையும் அணிந்துகொண்டு இரவு நேரத்தில் தனியாகத் தெருவில் நடந்து சென்றால், அப்போது அவளுக்கு எந்தத் தீங்கும் நேராதிருந்தால் அதுதான் ராம ராஜ்ஜியம்' என்று காந்தியடிகள் கூறியுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் இன்று நிலைமை என்ன! பட்டப் பகலிலேயே நகைத் திருட்டும், கற்பழிப்பும்தாம் அன்றாடக் காட்சி-களாய் மிகுந்து விட்டன.''

அப்படி அமைந்த அந் நேர்முகம், 'பெண்' பற்றிய பல பெரியோர் கூற்றுகளைத் தாங்கி அமைந்தது.

அம் முறையால் பங்கேற்பாளர்கள், நேயர்களுக்குத் தம் கருத்துக்களைத் தர முடிவதுடன், பல பெரியோர்-களின் கருத்துகளையும் சேர்த்துத் தர முடிகிறது.

உறுதியளித்துப் பேசுதல்

பேசுபவர், தம் கருத்தில் உறுதியாக நிற்றல் இதன்பாற்படும்.

பெரும்பாலும் பட்டிமண்டபப் பேச்சுகள் அவ்வாறே அமைகின்றன.

சான்று: 'அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டிய-வர்கள் ஆண் குழந்தைகளா பெண் குழந்தைகளா' என்ற தலைப்பில் ஒலிபரப்பான பட்டிமண்டபம்.

'ஆண் குழந்தைகளே' என்ற தலைப்பில் பேசுபவர், தம் நிலையிலிருந்து விலகாமல் ஆண்குழந்தைக்குப் பரிந்து பேசுவார். 'பெண் குழந்தைகளே' என்ற தலைப்பில் வாதாடுபவர் பெண்குழந்தைக்குப் பரிந்து பேசுவார்.

இப் பேச்சுமுறை, பேசுபவருக்குத் தம் பேச்சிலுள்ள உறுதியை எதிராளிக்கு உணர்த்துகிறது. அதனால் நேயர்கள் தெளிவான அழுத்தமான இருகோணத்துக் கருத்துகளையும் பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

முக்கிய அடிப்படைகள்

பொதுவாக எல்லாப் பொருள்களுமே இரண்டு அடிப்படைகளில் பிரிகின்றன.

1. அளவு (Quantity)
2. தரம் (Quality)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பன அவை. அவ்வடிப்படைகளில் மொழிநடையையும். அடக்கலாம்.

அளவு

''தேவைக்கு மீறிய தகவல்களை நிகழ்ச்சியில் திணிக்கக் கூடாது'' என்று கூறும் அறிஞர் கிரைஸ், மொழிநடையின் உறவுநிலை பற்றியும் பேசுகிறார். ''பொருத்தமாகப் பேசு; தலைப்பினை விட்டு விலகிச் செல்லாதே'' என்கிறார். அப்படிப்பட்ட உறவுநிலை வானொலி மொழிநடையில் முக்கியமாகப் பின்பற்றப்பட வேண்டும்.

மொழிநடையானது 'வளவள' என்று அமையாமல் அளவாக அமைய வேண்டும். அப்போதுதான் எடுத்துக்-கொண்ட பொருளின் சிறப்புக் கெடாது. இல்லாவிடில், 'அவ்வளவு பேசியும் ஒன்றும் பயனில்லை' என்று நேயர்களை முணுமுணுக்க வைத்துவிடும்.

சான்று : 'பெண்கள் அன்றும் இன்றும்' என்ற தலைப்-பில் ஒலிபரப்பான பேட்டியானதுநேயர்களிடையே அப்படிப் பட்ட முணுமுணுப்பைப் பெற்றது. காரணம் தலைப்பை நெருங்காமலே பேட்டி கண்டவரும், தந்தவரும் அளவுக்கு அதிகமாகப் பேசிக் கொண்டு இருந்தனர்.

தரம்

எந்த ஒரு பொருளிலும் தரம் முக்கியம். அப்படி இருக்கும்போது ஒருவரோடொருவர் கொள்ளும் தகவல் தொடர்பில் தரம் மிக முக்கியம் என்பது சொல்லாமலே விளங்கும். தரம்தான் மனிதனை வளர்க்கும்; அவன்முன் பேசுகின்ற எதிராளியின் சிந்தனையை வளர்க்கும், மொத்தத்தில் சமுதாயத்தையே வளர்க்கும்.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் பொதுவாகப் பல நிகழ்ச்சிகள் தரம் வாய்ந்தவையாக உள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் சில சமயங்களில் அத் தரம் குறைந்து வெகு சாதாரணமான நிலையில் அமைந்துவிடுவதும் உண்டு.

சான்று : முன்னாள் துணைவேந்தர் ஒருவரின் மகளுடன் நிகழ்த்தப்பட்ட பேட்டியை இங்குக் குறிப்பிடலாம்.

'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' என்பார் தொல்காப்பியர். அதாவது வினாவும் விடையும் ஒன்றுக்கொன்று பொருத்தமாக அமையவேண்டும். இதுதான் பேட்டிக்கான அடிப்படை இலக்கணம். ஆனால் அந்நிகழ்ச்சியில், கேட்கப்பட்ட கேள்விகள் சாதாரணமாகவும், கொடுக்கப்பட்ட பதில்கள் மிகச் சாதாரணமாகவும் அமைந்திருந்தன. அது மட்டுமன்றிக் குழப்பமான கேள்விகளும் அதைவிடக் குழப்பமான பதில்களும் அமைந்து நேயர்களைத் திகைக்க வைத்தன.

மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் அப்படித் தரமற்று அமையும் நிகழ்ச்சிகள் மிகச் சிலவே ஆயினும் அவை தவிர்க்கப்பட வேண்டியது அவசியம்.

'பேசும் முறை' பற்றிக் கூறும்போது அறிஞர் கிரைஸ், ''நீ நம்புவதையெல்லாம் சொல்லிக் கொண்டிராதே; போதிய சான்றுகளுடன் உண்மையைப் பேசு; குறிப்புமொழி, உருவம், உயர்வுநவிற்சி போன்றவற்றைத் தவிர்; எப்படிப் பேசவேண்டும் என்று அறிந்து பேசு; தடுமாற்றம், இருண்மை ஆகியவற்றைத் தவிர்; சுருக்கமாகவும் வரிசை மாறாமலும் பேசு'' என்கிறார்.

அதன் அடிப்படையில் தரமான மிக உயர்ந்த நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்படாமல் இல்லை.

சான்றுகள் : 'வார்த்தைகள் வலுவானவை', 'குழந்தை வளர்ப்பு ஒரு கலை' போன்ற உரைகளும், 'இணை உணவு' பற்றிய நாட்டுப்புறப் பாடல்களும் தரம் வாய்ந்த நிகழ்ச்சிகளில் குறிப்பிடத் தக்கவை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களின் மனம் கொள்ளுமாறு மொழிநடை அமைய வேண்டும். மக்களுக்குப் புரிதலே தகவல் தொடர்பில் மிக முக்கியம். எனவே, அவர்களுக்குப் பழக்கமான சொற்களும் சாதாரண வாக்கியங்களும்தாம் இடம்பெற வேண்டும்.

மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் பங்கேற்போர் சிலருக்கு உச்சரிப்புக் குறைபாடு இருந்து வருகிறது. அக்குறைபாடு உடையவர்கள் ஒன்று உச்சரிப்பைத் திருத்திக் கொள்ள முயலவேண்டும்; அல்லது உச்சரிப்புத் தகராறு வரக்கூடிய எழுத்து இடம் பெறாமல்' பார்த்துக் கொள்ள வேண்டும். 'உரை' முதலிய எழுதி வாசிக்கப்படும் வடிவங்களாயின், உரையை எழுதுபவர் ஒருவராகவும், அவருக்கு உச்சரிப்புத் தகராறு இருக்குமாயின் அவ்வுரையை வாசிப்பவர் வேறொருவராகவும் இருப்பது நலம். பேட்டி முதலிய வடிவங்களில் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால் இப்படியொரு வழி இருப்பதை மதுரை வானொலி அறிந்து செயலாற்ற வேண்டும்.

நிகழ்ச்சியில் பேசப்படும் பொருளின் அளவும் தரமும் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். நிகழ்ச்சியைச் சிறக்கச் செய்வதே 'தரம்' தான். எனவே மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் 'தரம்' கட்டிக் காக்கப்பட வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. நேயர்களின் கணிப்பில் மகளிர் நிகழ்ச்சிகள்

தகவல் தொடர்பானது பன்னெடுங்காலமாக மனிதனின் செயற்பாடுகளுள் ஒன்றாகவே கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் அது வேறொரு பரிமாணத்தைப் பெற்றது. அதாவது மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றை நிறைவு செய்து கொள்வதற்குக்கூடத் தகவல் தொடர்பே முக்கியக் காரணி என்று உணரப்பட்டது. இப்புதிய சிந்தனை, தகவல் தொடர்பு பற்றிய பல ஆராய்ச்சிகளை வெளிக் கொணர்ந்தது.

உலகின் பல்வேறு நாடுகளில் காலங்காலமாக எழுந்துள்ள அரசியல், சமூக, சமய, பொருளாதார மாற்றங்கள் அவ்வாராய்ச்சிகளுக்கு அடித்தளங்களாயின. உலகம் போற்றும் சமயங்களுள் ஒன்றாகிய கிறித்தவம் உலக மக்களுடன் தகவல் தொடர்பை மிகச் சரியாகக் கையாண்டமையே, அச்சமயத்தின் பெருவெற்றிக்குக் காரணம் எனலாம்.

உளவியல், கணிதவியல் மற்றும் பொறியியல் வல்லுநர்களும்கூடத் தகவல் தொடர்பு ஆராய்ச்சிகளில் ஈடுபடலாயினர். அவ்வாராய்ச்சிகளின் விளைவாகத் தகவல் தொடர்பியல் கோட்பாடுகள் பல உருவாயின. அவற்றுள் மிக முக்கியமானதும், அடிப்படையானதும் உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமாகிய கோட்பாடு, 'ஹெரால்ட் லாஸ்வெல்'லின் கோட்பாடு ஆகும்.

யார், யாரிடம், எதற்காக, எதன்மூலம், என்ன விளைவுடன் தகவல் தொடர்பு கொள்கிறார். (Who says What to Whom through Which channel with what effect)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதே லாஸ்வெல்லின் தகவல் தொடர்பியல் கோட்பாடாகும். இதனை,



என்ற வரைபடத்தின்மூலம் அவர் விளக்கிக் காட்டினார்.

ஆக, தகவல் தொடர்பில் தருநரும் தகவலும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு சிறப்பிடம், அத்தகவல் தரப்படும் ஊடகத்திற்கும், தகவல் பெறுநருக்கும், அவரால் நிகழும் விளைவுகளுக்கும் உண்டு.

எனவேதான் இக்காலத்தில் தகவல் சார்ந்த ஆய்வுகள் நிகழ்த்தப்படும் அளவுக்குப் பெறுநர் சார்ந்த ஆய்வுகளும் மிகுந்து வருகின்றன. 'நேயர் ஆய்வு' (Audience Research) என்பது தகவல் தொடர்பில் அடிப்படை ஆய்வு என்று கருதுமளவுக்கு வளர்ந்து வருகின்றது.

நேயர் ஆய்வு

சொல்லப்படும் தகவலின் வெற்றி, அத்தகவலைப் பெறுபவரைச் சார்ந்து அமைகிறது.

'உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து' (குறள்: 105)

என்றார் வள்ளுவர். அவரே இக்காலத்தில் இருப்பாராயின்,

'தகவல் வரைத்தன்று தகவல்; தகவல்
பெறப்பட்டார் சால்பின் வரைத்து'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று குறள் யாத்திருப்பார். அந்த அளவுக்குத் தகவல் தொடர்பில் பெறுநர் பெரும்பங்கு வகிக்கின்றார்.

அரசின் திட்டம் ஒன்று மக்களுக்கு அறிவிக்கப்படுவதாய் வைத்துக் கொள்வோம். மக்கள் அத்திட்டத்தை ஏற்கிறார்களா மறுக்கிறார்களா என்பதை அறிந்த பிறகுதான் அத்திட்டத்தை அரசு தீவிரமாகச் செயல்படுத்த முடியும். ஆக அங்கு, பெறுநராகிய மக்கள் முக்கிய இடம் பெறுகிறார்கள்.

அவ்வாறே தகவல் தொடர்புக் கருவிகள், தம் நேயர் கருத்துகளை அறிந்தால்தான் அடுத்தபடியாக விரைந்து செயல்பட முடியும். பத்திரிகையானது, விற்பனை அளவின்மூலமும், வாசகர் கடிதங்களின்மூலமும் தன் வாசகர் கருத்துகளை அறிந்து கொள்கிறது. திரைப்படம், திரையரங்கில் சேரும் கூட்டத்தை வைத்துத் தன் பார்வையாளர்களை இனங்கண்டு கொள்கிறது. வானொலியும் தொலைக்காட்சியும் தம் நேயர்களின் கடிதங்களை வைத்து நேயர்களை அறிய முற்படுகின்றன.

ஆயினும் அது முழுமையான 'அறிதலுக்கு' வழிவகுப்பதில்லை. காரணம், நேயர்களுள் மிகச் சிலரே கடிதம் எழுதித் தம் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். (மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு. கே. துரைசாமி கூறிய கருத்து : "மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சி நேயர்களில் நூற்றில் ஒரு பங்கு நேயர்களே கடிதம் எழுதுகின்றனர்"). இந்நிலையில் வெறும் நேயர் கடிதத்தை வைத்து நேயர்களை அறிந்துவிட முடியாது. மேலும் சில வழிமுறைகள் தேவைப்படுகின்றன.

அதனால்தான் அகில இந்திய வானொலியும், இந்தியத் தொலைக்காட்சியும் 'நேயர் ஆய்வுப் பிரிவு' (Audience Research Section) என்ற ஒரு பிரிவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உருவாக்கிக் கொண்டு நேயர்களை அறிந்து வருகின்றன. அப்பிரிவில் பணியாற்றுபவர்கள் சுற்றாய்வு நடத்தி, நாட்டின் மொத்த வானொலிப் பெட்டிகள் எத்தனை, வானொலியைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துபவர்கள் எத்தனை பேர், ஆர்வத்துடன் பயன்படுத்துபவர்கள் எத்தனை பேர், வானொலி மூலம் பெற்ற தகவல்களால் பயனடைந்தவர்கள் எத்தனை பேர், பயனடையாதவர்கள் எத்தனை பேர், இன்னும் என்னென்ன வழிகளைக் கையாண்டு அதிகப்படியான நேயர்களை உருவாக்கலாம் என்றெல்லாம் அறிகிறார்கள். இவ்வாறே இந்தியத் தொலைக்காட்சியின் நேயர் ஆய்வுப் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

வானொலி நேயர் ஆய்வுப் பிரிவு

அகில இந்திய வானொலி, நாடு தழுவிய ஆய்வு நடத்துவது எளிதில் இயலாத செயல். எனவே, ஒவ்வொரு வானொலி நிலையமும் அவ்வப்போது தனித்தனியே நேயர் ஆய்வை நடத்தித் தன் நேயர்களை அறிந்து கொள்கின்றன.

அவ்வகையில் மதுரை வானொலி, 1990-ஆம் ஆண்டு நேயர் ஆய்வு நடத்தித் தன் நேயர்களின் எண்ணிக்கையை அறிந்தது. அக் கணக்கின்படி மதுரை வானொலி நேயர்களின் மொத்த எண்ணிக்கை 78, 71, 334 ஆகும்.

நேயர்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்வதால் மட்டும் பயனில்லை. அவர்களின் எண்ணங்கள், மனநிலைகள் ஆகியவற்றையும் அறியவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கேற்றாற்போலத் தகவல் தர முடியும். அப்படித் தகவல் தருவதுதான் தகவல் தொடர்புக் கருவிகளின் கடமையும் கூட.

நேயர்களின் மனநிலையை அறியும் ஆய்வுகள், வானொலிநேயர் ஆய்வுப் பிரிவினரால் மேற்போக்காகத்தான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிகழ்த்தப்படுகின்றன. காரணம், ஆய்வுப் பரப்பு பெரியது. சுமார் 78 இலட்சம் நேயர்களின் மனநிலையை அறிதல் என்பது சற்றுக் கடினமான செயல். எனவே ஆய்வுப் பரப்பு சுருக்கப்படுகிறது. ஒரு நகர்ப்புறப் பகுதி, ஒரு கிராமப்புறப் பகுதி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, அப்பகுதிகளில் உள்ள வானொலி நேயர்களின் மனநிலை என்ன என்று அறிந்து, அம் முடிவுகளை அதே நிலையிலுள்ள மற்ற நகரப் பகுதிகளுக்கும் கிராமப் பகுதிகளுக்கும் பொருத்திப் பார்த்தல் என்பது சுருக்க நிலை ஆய்வாகும்.

அப்படிக் கிடைக்கும் ஆய்வு முடிவுகள் முற்றிலும் சரியானவை என்று கூற முடியாவிட்டாலும், முற்றிலும் தவறானவை என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் ஒரே மனநிலை கொண்ட மக்கள் பலர் இருக்கலாம்.

அவ்வகையில் மதுரை வானொலி நேயர்களைப் பற்றி 1990-ஆம் ஆண்டு எம்.ஃபில். பட்ட ஆய்வு ஒன்று நிகழ்த்தப்பட்டது. 'மதுரை நகர வானொலி நேயர்கள்' என்ற தலைப்பில் மதுரை நகர நேயர்களுள் 200 நேயர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவ்வாய்வு சிறிய அளவிலேயே அமைந்ததுதான் எனினும் நேயர் ஆய்வில் அவ்வாய்வின் பங்கு குறிப்பிடத்தக்கது.

அப்படிப்பட்ட ஆய்வுகளுக்கு மதுரை வானொலி இடம்கொடுப்பதும் பாராட்டத்தக்கது. ஏனெனில் அண்மைக் காலத்தில் தோன்றியதாயினும் ஆய்வுகளுக்கும் விமரிசனங்களுக்கும் தன்னை உட்படுத்திக் கொள்ளும் பக்குவம் பெற்றுள்ளது மதுரை வானொலி.

மதுரை வானொலியானது சிறுவர், இளைஞர், விவசாயிகள், தொழிலாளர் என ஒவ்வொரு பிரிவினருக்கும் சிறப்பு நேயர் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது. அது-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போலவே மகளிருக்கென இரண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பு நேயர் நிகழ்ச்சிகளாக ஒலிபரப்புகிறது என முன்னரே கண்டோம்.

சிறப்பு நேயர் ஆய்வு

வானொலியும் மகளிர் நிகழ்ச்சிகளும் என்ற தலைப்பில் செய்யப்படும் இவ்வாய்வு, வெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிமுகத்தை மட்டும் தந்துவிட்டுப் போகும் நோக்கத்துடன் செய்யப்படவில்லை. நிகழ்ச்சிகளைப் பற்றிய விமரிசனமாகவும் இவ்வாய்வு அமைகிறது. அத்துடன், சிறப்பு நேயர்களிடம் சிறிய அளவிலான சுற்றாய்வு ஒன்று நடத்தப்பட்டது. வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் நேரப் பங்கீடு, உள்ளடக்கம், வடிவம், மொழிநடை ஆகியவை பற்றிய நேயர்களின் கருத்துகளை அறியுமுகமாக அது மேற்கொள்ளப்பட்டது. மேலும், சிறப்பு நேயர் சிலருடன் பேட்டி நிகழ்த்தப்பட்டது. சுற்றாய்வு மற்றும் பேட்டிகளின்மூலம் பெறப்பட்ட நேயர்களின் கருத்துகள் அடுத்துத் தரப்படுகின்றன.

கேட்கப்படும் நிகழ்ச்சிகள்

'மதுரை வானொலியில் மகளிருக்காக ஒலிபரப்பப்படும் தாய்வீடு, பூந்தோட்டம் என்னும் இரு நிகழ்ச்சிகளில் எந்த நிகழ்ச்சியை விரும்பிக் கேட்கிறீர்கள்' என்ற வினாவுக்கு, இரு நிகழ்ச்சிகளையும் விரும்பிக் கேட்பதாக விடை கிடைத்துள்ளது.

நகர்ப்புற மகளிருக்கான 'தாய்வீடு' நிகழ்ச்சி, நகர்ப்புற மகளிரால் அதிக அளவிலும், கிராமப்புற மகளிருக்கான 'பூந்தோட்டம்' நிகழ்ச்சி, கிராமப்புற மகளிரால் அதிக அளவிலும் கேட்கப்படுகின்றன. ஆனால் பொதுவாக இரு நிகழ்ச்சிகளுமே சம அளவில் எல்லோராலும் கேட்கப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நேயர்களுடன் பேட்டி நிகழ்த்தியபோது ஒரு சுவையான தகவல் கிடைத்தது. அதாவது மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகள் இரண்டும், உள்ளடக்கம், சொல்லும் முறை ஆகியவற்றால் வெவ்வேறு திசைகளில் செல்கின்றன என்று பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது.

நகர்ப்புற மகளிருக்கான நிகழ்ச்சியில் மகளிரின் குடும்ப வாழ்க்கையைவிட அலுவலக வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் அதிக அளவில் பேசப்படுகின்றன. கிராமப்புற மகளிருக்கான நிகழ்ச்சியில் மீண்டும் மீண்டும் குழந்தை வளர்ப்பு, குழந்தைகளுக்கான இணை உணவு, தடுப்பூசி விவரங்கள், குடும்பக் கட்டுப்பாடு போன்ற செய்திகளே அதிகமாகப் பேசப்படுகின்றன என்ற ஒரு குற்றச்சாட்டைக் கிராமப்புற மகளிர் முன்வைத்தனர்.

இக் குற்றச்சாட்டை மதுரை வானொலி கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனாலும் இக் குற்றச்சாட்டை ஓரளவுதான் ஏற்றுக் கொள்ளமுடியும். ஏனெனில், கிராமப்புற மகளிர், தம் வாழ்க்கையின் பெரும்பகுதியைத் தம் கணவர் மற்றும் பிள்ளைகளுடன் கழிக்கிறார்கள். குழந்தை வளர்ப்பு முதலான அடிப்படைக் கூறுகளில்கூட அவர்கள் பின்தங்கியுள்ளனர். குடும்பக் கட்டுப்பாடு பற்றிய இடைவிடாத பிரசாரத்திற்குப் பின்னரும் கிராமப்புறங்களில் குடும்பக் கட்டுப்பாடு முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் கிராமப்புற மகளிருக்கு அடிப்படைச் செய்திகளைத் தர வேண்டியது அவசியமாகிறது.

நகர்ப்புற மகளிருக்கு அப்படியில்லை. அவர்களுடைய சூழலில் பெரும்பான்மையான அடிப்படைச் செய்திகள் அவர்களைத் தாமாகவே சென்றடைந்து விடுகின்றன. அது மட்டுமன்றி, அவர்களின் வாழ்க்கைநிலையும் கிராமப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புற மகளிரிடமிருந்து வேறுபடுகிறது. அலுவலகத்திற்குச் செல்லுதல், மருத்துவர், பொறியாளர் முதலிய தொழில்முறைப் பணியேற்றல், மாவட்ட ஆட்சியாளர் முதலான உயர்பதவி வகித்தல், சமூக சேவை ஆற்றுதல் ஆகிய வெளியுறவுப் பணிகளை மகளிர் மேற்கொள்கின்றனர். அந்நிலையில் அவர்களுக்குச் சொல்லப்பட வேண்டியவை, 'குடும்பத்தை' மட்டுமே மையமாகக் கொண்ட தகவல்கள் மட்டுமல்ல. அதற்கும் ஒரு படி மேற்சென்று உலகளாவிய செய்திகளும் தரப்பட வேண்டும். அப்படியாயின் கிராமப்புற மகளிருக்கு அவை தேவையில்லையா என்ற கேள்வி எழலாம். உலகச் செய்தியும் தேவைதான். ஆனாலும் அடிப்படைச் செய்திகளே அதிகத் தேவை என்பதனால் அவைமுக்கிய இடம்பெற வேண்டிய நிலையில் உள்ளன.

இப்படியாக இருவகை நிகழ்ச்சிகளும் அந்தந்தப் பரப்பு மக்களைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

நேரப் பங்கீடு

தாய்வீடு, பூந்தோட்டம் ஆகிய இரு நிகழ்ச்சிகளும் வாரத்திற்கு ஒரு முறை 20 நிமிடங்களுக்கு மட்டுமே ஒலிபரப்பாகின்றன. வினாநிரல் நிரப்பிக் கொடுத்த நேயர்களும் பேட்டி கொடுத்த நேயர்களும் '20 நிமிடம் என்ற நேர அளவு போதாது' என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'மகளிர் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கங்கள் மிகுதி' என்பது பெரும்பாலோர் கூறும் காரணமாய் அமைகிறது. ஆனால் ஒரே ஒரு நேயர் மட்டும் மதுரை வானொலி மகளிருக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் குறைவாக உள்ளது என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுமார் 12 உள்ளடக்கங்கள் கொண்ட மகளிர் நிகழ்ச்சிகள். குறைந்த அளவு அத்தனை உள்ளடக்கங்களும் மாதத்தில் ஒரு முறையாவது இடம்பெற முடிகிறதா எனில் 'இல்லை' என்றே விடை கிடைக்கிறது. 12 உள்ளடக்கங்களும் இடம்பெறக் குறைந்தது மூன்று மாத காலம் ஆகிறது.

அடுத்தபடியாக, மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சி நேரம். தொலைக்காட்சியின் மகளிர் நிகழ்ச்சி நேரத்தை (மாலை 6-10-6-30) ஒட்டி அமைந்துள்ளது. அதனால் மகளிர் நிகழ்ச்சி கேட்பது ஓரளவு தடைப்படுகிறது. தொலைக்காட்சி இல்லாதவர்களும், மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் நிரந்தர நேயர்களும் தாம் தொலைக்காட்சியை விட்டுவிட்டு வானொலி கேட்கிறார்கள்.

மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் நிரந்தர நேயர்களுள் சிலர் தொலைக்காட்சியைக் குறைகூற முற்படுகின்றனர். செய்முறைக் காட்சிகள் அதிக நேரம் இடம்பெறுவதால் தொலைக்காட்சியில் செய்திகள் குறைவாகவே தரப்படுகின்றன என்றும், காட்சிப் புலனால் செவிப்புலன் பின்தங்கி விடுகிறது என்றும் கூறுகின்றனர். தொலைக்காட்சியைப் பாராட்டும் நேயர்களோ, நேரடிக் காட்சி இருப்பதால் தவறன்று என்றும் செவிப்புலனுக்கு மட்டும் செய்தி தரும் வானொலியைப் புறக்கணித்து விட்டுத் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்குக் காரணம் அதுவேயாகும் என்றும் கூறுகின்றனர்.

நேர மாற்றம்

தகவலானது பெறுநரின் வசதியைப் பொறுத்துத் தரப்பட வேண்டும். அதாவது பெறுநர் எந்த நேரத்தில் தகவல் பெற விரும்புகிறாரோ அந்த நேரத்தில் தகவல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தருதல் நலம். வானொலி மகளிர் நேயர்களில் பெரும்பாலோர் எந்த நேரத்தில் மகளிர் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்த நேரத்தில் மகளிர் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட வேண்டும்.

சென்னைத் தொலைக்காட்சி, முதலில் மாலை 6-10-க்கு விவசாய நிகழ்ச்சியை ஒளிபரப்பி வந்தது. விவசாயிகள், வயல் வேலை முடித்து வீடு திரும்பவே மாலை 6-30 மணி ஆகிவிடுகிறது என்றும், வருவதற்குள் நிகழ்ச்சி முடிந்துவிடுகிறது என்றும் கருத்துத் தெரிவித்தனர். பெரும்பாலோரின் இக்கருத்து பரிசீலிக்கப்பட்டு, அந்நிகழ்ச்சி இரவு 7-00 மணிக்கு மாற்றப்பட்டது. இப்போது அந்நிகழ்ச்சி வெற்றிகரமாகவும், விவசாயிகளுக்கு உண்மையிலேயே பயனளிப்பதாகவும் அமைந்துள்ளது.

அவ்வாறே மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளிலும் 'நேர மாற்றம்' விரும்பப்படுகிறது. நகர்ப்புற மகளிர் தம் அலுவலகம் முதலான வெளிப் பணிகளையும், கிராமப்புற மகளிர் தம் வீட்டு வேலைகளையும் முடித்துவிட்டு ஓய்வாக இருக்கும் நேரமாகிய இரவு 7-00 மணியே பெரும்பாலான மகளிரால் விரும்பப்படுகிறது. மேலும், இந்நேர மாற்றத்தால் மகளிர், தொலைக்காட்சியின் மகளிர் நிகழ்ச்சியையும் பெற முடியும். தொலைக்காட்சியில் மகளிர் நிகழ்ச்சி நேரத்தை இதற்காக மாற்றி அமைக்க முடியாது. ஏனெனில், மதுரை வானொலியில் மட்டும்தான் அந்நேரத்தில் மகளிர் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. இச் சிறுபான்மையோரின் வசதிக்காகத் தொலைக்காட்சி நிகழ்ச்சியை மாற்றுவதென்பது எந்த விதத்திலும் பொருந்தாத செயல். எனவே, மதுரை வானொலி தன் மகளிர் நிகழ்ச்சி நேரத்தை மாற்றுவது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்து மகளிரிடமிருந்து கிடைத்த மற்றுமொரு தகவல், மதுரை வானொலியில் மகளிருக்காக இன்னொரு நிகழ்ச்சி தரப்படவேண்டும்; அல்லது இருக்கும் நிகழ்ச்சிகளில் குறைந்த அளவு 10 நிமிடம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதாகும். அப்போதுதான் மகளிர் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கங்கள் முழுமை பெறும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சிகளுக்கிடையேயான வேறுபாடு

இவ்வியலில் சற்றுமுன்னர்க் கூறப்பட்ட அதே கருத்து இங்கும் இடம்பெறுகிறது. அதாவது நகர்ப்புற மகளிர் நிகழ்ச்சிக்கும் கிராமப்புற மகளிர் நிகழ்ச்சிக்கும் இடையே அடிப்படையிலேயே வேறுபாடு காணப்படுகிறது.

கிராமப்புற மகளிர் நிகழ்ச்சியில் குடும்பமும், நகர்ப்புற மகளிர் நிகழ்ச்சியில் சமுதாயமும் பெரிதுபடுத்தப் படுகின்றன காரணம்அவர்களின் வேறுபட்ட வாழ்க்கை நிலை. இது உள்ளடக்கத்தைச் சார்ந்தது.

அடுத்து, 'சொல்லும் விதம்' என்ற பிரிவு வருகிறது. அதாவது பெறுநரின் தன்னையறிந்து அவர்களுக்குப் பிடித்தமான வடிவத்தில் தகவலைத் தருதல். கிராமப்புற நிகழ்ச்சியும் நகர்ப்புற நிகழ்ச்சியும் சொல்லும் விதத்தாலும் வேறுபடுகின்றன என்று பல நேயர்கள் கருத்து இயம்பியுள்ளனர். பூந்தோட்டம் நிகழ்ச்சியில் நாட்டுப்புறப் பாடல்களே அதிக இடம் பெறுகின்றன.

கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் ஒன்றாகிவிட்ட ஒன்று நாட்டுப்புறப் பாடல். எனவே, அம் மக்களுக்குத் தகவல் தெரிவிக்க நாட்டுப்புற பாடல் வடிவமே சிறப்பாகக் கையாளப்படுகிறது.

சான்று : 18.4.91 அன்று 'பூந்தோட்டம்' நிகழ்ச்சியில் இடம் பெற்ற 'இணை உணவு' பற்றிய பாடல்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாய்வீடு நிகழ்ச்சியில் உரைகளும் அதற்கடுத்த-படியாகப் பேட்டிகளும்தாம் அதிகமாக இடம்பெறுகின்றன.

நகர்ப்புற மகளிருக்குப் பாடலைக் கேட்டுப் பொருள் புரிந்துகொள்வது என்பது சலிப்பைக் கொடுக்கும். ஏனெனில் அவர்கள் பாடல்களைப் பொழுதுபோக்கு வடிவமாகவே கருதி வந்திருக்கின்றனர். எனவே தகவலை நேரடியாகத் தெரிவிக்கும் உரை வடிவமே அவர்களுக்கான நிகழ்ச்சியில் அதிகம் பின்பற்றப்படுகிறது.

சான்று : 15-4 91 அன்று 'தாய்வீடு' நிகழ்ச்சியில் இடம்-பெற்ற 'வார்த்தைகள் வலுவானவை' என்ற உரை

இரு நிகழ்ச்சிகளுக்கும் பொதுவாகக் கையாளப்படும் சிறு வடிவம் 'குறிப்பு' எனப்படுவதாகும். சமையல் குறிப்புகள், மருத்துவக் குறிப்புகள், அழகுக் குறிப்புகள் போன்றவை இவ்வகையில் அடங்குகின்றன. பெரும்பாலும் மருத்துவக் குறிப்புகள் கிராமப்புற மகளிர் நிகழ்ச்சியிலும், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் நகர்ப்புற மகளிர் நிகழ்ச்சியிலும் அதிக இடம் பெறுகின்றன.

உள்ளடக்க மாற்றம்

'மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் உள்ளடக்-கத்தில் மாற்றம் வேண்டுமா' என்ற வினாவுக்கு, நேயர்-களில் பாதிப் பேர் 'மாற்றம் வேண்டாம்' என்றும் பாதிப் பேர் 'உள்ளடக்கத்தில் சில திருத்தங்கள் செய்யப்படலாம்' என்றும் விடையளித்துள்ளனர்.

மாற்றம் வேண்டும் என்று கூறிய அனைவருமே 'அழகுக் குறிப்புகள்' பகுதியை எடுத்து விட வேண்டும் என்றும், பெண்ணிடம் உள்ள அழகுணர்ச்சிதான் அவளுடைய மறைமுகமான பெண்ணடிமைத்தனத்துக்கு அடிப்படைக் காரணி என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இம் மறுப்புரைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியா-விட்டாலும் இதிலும் ஓர் உண்மை இல்லாமல் இல்லை. மகளிர்க்கான எத்தனையோ கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைகள் அன்றாட வாழ்வில் இருக்க, 'அழகுக்குறிப்பு' போன்ற சிறுசிறு தகவல்களில் கவனத்தைச் செலுத்துவது முறையல்ல. அதற்குப் பதிலாக மருத்துவக் குறிப்பு-களையேகூட இன்னும் அதிகமாகத் தரலாம்.

அடுத்து, மகளிருக்கு நேரடியாகப் பயனளிக்கக் கூடிய செய்திகளையே தரவேண்டும் என்று சில நேயர்-கள் குறிப்பிட்டுள்ளனர். அதாவது சொல்லப்படும் செய்தி சுற்றி வளைத்தோ, ஆழ்ந்த நிலையில் பொருள் உடைய-தாகவோ சொல்லப்படக் கூடாது. ஏனெனில் வானொலி கேட்டுக் கொண்டிருக்கும்போதே நிகழ்ச்சியில் கூறப்படும் தகவல்கள் புரியவேண்டும். இல்லையெனில் புரியாத சொல்லுக்குப் பொருள் தேடுவதில் நேயர் முனையக் கூடும். நிகழ்ச்சியைத் தொடர முடியாமல் போய்விடும். இறுதியில் நிகழ்ச்சியின் நோக்கமே சிதைந்து போய் விடுவதற்கான வாய்ப்புத் தோன்றிவிடும். எனவே நிகழ்ச்சியைத் தயாரிக்கும்போதே கவனமாகத் தயாரிக்க வேண்டும்.

வடிவ மாற்றம்

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகள் பல்வேறு வடிவங்களில் ஒலிபரப்பப்படுகின்றன. அவற்றுள் உரை முதலிய கட்டுக்கோப்பான வடிவங்களும் (4), நாடகம் முதலிய சற்று நெகிழ்ந்த வடிவங்களும் (4) குறிப்பிடத்-தக்கவை.

அவ்வடிவங்கள் ஒன்றன்கீழ் ஒன்றாய்க் குறிப்பிடப்-பட்டு, நேயர்களின் விருப்பத்தின் அடிப்படையில் வரிசைப்-படுத்துமாறு ஒரு வினா அமைந்தது. அவ்வினாவுக்குப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல நேயர்களால் நெகிழ்ச்சியான வடிவங்களே விரும்பப்படுகின்றன என்ற விடை கிடைத்துள்ளது.

மக்கள், தகவல் தொடர்புக் கருவிகளை நுகர்வதன் முக்கிய நோக்கங்கள் பலவாக இருக்கலாம். ஆனால் மகிழ்ச்சி தரக்கூடிய கூறுகளை எதிர்பார்க்கும் விதத்தில் எல்லோரும் ஒன்றுபடுகின்றனர். மக்கள், வாழ்வதற்காக மேற்கொள்ளும் பணி கடுமையானது. எனவே மன-நிம்மதிக்காக அவர்கள் பிறவற்றை நாடுகின்றனர். அவர்களின் கடுமையிலிருந்து அவர்களுக்கு உளவியல் ரீதியான ஒரு விடுதலை தருமாறு நிகழ்ச்சிகள் அமையவேண்டும். பேச்சு நடையில் அமைந்து மக்களுக்கு எளிதில் புரியுமாறு தெரிவிப்பதும், நகைச்சுவை, கலாரசனை, சொல்விளையாட்டு முதலியவற்றின் மூலம் அவர்களை மகிழ்விப்பதும் தகவல் தொடர்புக் கருவிகளின் முக்கியமான செயற்பாடுகள் ஆகும்.

எனவே, உரை, உரைச்சித்திரம், பேட்டி. கலந்துரையாடல் போன்ற வடிவங்களைவிட நாடகம், பாடல், பட்டிமண்டபம், பல்சுவை நிகழ்ச்சி போன்ற வடிவங்களில் மேலும் பல நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட வேண்டும்.

ஆனால், மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுமுகமாக வெறும் பொழுதுபோக்கு வடிவங்களே இடம்பெற்றால், 'சிறப்பு நேயர் நிகழ்ச்சி' என்பதன் 'அறிவுறுத்தல்' கடமை பின்தங்கிவிடும். எனவே மகிழ்வித்தற்கூறுகளை அளவாகச் சேர்த்து நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட வேண்டும்.

மொழிநடை மாற்றம்

இலக்கிய நடை நிகழ்ச்சிகளை விட, வழக்கில் உள்ள பேச்சுநடை நிகழ்ச்சிகளே பெரும்பாலான மக்களுக்கு மிகவும் பிடிக்கும். காரணம், பேச்சு நடையில் நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்வது எளிது. அவற்றில் வரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொற்களைப் புரிந்து கொள்ள அவர்கள் எந்த அகராதியையும் தேட வேண்டியதில்லை.

மதுரை வானொலி, நிகழ்ச்சிப் பங்கேற்பாளர்களிடமிருந்து அவர்கள் பேசப்போகும் பொருளின் எழுத்துப் படிவத்தை (Script) வாங்கிக் கொள்கிறது. ஆனால் அதை வானொலியில் வழங்கும்போது, பங்கேற்பாளர்களிடம், 'உங்கள் பிரதியைப் பேச்சுநடையில் கூறுங்கள் அல்லது படித்து விடுங்கள்' என்று பணிக்கிறது.

சான்று : ''உணவு உண்பதை விட, அவ்வுணவு சீராகச் செரிக்கப்பட்டுக் கழிவுகள் வெளியேறுவதே மிக முக்கியம். அதைத் தான் வள்ளுவர், 'உணலினும் உண்டது அறல் இனிது' என்கிறார். அதற்காகச் சிறப்பு முயற்சி எதுவும் எடுக்கத் தேவையில்லை. இரவில் படுக்கப் போகுமுன் ஒரு டம்ளர் வெந்நீரும், காலையில் பல் துலக்கியதும் ஒரு டம்ளர் தண்ணீரும், இவை தவிர ஒரு நாளில் எட்டு டம்ளர் தண்ணீரும் பருகி வந்தால் போதுமானது'' என்று எழுத்துப் படிவம் அமைந்தது. அதுவே நிகழ்ச்சியின் போது,

''சாப்பிடறதைவிட சாப்பிட்டது ஜீரணிக்கிறதும், கழிவுகள் வெளியேறுவதும்தான் முக்கியம். இதைத் தாங்க வள்ளுவரும், 'உணலினும் உண்டது அறல் இனிது' அப்படீன்னு சொல்றார். இதுக்காகப் பிரமாதமா ஒண்ணும் செய்ய வேண்டியதில்லைங்க. தினமும் நைட்ல படுக்கப் போகும்போது ஒரு டம்ளர் வெந்நீரும், காலைல பல் தேய்ச்சவுடனே ஒரு டம்ளர் பச்சைத் தண்ணியும், இவை தவிர்த்து ஒருநாளில் எட்டு டம்ளர் தண்ணியும் குடிச்சாப் போதுமுங்க'' என்று மாற்றி வாசிக்கப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழிநடை பற்றிப் பேசும்போது உச்சரிப்புத் திறன், ஏற்ற இறக்கம், குரல்வளம் ஆகியன பற்றியும் பேச வேண்டியதாகிறது. அவை பற்றியும் நேயர்களிடம் வினா எழுப்பப்பட்டது. அவற்றுள் மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் பங்கேற்பாளர்களில் சிலருக்கு உச்சரிப்புத் திறன் கைவரவில்லை என்றும், மற்றபடி ஏற்ற இறக்கம் மற்றும் குரல்வளம் பற்றிக் குறை சொல்வதற்கில்லை என்றும் கருத்து உரைக்கப்பட்டது.

நேயர் கடிதம்

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளைக் கேட்டுவிட்டுக் கடிதம் எழுதுவதுண்டா என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பெரும்பான்மை எதிர்மறைப் பதில்களும் சிறுபான்மை உடன்பாட்டுப் பதில்களும் கிடைத்தன. அதிலிருந்து சிறுபான்மை நேயர்களே நிகழ்ச்சி பற்றிய கடிதம் எழுதுகிறார்கள் என்ற கருத்து பெறப்படுகிறது.

'உங்கள் கடிதத்தால் ஏதாவது பயன் விளைந்ததுண்டா' என்ற வினா நிரல் கேள்விக்கு, 'கடிதம் வாசிக்கப்பட்டது' என்றும், 'கடிதத்தின்படி நிகழ்ச்சியில் மாறுதல் செய்யப்பட்டது' என்றும், இரண்டு வாய்ப்பு (Choice) விடைகள் தரப்பட்டன. அவற்றுள் முதல் விடையே எல்லா நேயர்களாலும் தரப்பட்டது. அதாவது கடிதம் வாசிக்கப்பட்டதே தவிர, அதன்படி நிகழ்ச்சியில் மாற்றமேதும் செய்யப்படவில்லை. அதுபற்றி மேலும் கேட்டபோது, 'கடிதம் வாசிக்கப்படுகிறதே தவிர, நாங்கள் விரும்பும் மாற்றங்கள் நிகழ்ச்சியில் செய்யப்படுவதே இல்லை' என்று பல நேயர்கள் பதிலளித்தனர். நேயர்களுக்கு இம் மனக்குறை நீண்ட காலமாகவே இருப்பதாகவும் பலர் தெரிவித்தனர்.

மதுரை வானொலி, நேயர்களின் மனக்குறையைக் கவனத்தில் கொண்டு, மிகத் தேவையான மாற்றங்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நேயர்கள் குறிப்பிட்டிருந்தால் அம் மாற்றங்களை மனமுவந்து செய்யவேண்டும். ஏனெனில் தகவல் தொடர்பில் பெறுநர் முக்கியம். அவர்களுடைய அதிருப்தியைத் தருநர் பெற்றுவிடக் கூடாது. அதனால் தகவல் தொடர்புக்குப் பங்கம் வந்துவிடக் கூடும்.

பிற நிலைய நிகழ்ச்சிகளுடன் ஒப்பீடு

மனிதனுடைய வளர்ச்சிக்குப் 'பிறருடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளும் ஒப்பீட்டு உணர்ச்சி'யும் பெருமளவில் துணை செய்கிறது. அவ்வகையில் மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகள் மேலும் சிறக்கப் பிற நிலைய மகளிர் நிகழ்ச்சிகள் பற்றிய நேயர்களின் கருத்துகளும் கேட்கப்பட்டன.

'பிற நிலைய மகளிர் நிகழ்ச்சிகளைக் கேட்பதுண்டா' என்ற கேள்விக்கு 'ஆம்' என்ற பதிலும், 'இல்லை' என்ற பதிலும் சம அளவில் தரப்பட்டுள்ளன.

'ஆம் எனில் அவற்றினின்று மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகள் எவ்வகையில் வேறுபடுகின்றன' என்ற கேள்விக்குப் பல்வேறு பதில்கள் கிடைத்துள்ளன.

1. பிற நிலைய மகளிர் நிகழ்ச்சிகள் மதிய நேரத்தில் இல்ல மகளிர் ஓய்வாக இருக்கும் நேரத்தில் ஒலிபரப்பப்படுகின்றன. எனவே அதிகப்படியான நேயர்களை அவை சென்றடைய முடியும்.

2. பிற நிலைய மகளிர் நிகழ்ச்சிகளில் மகிழ்வித்தற் கூறுகளும் பிற கூறுகளுக்குச் சமமான இடத்தைப் பெற்றுள்ளன. அதனால் உரை போன்ற கட்டுப்பாடான வடிவங்களால் ஏற்படும் இறுக்கம் குறைகிறது.

3. மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளுக்கு நேர மாற்றம் அவசியம் தேவை. மதுரை வானொலியில் மதிய ஒலிபரப்பு இல்லாததால் மகளிர் நிகழ்ச்சிகள் மாலையில் ஒலிபரப்பப்படுகின்றன. ஆனால் தொலைக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்சியின் மகளிர் நிகழ்ச்சி நேரத்திலேயே அவை ஒலிபரப்பப்படுவதால் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கே மகளிர் முக்கியத்துவம் தரக்கூடும்; அதற்கு மாற்று வழியாக இரவு 7-00 மணியே மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளுக்கு உகந்த நேரமாகும்.

4. மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் இறுக்கமான வடிவங்களே கையாளப்பட்டாலும், வழங்கப்படும் முறையில் சற்று புதுமை காணப்படுகிறது. புதுமை காரணமாக அறிவித்தல் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள்கூட மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் நன்றாக இருக்கின்றன.

மேற்கூறிய கருத்துகள் மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் குறைகளையும், அவற்றை நீக்கச் சில மாற்று வழிகளையும், மதுரை வானொலியின் மிக முக்கியமான நிறையையும் சுட்டிக் காட்டுகின்றன.

தகவல் தொடர்பில் தகவலும் தருநரும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியத்துவம், பெறுநருக்கும் அவரால் ஏற்படும் விளைவுகளுக்கும் உண்டு.

கொடுக்கப்படும் தகவல்கள் பெறுநரின் மனநிலையைப் பொறுத்து அமைய வேண்டும். அவர்கள் விரும்பும் நேரத்தில் அளிக்கப்பட வேண்டும். இல்லையெனில் நிகழ்ச்சிக்குப் போதுமான வரவேற்பு கிடைக்காமல் போய்விடக் கூடும்.

நேயர்கள் பெரும்பாலோரால் மறுக்கப்படும் 'அழகுக் குறிப்புகள்' தவிர்க்கப்பட வேண்டும். சிறுபான்மையோருக்காக இடம்பெற்றே ஆகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அவை 'அளவாக' இடம்பெறுதல் நலம்.

பிற நிலைய மகளிர் நிகழ்ச்சிகளின் நிறைவுக் கூறுகள் பரிசீலிக்கப்பட்டு மதுரை வானொலியிலும் சேர்க்கப்படுதல் நலம். இருக்கும் நிறையை மேலும் வளர்த்துக் கொண்டு செயல்படுதல் மிக முக்கியம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. ஆய்வு முடிவுகள்

மனிதனின் செயற்பாடுகளுள் மிக முக்கியமானது தகவல் தொடர்பு. ஆதலால் நாடு முழுமைக்கும் தகவல் தரவும், பல்வேறு நாடுகளுக்கு இடையேயான சுமுக உறவினைப் பேணவும், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், பத்திரிகை முதலான தகவல் தொடர்புக் கருவிகள் முனைந்து செயலாற்றி வருகின்றன.

பொதுவாகத் தகவல் தொடர்புக் கருவிகளால் அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல் ஆகிய பணிகள் ஆற்றப்படுகின்றன. தகவல் தொடர்புக் கருவிகளின் துணைப் பணிகளாகப் பண்பாட்டைப் பாதுகாத்தல், மக்களை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றைக் கூறலாம். இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு 'அறிவுறுத்தல்' பணி மிகவும் இன்றியமையாதது.

அகில இந்திய வானொலியின் தொடக்க கால நோக்கம், 'மக்களுக்குத் தகவல் அறிவித்தலில் வெற்றி பெறுவது' என்பதாகும். ஆனால் விடுதலைக்குப் பின்னர் இந்திய நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு வளர்ச்சிகள் அதன் நோக்கங்களாக மாறின.

பத்திரிகை, திரைப்படம் ஆகியன தனியாருடைமையாகி, அவர்தம் தற்சார்பைப் பெற்றுவிடுகின்றன. அந்நிலையில் வானொலியும் தொலைக்காட்சியும் அரசுடைமையாகவும், அரசின் திட்டக் கொள்கைப் பரப்பிகளாகவும் செயல்பட்டு வருகின்றன.

மதுரை வானொலியில் தனிப்பட்ட செய்தி ஒலிபரப்பு இல்லை. டெல்லி மற்றும் சென்னை வானொலி நிலையங்களின் செய்தி ஒலிபரப்புகளையே அஞ்சல் செய்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை வானொலியில் நண்பகல் ஒலிபரப்பும் வணிக விளம்பரங்களும் அண்மைக் காலமாக இடம் பெறுகின்றன. ஆய்வுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள மாறு-தல்கள் இவை.

சிறப்பு நேயர் நிகழ்ச்சிகளில், அவர்களுக்கான அடிப்படைச் சிக்கல்கள், அவற்றுக்கான தீர்வுகள், அவர்-களுக்கான ஆலோசனைகள் முதலியன வழங்கப்படு-கின்றன.

மதுரை வானொலியில் மகளிர் நிகழ்ச்சிகளாகத் 'தாய்வீடு', 'பூந்தோட்டம்' ஆகிய இரு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. அந்நிகழ்ச்சிகளில் பெண்களின் உரிமைகளும் கடமைகளும் எடுத்துரைக்கப்படுவதுடன் பிற நாட்டு மகளிர் நிலையும் பேசப்படுகிறது. தவிர, கால நிரப்பிகளாகவும் மகளிர்க்கான செய்திகள் தரப்-படுகின்றன.

மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் பெண் கல்வி, குழந்தை நலம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, உடல்நலம், சுயதொழில் முனைவு முதலிய பல பயனுள்ள உள்ளடக்கங்கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு உள்-ளடக்கமும் மகளிரின் நல்வாழ்வையும் முன்னேற்றத்தை-யும் நோக்கமாகக் கொண்டே அமைகிறது.

'சாதனை மகளிரைப்' பேட்டி கண்டு, அவர்களின் அநுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது சிறந்த உள்ளடக்கமாக மகளிரால் கருதப்படுகின்றது.

'அழகுக் குறிப்புகள்' என்ற உள்ளடக்கம் பெரும்-பாலான மகளிரால் ஏற்கப்படவில்லை.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் உரை, உரைச்சித்திரம், பேட்டி, கலந்துரையாடல் முதலிய கட்டுக்கோப்பான வடிவங்களும், நாடகம், பாடல், பட்டி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மண்டபம், பல்சுவை நிகழ்ச்சி முதலிய நெகிழ்ச்சியான வடிவங்களும் இடம்பெறுகின்றன.

நேயர்களால் நெகிழ்ச்சியான வடிவங்களே பெரும்பாலும் விரும்பப்படுகின்றன. எனினும், மதுரை வானொலி, தன் 'அறிவுறுத்தல்' பணியைக் கருத்தில் கொண்டு கட்டுக்கோப்பான வடிவங்களை அடிக்கடி கையாளுகிறது.

'பேட்டி' நிகழ்ச்சிகளில் சில சமயங்களில் கேள்விகளே மேலோங்கி விடுகின்றன. விடைகள் பின்தங்கி விடுகின்றன. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

கட்டுக்கோப்பான வடிவங்களுள் 'கலந்துரையாடலும்', நெகிழ்ச்சியான வடிவங்களுள் 'நாடகமும்' பெரும்பாலான மகளிரால் விரும்பப்படுகின்றன.

வானொலி, கேட்பதற்கு மட்டுமே உரிய சாதனம். எனவே அதில் 'மொழி' சிறந்துநின்று நேயர்களைக் கவர வேண்டியுள்ளது. பொதுவாகவே, வானொலியின் மொழிநடையில் கொச்சைச் சொற்களும் சிலேடைச் சொற்களும் தவிர்க்கப்பட வேண்டும். மக்களுக்குப் புரிய வேண்டும், என்ற நோக்கத்தில், வழக்கில் உள்ள பிறமொழிச் சொற்கள் சில கையாளப்படுவதில் தவறில்லை.

உரை, உரையாடல், உரைச்சித்திரம் ஆகியவற்றில் இடம்பெறும் தொடர்கள், சாதாரண வாக்கியங்களாக அமையவேண்டும்; அது குழப்பத்தைக் குறைத்துத் தெளிவைத் தரும்.

மதுரை வானொலி நிகழ்ச்சியில் பங்கேற்போருக்குக் குரல்வளம், அதில் ஏற்ற இறக்கம் ஆகியவற்றில் குறையில்லை. ஆனாலும் சிலருக்கு மட்டும் சில சொற்களை உச்சரிப்பதில் குறைபாடு இருந்து வருகின்றது. அக்குறை உள்ளவர்கள் மாற்றுச் சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் குறையை ஓரளவு தவிர்க்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் பொதுவாகத் தரமுயர்ந்த நிகழ்ச்சிகளே ஒலிபரப்பப்படுகின்றன. 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்றாற் போலச் சில சமயங்களில் தரத்தில் குறைந்த நிகழ்ச்சிகளும் இடம்பெற்று விடுகின்றன. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

தகவல் தொடர்பில் தகவலோ தருநரோ எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியத்துவம் பெறுநருக்கும் உண்டு. எனவேதான் பெறுநர் சார்ந்த ஆய்வுகள் அதிக அளவில் தற்காலத்தில் நடத்தப்படுகின்றன. மதுரை வானொலியிலும் அம்முறை உண்டு. எனினும், தகுந்த இடைவெளியுடன் அடிக்கடி நடத்தப்படவேண்டும். மக்களின் விருப்பு வெறுப்புகள் அப்போதுதான் நன்கு கணித்தறியப்படும்.

மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் 'நேர மாற்றம்' விரும்பப்படுகிறது. தொலைக்காட்சி மகளிர் நிகழ்ச்சி நடைபெறும் மாலை 6.10 முதல் 6-30 வரையிலான அதே நேரத்தில் வானொலி மகளிர் நிகழ்ச்சியும் அமைதல் கூடாது. நேரம் மாற்றப்பட வேண்டும். பெரும்பாலான நேயர்களின் விருப்பப்படி இரவு 7.00 மணிக்கு மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பினால் நல்லது.

மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளில் மகிழ்வித்தற் கூறுகள் மிகக் குறைவாக உள்ளன.

நகர்ப்புற மகளிர்க்கான நிகழ்ச்சி சமுதாயத்தையும், கிராமப்புற மகளிர்க்கான நிகழ்ச்சி குடும்பத்தையும் மையமாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

நிகழ்ச்சிகளில் இலக்கிய மொழிநடையை விடப் பேச்சுமொழிநடையே பெரும்பாலான வானொலி நேயர்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களால் விரும்பப்படுகிறது. அதற்குக் காரணம் அதன் எளிமையும் பொருள்தெளிவும் ஆகும்.

நேயர் கடிதங்களுக்கு மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகள் அதிக முக்கியத்துவம் தரவேண்டும். கடிதங்கள் படிக்கப்பட்டால் மட்டும் போதாது; பெரும்பாலான நேயர்கள் விரும்பும் அடிப்படையான மாற்றங்களை-மிக இன்றியமையாத மாற்றங்களை—மதுரை வானொலி செய்தாக வேண்டும். அப்போதுதான் நிகழ்ச்சிகள், நேயர்களின் ஆதரவைப் பெற முடியும்.

மதுரை வானொலியானது பிற நிலைய மகளிர் நிகழ்ச்சிகளுடன் தன் நிலைய மகளிர் நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்த்துத் தன் நிலைய நிகழ்ச்சிகளின் குறைகளை நீக்கிக் கொள்ளவேண்டும்; பிறநிலைய நிறைவுக் கூறுகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

'தாய்வீடு' நிகழ்ச்சி, அண்மைக்காலமாக வாரத்திற்கு ஒருமுறை என்பது மாறி, புதன் வெள்ளி என இரு முறையாக அதிகரித்துள்ளது. முன்பு 20 மணித்துளிகள் இடம்பெற்ற இது இப்போது 25 மணித்துளிகள் ஒலிபரப்பாகிறது. வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் மாறுதல் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு-1

மகளிர் நிகழ்ச்சிகள் பற்றிய வினா நிரல்

பெயர் : முகவரி :

பதவி : மாணவி/வீட்டுத் தலைவி/அரசு ஊழியர் / தனியார்துறை ஊழியர்/சுயதொழில் முனைவோர்.

மாத வருமானம் : ரூ. 500/-க்குள்/500-1000/1000-க்கு மேல்

வசிக்கும் இடம் : கிராமம்/நகரம்/கிராமிய நகரம்.

1. மதுரை வானொலி கேட்பதுண்டா?
   ஆம்/இல்லை
2. 'ஆம்' எனில் மகளிர் நிகழ்ச்சிகளைக் கேட்பதுண்டா?
   ஆம்/இல்லை
3. 'ஆம்' எனில் எந்த நிகழ்ச்சியைக் கேட்கிறீர்கள்?
   1. நகர்ப்புற மகளிர்க்கான நிகழ்ச்சி (தாய்வீடு) மட்டும்.
   2. கிராமப்புற மகளிர்க்கான நிகழ்ச்சி (பூந். தோட்டம்) மட்டும்.
   3. இரண்டும்.
4. மதுரை வானொலியில் மகளிர் நிகழ்ச்சிகள் வாரத்திற்கு 40 நிமிடம் மட்டுமே ஒலிபரப்பப்படுகின்றன. நேரம் போதுமா?
   போதும்/போதாது
5. 'போதாது' எனில் ஏன்?
   உள்ளடக்கங்கள் மிகுதி/மதுரை வானொலி, மகளிருக்கு அளிக்கும் முக்கியத்துவம் குறைவாக உள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. டி.வி. யிலும் அதே நேரத்தில் மகளிர் நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுவது தடையாக உள்ளதா?
ஆம்/இல்லை.
7. 'ஆம்' எனில் மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிக்கென எந்த நேரத்தை விரும்புகிறீர்கள்?
காலை --- --- / மாலை --- ---.
8. டி.வி. மனைமாட்சியைப் புறக்கணித்துவிட்டு மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சியைக் கேட்பதுண்டா?
ஆம்/இல்லை
9. 'ஆம்' எனில் ஏன்?
10. 'இல்லை' எனில் ஏன்?
11. நகர்ப்புற மகளிர் நிகழ்ச்சிக்கும், கிராமப்புற மகளிர் நிகழ்ச்சிக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா?
ஆம்/இல்லை
12. 'ஆம்' எனில் எவ்வகையில் வேறுபாடு என்று கருதுகிறீர்கள்?
உள்ளடக்கம்/சொல்லும் விதம்.
13. உள்ளடக்கத்தில் ஏதாவது மாற்றம் செய்ய விரும்புகிறீர்களா?
ஆம்/இல்லை
14. 'ஆம்' எனில் என்ன மாற்றத்தை விரும்புகிறீர்கள்?
15. மகளிர் நிகழ்ச்சியில் கொடுக்கப்படும் வடிவங்களுள் எவ்வெவ் வடிவத்தை விரும்புகிறீர்கள்? எண் இட்டு வரிசைப்படுத்துக,

உரை	( )
உரைச்சித்திரம்	( )
பேட்டி	( )
கலந்துரையாடல்	( )
நாடகம்	( )
பாடல்	( )

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டிமண்டபம் ( )
பல்சுவை நிகழ்ச்சி ( )

16. நிகழ்ச்சியில் கொடுக்கப்படும் பாடல்களுள் எவ்வகைப் பாடலை விரும்புகிறீர்கள்? எண் இட்டு வரிசைப்படுத்துக.

மெல்லிசைப்பாடல் ( )
திரைப்படப்பாடல் ( )
நாட்டுப்புறப்பாடல் ( )

17. மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் மொழி நடை பற்றிய உங்கள் கருத்தினை (√) செய்து தெரிவிக்க.

	உச்சரிப்பு	ஏற்ற இறக்கம்	குரல்வளம்
பிடிக்கிறது			
பிடிக்கவில்லை			

18. மகளிர் நிகழ்ச்சி கேட்டுவிட்டு மதுரை வானொலி நிலையத்துக்குக் கடிதம் எழுதியதுண்டா?

ஆம்/இல்லை

19. 'ஆம்' எனில் இதுவரையில் ஏதாவது பலன் இருந்ததுண்டா?
கடிதம் வாசிக்கப்பட்டது/கடிதத்தின்படி நிகழ்ச்சியில் மாறுதல் செய்யப்பட்டது.

20. பிற நிலைய 'மகளிர் நிகழ்ச்சி'களைக் கேட்பதுண்டா?

ஆம்/இல்லை

21. 'ஆம்' எனில் பிற நிலைய மகளிர் நிகழ்ச்சிகளினின்று மதுரை வானொலியின் நிகழ்ச்சிகள் எவ்வகையில் வேறுபடுகின்றன?

22. மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சி பற்றிய உமது சொந்தக் கருத்து ஏதாவது இருப்பின் தெரிவிக்க.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு - 2

நிகழ்ச்சித் தயாரிப்பாளருடன் ஒரு பேட்டி

பேட்டி காண்பவர் : நூலாசிரியர்
பேட்டி தருபவர் : திரு.கே. துரைசாமி ('தாய்வீடு' நிகழ்ச்சித் தயாரிப்பாளர்)
நாள் : 12-4-91.
இடம் : மதுரை வானொலி நிலையம்

1. மதுரை வானொலியின் ஒலிபரப்பு எந்த நாளில் தொடங்கியது ?

1987-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6-ஆம் நாள் மதுரை வானொலியின் ஒலிபரப்பு தொடங்கியது. மதுரை வானொலியில் முதலில் மாலை ஒலிபரப்பு மட்டுமே நடைபெற்றது. சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு தான் காலை ஒலிபரப்பும் இடம் பெற்றது.

2. தமிழ்நாட்டிலுள்ள ஒலிபரப்பு நிலையங்கள் எத்தனை? எவையெவை?

தமிழ்நாட்டில் ஆறு நிலையங்களும் பாண்டிச்சேரி-யில் ஒரு நிலையமுமாக மொத்தம் ஏழு நிலையங்கள் உள்ளன. அவை : மதுரை, சென்னை, திருச்சி, திருநெல்-வேலி, கோயம்புத்தூர், நாகர்கோவில், பாண்டிச்சேரி என்பனவாகும்.

3. மதுரை வானொலி நேயர்களின் மொத்த எண்ணிக்-கை யாது?

மதுரை வானொலியின் ஒலிபரப்பு மதுரை நகருக்கு மட்டுமன்றி இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திரு-மகனார், திண்டுக்கல் அண்ணா, காமராசர் ஆகிய மாவட்டங்களுக்கும் கிடைக்கிறது. அப்படிப் பார்க்கையில் 1990-ஆம் ஆண்டு நேயர் கணக்கெடுப்பின்படி மதுரை வானொலி நேயர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 78 இலட்சம் ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. வளர்ச்சி நிகழ்ச்சிகளுக்கு மதுரை வானொலி ஒதுக்கும் நேர அளவு யாது?

பொதுவாகத் திரையிசை முதலான பொழுது போக்கு நிகழ்ச்சிகள் தவிர உள்ள ஏனைய நிகழ்ச்சிகள் அனைத்துமே வளர்ச்சி நிகழ்ச்சிகளாகத் தான் அமைகின்றன. மதுரை வானொலியின் மொத்த ஒலிபரப்பு சுமார் ஒன்பது மணி நேரம். அதில் சுமார் ஆறரை மணி நேரம் வளர்ச்சி நிகழ்ச்சிக்கான நேரம் எனலாம்.

5. மொத்த ஒலிபரப்பில் இசை, உரை முதலான கூறுகளில் சதவிகிதம் யாது?

இசை 60 சதவிகிதமும் உரை முதலான கூறுகள் 40 சதவிகிதமும் இடம் பெறுகின்றன. வானொலி, கேட்பதற்குரிய கருவியாதலின் பொதுவாக எல்லா வானொலியிலும் 'இசை' வடிவமே அதிகமாகக் கையாளப் படுகின்றது.

6. மதுரை வானொலியில் மகளிர் நிகழ்ச்சிகள் எப்போது தொடங்கின?

1989-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ஆம் நாள் மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகள் தொடங்கின.

7 என்ன பெயரில் தொடங்கின?

இப்போதுள்ள 'தாய்வீடு' மற்றும் 'பூந்தோட்டம்' ஆகிய பெயர்களில்தாம் தொடங்கின.

8. எந்த நேரத்தில் ஒலிபரப்பாயின?

'தாய்வீடு' நிகழ்ச்சியானது ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 6-45 முதல் 7-00 மணிவரை ஒலிபரப்பாகியது 'பூந்தோட்டம்' நிகழ்ச்சி பற்றி எனக்கு முழுவதுமாகத் தெரியவில்லை.

9. சரி, தாய்வீடு நிகழ்ச்சி பற்றி மட்டும் உங்களிடம் கேட்கிறேன். தாய்வீடு நிகழ்ச்சிக்கான நேர அதிகரிப்புக்கு வாய்ப்பு உள்ளதா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்பு 15 நிமிடம் இருந்த இந்நிகழ்ச்சி கடந்த ஓராண்டுக் காலமாக 20 நிமிடங்களாக அதிகரித்துள்ளது. இப்போதுள்ள சூழ்நிலையில் மேலும் 5 நிமிடங்கள் அதிகரிக்கப்படலாம்.

10. மகளிர் நிகழ்ச்சி புதிதாக இன்னொன்று உருவாக வாய்ப்பு உள்ளதா?

இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது. அநேகமாக இன்னும் ஓராண்டில் மூன்றாவதாக இன்னொரு 'மகளிர் நிகழ்ச்சி' வரக்கூடும்.

11. மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகள் பிற நிலைய மகளிர் நிகழ்ச்சிகளினின்று எவ்வகையில் வேறுபடுகின்றன?

இன்ன வகையில் வேறுபடுகின்றன என்று குறிப்பிட்டுக் கூறமுடியாது. ஆனால், மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் 99 சதவிகிதம் பெண்களே இடம் பெறுவது சிறப்பு. ஏனெனில் தம்மைப்பற்றித் (மகளிர் குலத்தைப் பற்றி) தாமே அலசி ஆராய்வதுபோல் ஒரு சுயவிமரிசனப் போக்கு இதில் அதிகரிக்கிறது.

12. தாய்வீடு நிகழ்ச்சி பற்றிக் கடிதங்கள் வருவதுண்டா?

கணிசமான அளவில் வந்து கொண்டிருக்கின்றன.

13. கடிதத்தின்படி நிகழ்ச்சியில் மாறுதல்கள் செய்ததுண்டா?

பொதுவாகவே நேயர்களுடன் கலந்து பேசித்தான் நிகழ்ச்சியை உருவாக்குகிறோம். அதனால் நிகழ்ச்சியில் பெரிய மாற்றங்கள் எவையும் இதுவரை செய்யப்பட்டதில்லை.

14. உள்ளடக்கத்தில் இனி ஏதேனும் மாற்றம் செய்யப்படுமா?

மாற்றமே வாழ்க்கை. தேவைக்குத் தக்க மாற்றங்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள் வரும். மகளிர்க்கேற்ற உள்ளடக்கங்கள் இன்னும் அதிகமாக இடம்பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15. தாய்வீடு நிகழ்ச்சியில் இப்போது கொடுக்கப்படும் வடிவங்களுள் எவ்வடிவம் அதிகமாக விரும்பப்படு-கிறது?

கலந்துரையாடல் வடிவம் தான் மகளிரால் மிக அதிகமாக விரும்பப்படுகிறது.

16. அப்படியெனில் கலந்துரையாடல் வடிவத்தில் அதிக-மாக நிகழ்ச்சிகள் தருகிறீர்களா?

அப்படித் தந்துவிட முடியாது. ஏனெனில் கலந்-துரையாடல் எனில் குறைந்த அளவு மூன்றுபேர் தேவைப்படுகின்றனர். மேலும், அவர்களுக்கு ஊதியம் தர வேண்டியுள்ளது. அதனால் அந்நேரத்தின் நிதிநிலைமையைப் பொறுத்துக் கலந்துரையாடல் வடிவம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. தவிர, பல்சுவையும் தரவேண்டியிருப்பதால் அவ்வப்போது பிற வடிவங்-களையும் கையாள வேண்டியதாகிறது.

17. மதுரை வானொலியில் பயன்படுத்தப்படும் மொழி-நடை பற்றி உங்கள் கருத்து என்ன?

பொதுவாக மதுரை வானொலியில் பேச்சு வழக்கு நடையே கையாளப்படுகிறது. குரலைப் பொறுத்த-வரையில் பங்கேற்பாளர்கள் முதலில் பேசும்போது சற்று நடுங்கி விடுகிறார்கள். பிறகு சமாளித்துக் கொள்கிறார்கள். ஏற்ற இறக்கங்கள் குறைசொல்லும்-படி இல்லை.

ஆனால் உச்சரிப்புத்தான் சற்றுத் திருந்த வேண்டி யுள்ளது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை-யில் சிறப்பு 'ழகரம்' சற்றுத் தகராறு செய்கிறது. அதுவும் சிலருக்குத்தான் இந்நிலை. இந்நிலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாறினால் மொழிநடை மேலும் சிறக்கும் வாய்ப்பு உண்டு.

18. மதுரை வானொலியின் மகளிர் நிகழ்ச்சிகளில் மகிழ்வுக்கூறுகள் மிகக்குறைவாகவே தரப்படுகின்றன என்று ஒரு குற்றச்சாட்டுக் கூறப்படுகிறதே, அது-பற்றி உங்கள் கருத்து யாது?

உண்மை தான். மகிழ்வுக்கூறுகள் மிகக் குறை-வாகவே தரப்படுகின்றன. ஆனால் இன்னும் சிறிது காலத்தில் சிறுகதை, நாடகம், உரைச்சித்திரம் முதலான வடிவங்கள் அதிகமாகக் கையாளப்படவிருக்கின்றன.

ஆனால் இப்போதே கூட இக்குறை நீங்க, அவ்வப்-போது மகளிர் நிகழ்ச்சிகளில் திரைப்படப்பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. பேட்டி, பட்டிமண்டபம் போன்ற வடிவங்களில் நகைச்சுவையான உரை-யாடல்கள் இடம் பெற்று வருகின்றன.

19. மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் நோக்கங்-கள் எவை என்று கூற முடியுமா?

'ஆணுக்குப் பெண்ணிங்கு இளைப்பில்லை' என்று-மகளிரே உணர வேண்டும்; தன்னம்பிக்கையையும் அந்நம்பிக்கையைச் செயலாற்றும் ஊக்கத்தையும் அவர்கள் பெற வேண்டும்; சமுதாயத்தில் தாமும் சரிபாதி அங்கம் வகிக்கிறோம் என்று அவர்கள் அறிந்து செயலாற்ற வேண்டும் என்பவையே மதுரை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளின் நோக்கங்கள் ஆகும்.

20. மதுரை வானொலியில் மதிய ஒலிபரப்பு எப்போது வரும்?

கூடிய விரைவில் வந்துவிடும். அதற்கான ஏற்பாடு-கள் நடந்து வருகின்றன. அப்படி வரும்போது மகளிர்க்காக இன்னொரு முழு நிகழ்ச்சியேகூட ஒதுக்கப்படும். மகளிர் விரும்பும் நேரத்திற்கு மகளிர் நிகழ்ச்சிகள் மாற்றப்படும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு-3

கலைச்சொல் - விளக்கம்

அட்டவணைக் கட்டண விகிதம் (Card rate) : விளம்பர இடம் / காலத்திற்கு அதன் சாதனத்தார் குறித்துள்ள பட்டியல் விலை.

அதிகரிப்பு அல்லது பெருக்கம் (Promotion) : விளம்பர மல்லாத பிற சாதனங்களின் வாயிலாகப் பண்டங்களை/ பணியைப் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் செய்தி வடிவங்கள்.

'ஆயிரத்திற்கு விலை' (Cost per thousand) : ஒரு விளம்பரச் செலவை மதிப்பிடும் முறை. ஒரு விளம்பரத்தைப் படித்தவர் / பார்த்தவர் /கேட்டவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, ''அந்த விளம்பரச் சாதனத்தின் மூலமாக ஆயிரம் பேர் அதனை அறிவதற்கு ஆன செலவு இவ்வளவு'' எனக் காணும் தொகை.

ஆய்வுச் சோதனை (Inquiry test) : நேயர்களால் நிரப்பி அனுப்பப்படும் சோதனைத் தாள்களை ஆராய்ந்து, விளம்பரங்களை அல்லது விளம்பரச் சாதனங்களை ஒப்பிட்டுக் காணும் முறை.

அறிவிப்பு (Announcement) : ஒரு நிமிடமும் அதற்குக் குறைவாகவும் உள்ள ஸ்பாட் விளம்பரம்.

அறிவோர் திரள் (Cumulative audience) : ஒரு விளம்பரத் தொடரின் தொடர்ந்த வெளியீடுகளை / ஒலிபரப்புகளை/ ஒளிபரப்புகளை அறிந்த மக்களின் மொத்த எண்ணிக்கை.

ஆழ்ந்த பேட்டி (Depth interview) : பேட்டி ஆய்வு முறைகளில் ஒன்று. பேட்டி காண்பவர் வினாக்களை முன்னதாக வகுத்துக் கொள்ளாமல், பேட்டியாளரது விருப்பம்போல் கருத்துகளை வெளியிட ஊக்குவிக்கும் முறை. இது பேட்டியாளருடைய மன ஆழத்திலுள்ள கருத்து வெளிப்பட வாய்ப்பளிப்பது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இழையறுதல் (Chain break) : ஒரு நெட் வொர்க் ஒலி/ஒளிபரப்பு முடிந்ததன் பின்னரும் - வட்டார ஒலி/ஒளிபரப்பு உயிர் பெறுவதன் முன்னரும் - உள்ள சிறு இடைவெளி. (இந்தஇழையறுதல் நேரத்திலும் நெட்வொர்க் விளம்பரம் வெளியாவதுண்டு.)

உதவியின்றி நினைவு கூர்தல் (Unaided recall) : பேட்டி எடுப்பவர் முற்குறிப்பு எதுவும் தந்து உதவாமலே, நேயர் தாம் கண்ட / கேட்ட விளம்பரத்தை நினைவு கூர்ந்து சொல்லுதல்.

உதவியுடன் நினைவு கூர்தல் : (Aided recall) : குறிப்பிட்டதொரு விளம்பரத்தை நினைவு கூர்வோர் பற்றி அறிவதற்காக மேற்கொள்ளும் சோதனை முறை. பேட்டி காண்பவர் முற்குறிப்பு தந்து வினாக்கள் தொடுக்க நேயர் நினைவு கூர்வதைக் குறிப்பது.

ஒட்டுகள் (Adjacencies) : குறிப்பிட்டதொரு நிகழ்ச்சிக்கு முன்னும் பின்னும், ஒட்டியதாக அமைகின்ற சிறிய அறிவிப்புகள், விளம்பரங்கள்.

ஒத்தநேரக் கணக்கெடுப்பு (Coincidental Survey) : வானொலி, தொலைகாட்சியில் நிகழ்ச்சி நடக்கும்போதே நேயரைப் பேட்டி கண்டு கருத்தறியும் முறை. பொதுவாக, தொலைபேசி மூலம் நிகழ்த்தப்படுவது இது.

ஒலிபரப்புப் பதிவு (Air Check) : தமது கோப்புப்பிரதி (File Copy)யாக வைத்துக்கொள்ளப்படும் ஓர் ஒலிபரப்பின் ஒலிப்பதிவுச் சுருள்.

கிடைக்கும் தன்மை (Availability) : விளம்பரமொன்றை அச்சிட / ஒலிபரப்ப / ஒளிபரப்பக் கிடைக்கின்ற இட/கால அளவு.

குரல் ஒத்திகை (Audition) : ஒரு நிகழ்ச்சித் தயாரிப்பின்போது, குரல், நடிப்பு முதலான திறங்களைச் சோதித்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குரல் ஒலிப்பதிவு (Dubbing) : ஒளிப்பதிவு செய்து எடுத்த திரைப்படக்காட்சியின்மீது, அக்காட்சிக்கான குரலையோ இசையையோ, பதிவு செய்தல்.

கேட்பு (Audio) : ஒரு நிகழ்ச்சியில் இடம்பெறும் குரல் கருவியிசை ஒலிகள் கொண்ட ஒலிப்பகுதி,

கேட்போர் அட்டவணை (Loyalty Index) : குறிப்பிட்டதொரு நிலைய நிகழ்ச்சியைக் கேட்கும்/பார்க்கும் நேயர்களது எண்ணிக்கையை வகைபிரித்துக் காட்டும் பட்டியல்.

சில்லறை விளம்பரம் (Retail Advertising) : வட்டாரத்தின் செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சியில் இடம் பெறும் விளம்பரம். பொது(தேசிய) விளம்பரத்தினும் இது குறுகிய பரப்புடையது.

சைகை (Cue) : நடிக்கவோ, பேசவோ, பாடவோ-தொடங்கச் சரியான கட்டத்தை அக்கலைஞருக்கு அறிவிக்கும் (இயக்குநரின்) கையசைப்பு.

தயாரிப்பு (Production) : 1. விளம்பரத் துறையில் ஒருவர் தம்கருத்தை அச்சு, ஒளிபரப்பு, ஒலிபரப்பு வடிவில் கொண்டு வருவது. 2. விளம்பர நிறுவனத்தில் பிரிவு-களில், அச்சு/ஒலி/ஒளி முறைக்கு ஏற்றதாக விளம்பரத்தை ஒழுங்குபடுத்தும் பகுதி.

தயாரிப்பு உரிமை (Patent) : ஒரு தயாரிப்பாளர்/கண்டு பிடிப்பாளர் தம் பொருளுக்கு அரசுமூலம் சட்டப்படிப் பெறும் உரிமைப்பாதுகாப்பு,தயாரிப்புக்குறி,விளம்பரப்பண் (Slogan) முதலிய அனைத்துக்கும் இது பொருந்தும்.

தனிநிலை நிலையம் (Independent Station) : தேசிய ஒளி-பரப்பாகிய 'நெட்வொர்க்'குடன் இணைப்புப் பெறாத ஒரு தொலைக்காட்சி நிலையம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாங்கும் சக்தி (Holding Power) : ஒரு விளம்பரச் சாதனத்தைத் திருப்பிய நேயர் அதன் ஒரு நிகழ்ச்சியை எவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்கிறார்/பார்க்கிறார் என்ற அளவு.

தாமதஒலிபரப்பு (Delayed Broadcast) : ஒரு நிகழ்ச்சியின் நேர் ஒலிபரப்பு (Live broadcast) முடிந்தபிறகு, இதன் பதிவுநாடாவை ஒலிபரப்புதல்; ஒளிபரப்பிற்கும் இது ஒக்கும்.

திருப்புதல் (Turnover) : ஒரு கால எல்லையில், குறிப்பிட்டதொரு நிகழ்ச்சிக்காகத் தொலைக்காட்சி/வானொலிப் பெட்டியைத் திருப்புவோர் சதவிகிதம்.

தீவுக்கட்டம் (Island Position) : 1. தலையங்கப் பக்கத்து விளம்பரம். மற்ற விளம்பரங்களின் நடுவில் வைக்காமல், படிப்பவர் கவனத்தைக் கவ்வியிழுக்கத் தலையங்கம் வெளியாகும் பக்கத்தில் தனியாக வைக்கப்படுவது.

2. ஒலிபரப்பு/ஒளிபரப்பின்போது மற்ற விளம்பரங்களோடு கலவாமல்; நிகழ்ச்சியின் முன்னோ பின்னோ இடம்பெறும் விளம்பரம்.

(நிகழ்ச்சிக்) கட்டு (Package) : கருத்து, உரையாடல், இசை முதலான கலைத்திறத்துடன் வழங்கப்படும் ஓர் ஒலி/ஒளிபரப்பு நிகழ்ச்சி; கட்டணம் பெற்றுக்கொண்டு செய்யப்படுவது.

நிகழ்ச்சி நேயர் கணக்கெடுப்பு (Program Delivery) : குறிப்பிட்டதொரு நேரத்தில் ஒரு நிலையத்தின்/நிகழ்ச்சியின் நேயர்களைக் கணக்கிடுதல்.

நூலகப் பிரதி (Library shot) : படச்சுருளின் பழைய பிரதி. ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பின்போது, தேவையான ஒரு காட்சியைப் பழைய படச்சுருளிலிருந்து எடுத்துப் பயன்படுத்துவது. இந்நிலையில் எல். எஸ். என்றோ, எஸ். எஸ். என்றோ மூலையில் குறித்துக் காட்டுவது வழக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெட்வொர்க் (Network) : பல்வேறு தொலைக்காட்சி/ வானொலி நிலையங்களிலிருந்தும் ஒரே நேரத்தில் வெளியாகுமாறு ஏற்பாடு செய்த நிகழ்ச்சி அமைப்பு.

நேயர்கள் (Audience) : 1. ஒரு விளம்பரம் அல்லது விளம்பரச் சாதனத்தின் வாயிலாகச் செய்தியைப் பெறும் மக்கள் தொகுதி.

2. மேடை நிகழ்ச்சி, வானொலி, தொலைக்காட்சி மூலமாகச் செய்தியை அறிவோர்.

நேயர் குறிப்பேடு (Listeners' Diary) : நேயர்கள் தாம் காணும்/கேட்கும் நிகழ்ச்சசிளைப் பற்றித் தொடர்ந்து எழுதி வைக்கும் குறிப்பேடு. (இது தொடர்பான ஆய்வும் இப்பெயர் பெறும்).

நேயர் தொகுதி (Reach) : குறிப்பிட்டதொரு சாதனத்தால் ஒரு நிகழ்ச்சி அல்லது விளம்பரத்தை, ஒரு கால எல்லைக்குள் கேட்கும்/பார்க்கும் பல்வேறுபட்ட மக்கள் பற்றிய கணக்கு.

நேயர் பங்கு (Share of audience) : குறிப்பிட்டதொரு நிலையத்தின்/நெட்வொர்க்கின் நிகழ்ச்சி நடக்கும்போது மீட்டப்படும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் சதவீதம்.

நேரடிப் பதிவு (Direct Recording) : ஒரு திரைப்படக் காட்சியின் ஒளிப்பதிவையும், அதற்கேற்ற ஒலிப்பதிவையும், ஒரே நேரத்தில் செய்வது.

நேரப்பொறுப்பாளர் (Time buyers) : ஓர் ஒலிபரப்பு/ஒளிபரப்பு நிறுவனத்திடம் 'நேரத்'தை வாங்கவும், அந்நேரத்திற்குரிய நிகழ்ச்சியை நிரப்பவும் பொறுப்பேற்றுள்ள ஒரு (விளம்பர நிறுவன) அதிகாரி.

பறைசாற்றுதல் (Publicity) : பிரசாரத்தின் ஒரு வகை. ஒரு தகவல் சாதனத்தின் மூலமாக ஒரு நிகழ்ச்சி/நிறுவனம் பற்றி வெளியிடப்படும் செய்தி, கருத்து, கதை, இசை, நாடகம் - எந்த வடிவிலும் வெளியாவது இது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரதிநிதி (Representative, Rep) : ஒரு தகவல் சாதனத்தின் சார்பாளர். பேச்சுவழக்கில், உற்பத்தி, விற்பனை - நிறுவனச் சார்பாளரையும் குறிக்கும்.

பின்னணி இசை (Background music) : மேடை நிகழ்ச்சியில் அல்லது, ஒளிபரப்பில் அதனை உயிரோட்டமுள்ளதாக்கப் பயன்படுத்தும் இசை. நேரடியாகவோ முன்பதிவு செய்தோ இசைக்கப்படலாம். குரல், கருவியிசை, பறவையொலி எவ்வடிவிலும் இது இருக்கலாம்.

பொதுக்கலப்பு நிகழ்ச்சி (Syndicated program) : நெட்வொர்க் அல்லாத-ஆனால்இரண்டுக்குமேற்பட்ட-வட்டாரத் தொலைக்காட்சி நிலையங்களுக்குப் பொதுவில் விற்கப்படும் நிகழ்ச்சி/விளம்பரம்.

பொதுமக்கள் தொடர்பு (Public relations) : ஒருவர் அல்லது ஒரு நிறுவனம் பற்றிய நல்லெண்ணத்தையும் மதிப்பையும் மக்களிடம் பெருக்கவும் நிலைநிறுத்தவும் அமைக்கப்படும் தகவல் பிரிவு. இதற்குப் பொறுப்பேற்பவர் பொதுமக்கள் தொடர்பு அலுவலர்.

பொது விளம்பரம் (General advertising) : தேசிய (நாடு தழுவிய) விளம்பரம். மொத்த விளம்பரம் என்றும் வழங்கும். வட்டார விளம்பரம் போலன்றி நாடு முழுமைக்குமாகச் செய்யப்படுவது.

முக்கிய நேரம், முதன்மை நேரம் (Prime time) : தொலைக்காட்சியை மிக அதிகமான பேர் பார்க்கும் நேரம். (பெரும்பாலும் மாலை நேரம்.) விளம்பரதாரர் தம் விளம்பரத்தை வைக்க விரும்பும் நேரம் இதுவே.

ரோஸ்டர் நினைவு கூர்தல் (Roster recall) : நேயர்களின் நினைவில் நிகழ்ச்சிகள் இடம்பெறும் வரிசைத் தன்மையை அறிவதற்காக, வானொலி/தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் பட்டியலைக் கொடுத்து ஆய்வு செய்யும் முறை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளம்பரச் சாதனம் (Advertising medium) : ஒரு விளம்பரச் செய்தியை நேயர்களுக்கு வழங்கப் பயன்படுகின்ற வாயில். அச்சு, வானொலி, தொலைக்காட்சி, போர்டு, பலூன், சரவிளக்கு — முதலாகப் பலவகைப்படும்.

விளம்பர டெலிவரி (Commercial Delivery) : குறிப்பிட்டதொரு விளம்பரத்தை உண்மையில் கேட்டவர் பார்த்தவர் தொகை.

விளம்பர வெளிப்பாட்டுச் செறிவு (Commercial exposure potential) : வானொலி அல்லது தொலைக்காட்சி மூலமாக வெளியாகும் விளம்பரம், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் எத்தனைப் பெட்டிகள் மூலம் வெளியாயிற்று என்று அறியும் தகவல். (எ-டு) அவ்வட்டாரத்தில் உள்ள ஒரு லட்சம் பெட்டிகளில், அந்நேரத்தில் 70,000 பெட்டிகளே மீட்டிப்பட்டன (Tuned) என்று கணக்கிடல்.

வெளியீடு (Release) : பொதுமக்கள் தொடர்புச் சாதனத்தின் வாயிலாகத் தம்து அச்சு, ஒலி, ஒளித் தயாரிப்பைச் சட்டபூர்வமான அனுமதியுடன் ஒருவர் பொதுமக்களுக்கு வழங்குதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு – 4

துணைநூற் பட்டியல்

குருசாமி, மா. ப., — இதழியல் கலை. குரு-தேமொழி, திருச்செந்தூர், 1988.

சக்திமைந்தன் — வானொலிக்கு எழுத வேண்டுமா? மரங்காடு பிரசுரம், சென்னை, 1986.

சசிரேகா, சிவ., — தமிழ் இதழ்கள் காட்டும் மகளிர் நிலை, பார்த்திபன் பதிப்பகம், மதுரை, 1988.

நீதிவாணன், ஜெ., — நடையியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983.

முத்துக்காளத்தி, மு., — மக்கள் தொடர்புக்கலை, கண்ணம்மாள் பதிப்பகம் சென்னை 1985.

ராசையா, யூ., — ஒலிபரப்புக் கலை, பிரதிபா பிரசுரம், சென்னை 1985.

ராஜசிம்மன், ஏ., — ஒலிபரப்பு ஓர் அறிமுகம் செங்கமலம் பதிப்பகம், திண்டுக்கல் 1985.

விநாயகமூர்த்தி, அ., — விளம்பரக்கலை, பாலமுருகன் பதிப்பகம், 258, பாரதியார் தெரு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை, 1989

ஜான் லோப்பஸ், எஸ்.ஏ.எல். — மக்கள் தொடர்புக் கலை நர்மதா பதிப்பகம், சென்னை, 1988.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வேடுகள்

இராசசேகரன், — **மதுரை நகர வானொலி நேயர்கள்** தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1990.

இராமலட்சுமி, மு., — **மக்கள் தகவல் தொடர்பில் வானொலி (மகளிர் நிகழ்ச்சிகள்)** தமிழ்த் துறை, ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, 1988.

நடராசன், மு., — **சிற்றூர் வானொலி கேட்குநர்,** தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 1990.

பரமேஸ்வரி, கு., — **வானொலிச் செய்தி அறிக்கை,** தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1990

பொன்னுச்சாமி, இ , **வானொலி, தொலைக் காட்சி விளம்பரங்கள் ஓர் ஒப்பீடு,** தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1990.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Banik, G.C., — **A Guide to Public Relations & Journalism,**
Progressive Writers Combine, Bombay, 1990.

Dahama, O P., — **Education and Communication for Development,**

Bhatha-ar, O.P., I.B.H. Publishing Company Pvt. Ltd, OXford.

Kumar, Keval J., — **Mass Communication In India,**
Jaico publishing House, Bombay, II Edition, 1987.

Kuppuswamy, B, — **Communication and Social Development In India,**
Media Promoters and Publishers pvt. Ltd.
Bombay, II Edition, 1984.

Luthra, H R., — **Indian Broadcasting,**
Ministry of Information and Broadcasting,
Govt. of India, New Delhi.

— — **Radio and T.V. Journalism,**
Sterling Publishers Pvt. Ltd., New Delhi.

"Presented Free of Cost
with compliments from the
Central Institute of Indian Languages
(Govt. of India) MYSORE-570 006"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாக்டர் அ. விநாயகமூர்த்தி

சமயம்

1. சைவ இலக்கியக் கோவை
2. சித்தாந்தமும் பக்தியிலக்கியமும்
3. சைவ சமயத்தேன்

100037

பதிப்பியல்

4. பதிப்புக் கலை
5. பதிப்புப் பார்வைகள்

மூலபாடப்பதிப்பு

6. மூலபாட ஆய்வியல்
7. மதுரை வீரன் அம்மானை
8. ஐவர் அம்மானை
9. காசி கேதாரீசுவரர் தல மான்மியம் (இணைப்பதிப்பாசிரியர்)

வணிகவியல் - இதழியல்

10. விளம்பரக்கலை

வி. அருணா, எம்.ஏ.எம்.ஃபில்
மக்கள் தொடர்புத்துறை

11. மக்கள் தொடர்புப் பிரச்சினைகளும் தீர்வுகளும்

வி. அநுராதா, எம்.ஏ.எம்.ஃபில்
தகவல் தொடர்பியல்

12. வானொலியும் மகளிர் நிகழ்ச்சிகளும்

பாலமுருகன் பதிப்பகம்
258, பாரதியார் தெரு, ஜெய்ஹிந்த்புரம்
மதுரை-625 011

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY

	Signature	Date
	1.2.95	
	विजेन्द्र सिंह 8/12/95	
E A R.		
Any other		
Checked		

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்கள் வெளியீடுகள்

டாக்டர் அ. விநாயகமூர்த்தி

சமயம்

1. சைவ இலக்கியக் கோவை — 6-00
2. சித்தாந்தமும் பக்தியிலக்கியமும் — 12-00
3. சைவ சமயத் தேன் — 17-00

பதிப்பியல்

4. பதிப்புக் கலை — 10-00
5. பதிப்புப் பார்வைகள் — 32-00

மூலபாடப் பதிப்பு

6. மூலபாட ஆய்வியல் (கட்டுரைகள்) — 10-00
7. மதுரை வீரன் அம்மானை — 9-00
8. ஐவர் அம்மானை — 22-00
9. காசி கேதாரீசுவரர் தல மான்மியம் (இணைப்பதிப்பாசிரியர்) — —

வணிகவியல் - இதழியல்

10. விளம்பரக்கலை — 50-00

வி. அநுசூயா, எம்.ஏ.,எம்.ஃபில்.

மக்கள் தொடர்புத்துறை

11. மக்கள் தொடர்புப் பிரச்சினைகளும் தீர்வுகளும் — 14-00

வி. அநுராதா, எம்.ஏ.,எம்.ஃபில்.

தகவல் தொடர்பியல்

12. வானொலியும் மகளிர் நிகழ்ச்சிகளும் — 14-00

பாலமுருகன் பதிப்பகம்

258, பாரதியார் தெரு, ஜெய்ஹிந்த்புரம்

மதுரை - 625 011

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar